மதனவித்தாரமாலை

T 4232.

கழக வெளியீடு: ககஉ

கடிகை முத்துப்புலவர்

இயற்றிய

மதனவித்தாரமாலை

தஞ்சை, திரு. சு. இராமச்சந்திரன், பி.ஏ.,

அவர்கள் எழுதிய

ஆராய்ச்சி முன்னுரை, குறிப்புரைகளுடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

First Edition: April, 1958.

MATHANAVITHARAMALAI

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1000

பதிப்புரை

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி வழங்கும் நம் நாட்டின் மக்கள் அறிவைப் பெருக்குதற்கும் மொழியுணர்ச்சியை யூட்டுதற்கும் தகுதி வாய்ந்தவை செந்தமிழ் மொழியின் முந்தையோர் இயற்றிய இலக்கணம் இலக்கியமாகிய நூல்களே. இலக்கணம் மொழிப் புலமை முற்றிய அறிஞராற் கற்பிக்கப்பட்டாலன்றி மக்கள் தாமே படித்துப் பயன் காணுதற்கு உரிய நூல் அன்று. இலக்கியங்களோ அங்ஙனமன்றி எஞ்ஞான்றும் எடுத்துப் படித்து எல்லா மக்களும் பொருள் கண்டு இன்புற்று வாழ்வதற்கு வழிகாட்டியாக அமைந்து திகழ்வனவாம். அவற்றைப் பேரிலக்கியம் என்றும், சிற்றிலக்கியம் என்றும் அறிஞர் வகுத்தனர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலியனவும் புராணம் காவியம் எனப் பெயர் பெற்றனவும் பேரிலக்கியம் ஆம். சிற்றிலக்கியங்கள் பரணி, தூது, கலம்பகம், உலா, மடல், காதல் என்பன போன்ற நூல்களாம். அவற்றைத் தொண்ணூற்றாறு வகைப்படும் என்றும் அவற்றின் பெயர்களும் இலக்கணமும் பாடுமுறையும் இவை எனவும் விளக்கிப் பாட்டியல் என்ற இலக்கணமும் வகுத்தனர் நம் நாட்டுப் புலவர். எனவே மொழிப் புலமை சிற்றிலக்கியங்கள் பல கற்றாலன்றிச் சிறப்படையாது என்பது நன்கு விளங்கும்.

புலவர் பலர் தோன்றி ஒவ்வொரு காலத்தினும் இயற்றிய சிற்றிலக்கியங்கள் நம் நாட்டில் எண்ணிறந்தன. அவற்றின் பெயர்களும் புதியனவாகப் படைக்கப்பட்டன போலும்; மாலை, மஞ்சரி, விலாசம், பள்ளு, குறம், மறம், சிந்து, கும்மி எனப் பல காண்கிறோம். சிறந்த நூல்களே புலவர்களாற் போற்றப்பட்டு வருவன; நிலைத்துநிற்பன. மற்றவையெல்லாம் காலம் என்னும் காலன் வாய்ப்பட்டுக் கழிகின்றன. "மதனவித்தாரமாலை" என்னும் இந்நூல் சிற்றிலக்கியங்களிற் சிறந்த நூல்களுள் ஒன்றாக இன்று நின்று நிலவுவது கண்டு மகிழ்கின்றோம் நாம்.

இந்நூல் உலா, மடல் போலப் பொருளமைந்த நூலாம். உலாவின் ஒரு பிரிவு என்றே கூறலாம். பேதை முதற் பேரிளம் பெண் ஈறாக ஏழு பருவமங்கையரும் பார்த்து மயங்கப் பாட்டுடைத் தலைவன் பவனி வந்தான் என உலாவிற் கூறுவதுபோலவே கூறப்படுகிறது இந்நூலினும். ஆயினும் பருவம் ஒவ்வொன்றையும் தனித்தனி சிறப்பித்தலின்று. பொதுவாக மங்கையர் யாவரும் மயங்கி நிற்க உலாவந்தான் என்று கூறி அவர்களில் ஒருத்தி மதனனை விளித்துக் கூறிய பொருளே யமைந்துள்ளது. மயல் கொண்ட அம் மங்கை மதனனை விளித்து "மூவரும் தேவரும் உலகின்கண் வாழும் யாவரும் உன் அம்புபாய்ந்து அறிவிழந்து பெண்ணாசையாற் பிரியாது கூடி வாழ்கின்றனர் எனவும், மனைவி மக்கள் காரணமாகப் பல தொழில் புரிந்து பொருள் தேடிவைப்பதும் உன் மாயைதான் எனவும், இல்லறமே நல்லறமாம் ஏற்ற பொருள் மைந்தர் என்று சொல்ல வருவதும் உன் சூழ்ச்சியே எனவும் சிறப்பித்துக் கூறிக் காமத்தாற் கேடெய்திய பல வரலாறும் விளக்கிக் கூறிப் பின்னர் யான் கண்டு காதல் கொண்ட தலைவனுக்கு என் மேற் காதல் உண்டாகுமாறு நீ கணையேவி என்னைச் சேர்ந்து பிரியாமல் அவன் என்னுடன் இல்லறம் நடத்தி வாழுமாறு செய்யவேண்டும்" என வேண்டுவதாகப் பொருளமைத்திருக்கின்றார். மதனனது விரிவான செயலை விளக்கியிருப்பதால் மதனவித்தாரமாலை எனப் பெயர் தந்தார். புதுமுறையில் இந்நூலாசிரியர் அமைத்துப் பாடியிருப்பது வியக்கத்தக்கது. கற்பனையும் சிலேடையும் மடக்கும் சந்தமும் அமைத்துப் பாடியிருப்பது சொல்லின்பமும் பொருளின்பமும் கண்டு தமிழ்ச்சுவை நுகர்வார்க்குப் புதுவிருந்தாகும் என்பது ஒருதலை. நுண்மாணுழை புலமும் பன்னூலுணர் நலமும் செய்யுள் பாடும் திறமும் உடையவர் இவர் என்பதைக் கண்ணாடிபோலக் காட்டுவது இந்நூல். காமன் ஒரு தேமன்னன்; அவன் ஆணையின்கீழ் அடங்கின உலகம் எல்லாம்; அவனுக்கு அடங்காதார் எவரும் இலர் எனக் காரணம் காட்டுவதும், அதற்குத்தக அவன் செயல் விளக்குவதுமாகிய கற்பனைத்திறன் கவிஞர் கண்டு வியக்கற் பாலதாம். புலவர் எவரும் போற்றத் தக்க நூலே இது.

இந்நூலை எமது கழகத்தின் வாயிலாக வெளியிடுமாறு கூறி உதவிய நண்பர் உயர்திருவாளர் S. இராமச்சந்திரன் அவர்கள்,

செந்தமிழ் மொழியிற் சிரிய புலமையும் ஆங்கில மொழிப் புலமையும் பெற்று மிகவும் பெரும்புகழ் வாய்ந்தவர். தமக்குக் கிடைத்த இந்நூலைப் பொன்னெனப் போற்றி வைத்திருந்து இந்நாளிற் கழகத்திற்கு ஈந்தது போற்றத்தக்கதே. நூல் முழுவதும் தாமே யெழுதி அதற்கு முன்னுரையும் வரைந்து அவ்வுரையில் விசயநகர அரசு வரலாறு, பாளையக்காரர் வரலாறு, சமீன் வரலாறு, எட்டயபுர மன்னர் வரலாறு, ஊற்றுமலை மன்னர் வரலாறு, பாட்டுடைத் தலைவர் வரலாறு, நூலாசிரியர் வரலாறு, நூலின் சிறப்பு இவற்றை விளக்கித் தொகுத்து வழங்கினர். அவர்களுக்குக் கழகம் என்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையது. இந்நூற்குக் குறிப்புரை வரைந்து உதவியவர் எமது கழகப் புலவர், பண்டித வித்துவான், தி. சங்குப்புலவராவார். மடக்கு, சிலேடை இவற்றின் பொருள் எளிதிற் காண்பதற்கும் பல வரலாற்று விளக்கம் காண்பதற்கும் இக் குறிப்புரை மிகவும் பயன்படும் என்பது ஒருதலை.

கடிகை முத்துப் புலவர் என்னும் சிறந்த புலவராற் பாடப்பட்டது என்றும், செந்தமிழ் அருமை யறிந்து வழங்கும் கொடை வள்ளல் ஆகிய ஊற்றுமலை மன்னர் இருதயாலய மருதப்பத் தேவர் பாட்டுடைத் தலைவர் என்றும் கருதி இந் நூலை எமது கழக வாயிலாக வெளியிடக் கருதினோம். சிறந்த நூல்களைப் போற்றி அச்சேற்றி வருவது கழகப்பணியாம். எனவே இந் நூல் எமது கழகவாயிலாக இந்நாள் புதிதாக வெளிவருகிறது.

காமன் செயலும் வீரமும் அவனுக்குரிய தேர் யானை முதலிய சின்னங்களும், அரசின் சிறப்பும் இந் நூலிற் கூறியது போல எந் நூலினும் கூறியதின்று. சொற்சுவை பொருட்சுவை கற்பனை யமகம் சிலேடை சந்தம் இவைகளும் இந்நூலிற் பெருகக் காணலாம். எளிய நடையில் இனிமையாக மன்மதன் செயல் விளக்கும் பகுதி மக்கள் யாவரும் படித்து இன்புறற்பாலது. எல்லாரும் வாங்கிப் படித்து இன்புறுமாறு வேண்டுகின்றோம். கழகத்தை ஊக்குவிப்பது தமிழ் ஆர்வலர் கடமையாகும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

முன்னுரை

க. இலக்கியங்களும் அவற்றின் பயனும்

"இருந்தமிழே யுன்னா லிருந்தே னிமையோர்
விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்."

ஒரு நாட்டினர் ஏற்றமுறுவதற்கு அந்நாட்டு மொழியி லுள்ள பழைய நூல்களைப் படித்தறிதலும் சிறந்த வழியாகு மென்பது ஆன்றோர் கொள்கை. ஒரு நாட்டினர்க்கு அந் நாட்டு இலக்கியம் இன்பமளிப்பதுபோல் வேறொன்றும் இன்பமளிப்பதில்லை. எனவே நாகரிகம் விரும்பும் நாடு களெல்லாம் இலக்கிய வளத்தைப் பெருக்க முயல்வதை யாண்டுங் காணலாம். ஒரு நூலால் அதனை இயற்றிய ஆசிரியரின் திறமையும், அறிவாற்றலும் வெளிப்படுவன ஒருபுறமிருக்க, அவ்வாசிரியர் காலத்தில் வாழ்ந்த புலவர் கள், புரவலர்கள் முதலிய பெரியோர்களின் இயல்பும், அவர்கள் காலப்போக்கும், ஒழுக்கவழக்கங்களும், நாட்டு இயற்கையும், மற்றும் பல உண்மைகளும் புலனாகின்றன. ஒரு நாட்டின் வரலாறு பிற்காலத்தவர்களால் ஆராய்ந்து வரைவதற்கு அந்நாட்டின் பழைய நூல்கள் பெரிதும் துணைபுரிகின்றன. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முந்திய பழந்தமிழ்ச் சங்கநூல்கள் நம் தமிழ் நாட்டின் பண்டை வரலாற்றை அறிய இன்று துணைபுரிந்து நிற்கின்றன. எனவே, ஒவ்வொரு நாட்டுமக்களும் அவரவர் கைக்குக் கிட்டும் பழைய நூல்களைக் காலந் தாழ்த்தாது வெளியிட முயலல்வேண்டும். மேலும் ஒரு மொழியில் நூல் கள் வெளிவருந்தோறும் அம்மொழி வளமுறுகின்றது. இத்தகைய கருத்துக்களை உட்கொண்டே "மதனவித்தார மாலை" என்னும் இச்சிறு நூலை அச்சிற்பதித்து வெளியிட முன்வந்துள்ளேன்.

மதனவித்தாரமாலை வெளிவந்த மாண்பு

ஈன்ற தந்தைபோல் என்மாட்டு அன்புமிகப் பூண்ட வரும், எனக்குத் தமிழில் ஆர்வமுண்டாகப் பெரிதும்

துணைபுரிந்தவரும், தென்னிந்தியாவில் சிறந்த நாடகாசிரியராகப் புகழுடன் விளங்கியவரும், பெருமை, சான்றாண்மை, பாடறிந்தொழுகல் ஆகிய பண்புமிக்குள்ளவருமான குடந்தை. திரு. க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு அவர்கள் தாம் தென்னாட்டிற்குச் சென்றிருந்தபோது அரிதிற் சேகரித்துவைத்திருந்த இந்நூலின் கையெழுத்துப் படியொன்றை என்னிடம் அளித்து, இந்நூல் அச்சேறி வெளியாகவில்லையென்றும், மிகவும் அருமைவாய்ந்ததாக இருப்பதால் அச்சிட்டு வெளியிட்டாற் பலரும் படித்து இன்புறுவர் என்றும் தம் உள்ளக்கிடக்கையைத் தெரிவித்தார்கள். "தாமின் புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந் தார்." என்பது பொதுமறையன்றோ? மேலும் அவர்கள் இன்னிசையோடு சிற்சில பகுதிகளைப் படித்து நூலின் திட்பநுட்பங்களை விளக்கிப் பொருள்கூறி இந் நூலில் எனக்கு ஒரு ஊக்கத்தை உண்டாக்கினார்கள்.

வேலை பார்க்க யான் பல இடங்களுக்குச் செல்ல நேரிட்டமையால் தக்க சமயம் வாய்க்கப்பெறாது ஆண்டுகள் பல கழிந்தன. பின்னர் நான் சீகாழிக்குச் சென்றிருந்த போது, தருமபுர ஆதீனவித்துவானாக விளங்கிய வித்துவசிகாமணி. திரு. ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களை ஆசிரியராக அடையும்பேறு எனக்கு வாய்த்தது. ஒருநாள் அவர்களிடம் நான் பலவகைச் செய்யுட்களைச் சொல்லி அவைகளின் சொன்னயம், பொருணயம் முதலியவற்றைக் கேட்டு இன்புற்றிருந்தபோது இந்நூலில் எனக்கு மனனமிருந்த சில பகுதிகளைக் கூறி இந் நூலின் கையெழுத்துப்படி கிடைத்த வரலாற்றையும் தெரிவித்தேன். வித்துவ சிகாமணி அவர்கள் இந் நூலின் சிறப்பை உணர்ந்து இதை அச்சிட்டு வெளியிட என்னை ஊக்கினார்கள். இந் நூலின் சிறப்பை விளக்குமுகத்தால் முன்னுரையும் நூலை யாவரும் படித்தறிந்து இன்புறுவண்ணம் குறிப்புரையும் எழுதி நூலுடன் வெளியிட வேண்டுமென்று தம் விருப்பத்தையும் அறிவித்தார்கள்: அவ்விதமே, எனக்குக் கிடைக்கும் சிறிது ஒய்வு நேரங்களில் முன்னுரை

குறிப்புரைகளை எழுதி இந் நூலுடன் சேர்த்துள்ளேன். அகப்பொருள் புறப்பொருள் பற்றிய குறிப்புகளும் மன்மதனைப் பற்றிய குறிப்புகளும் இந் நூலைப் பயில்வோர்க்குப் பெரிதும் பயன்படுமாதலின் அக் குறிப்புகளையும் தொகுத்து இத்துடன் சேர்த்துள்ளேன். என் இளமையில் எழுதிமுடிந்த இந் நூல் இன்று வெளிவருகின்றது.

முடிவுரை

விழுப்பம் வாய்ந்த முழுப்புலவர்களே மேற்கொள்ள வேண்டிய இப் பணியைச் சிற்றறிவுடைய அடியேன் தமிழ் ஆர்வத்தால் தூண்டப்பெற்று மேற்கொண்டேன். எனவே குறைகள் காணுமிடத்து அறிஞர்கள் பொறுப்பார்கள் என்று நம்புகின்றேன். இந் நூல் வெளிவருவதற்குக் காரணர்களாகிய நாடகாசிரியர் குடந்தை. திரு. க. வீ. சந்தானகிருஷ்ண நாயுடு அவர்களையும், என் ஆசிரியப் பிரான் சீகாழி. வித்துவசிகாமணி, திரு. ப. அ. முத்துத் தாண்டவராயப் பிள்ளை அவர்களையும் மனமொழி மெய்களால் வணங்குகின்றேன். இந் நூலை அழகுற அச்சிட்டு என் முயற்சியைப் பயனுடையதாகச் செய்த சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கு என்றும் நன்றியுடையேன்.

உ. பாட்டுடைத் தலைவன் வரலாறு

விசயநகர அரசு வரலாறு

தென்னிந்தியாவின் வரலாற்றில் விசயநகர அரசாட்சியின் வரலாறு மிக முதன்மை வாய்ந்தது. தென்னிந்தியாவில் தொன்றுதொட்டு அரசாண்டுவந்த சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்களும் பல்லவர் சாளுக்கியர் முதலியவர்களின் படையெடுப்பால் பதினான்காம் நூற்றாண்டில் மிகவும் வலிகுன்றியிருந்தனர். அவ்வமயம் முகமதியர்கள் வடநாட்டிலிருந்து தெற்கு நோக்கிப் படையெடுத்துப் பல நாடுகளைக் கைப்பற்றினர். பிற மதத்தினர் படை

யெடுப்பால் தென்னாட்டினருக்கு இன்னல் பல ஏற்பட்டன. முகமதியர்களின் படையெடுப்பைத் தடுக்கும் நோக்கத்துடன், வாரங்கலில் இருந்த கருநாடகக் குறுநில மன்னர் ஒருவரின் மக்களாகிய உக்கா, புக்கா என்னும் இருவரால் அவர்களுடைய குருவாகிய வித்தியாரண்ய அடிகளின் உதவியைக்கொண்டு துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள ஹம்பி என்னுமிடத்தில் கி. பி. ௧௩௩௬-ஆம் ஆண்டில் விசயநகர் அரசு நிறுவப்பெற்றது என்பர்.

தென்னாட்டு மன்னர்கள் தத்தம் வலிகுன்றி இருந்தமையாலும், தங்கள் நாட்டின்மேல் படையெடுத்துவரும் முகமதியர்களை விசயநகர மன்னர்கள் தடுத்து நிறுத்திய தகைமையாலும் அவர்கள் யாவரும் விசயநகர மன்னர்களின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டனர். எனவே விரைவில், விசயநகர் அரசாட்சி கிருஷ்ணாநதிக்குத் தெற்கே கன்னியாகுமரிக்கு வடக்கேயுள்ள நாடுகளெல்லாம் அடங்கிய ஒரு பேர் அரசு ஆகத் தழைத்து ஏறக்குறைய இரண்டரை நூற்றாண்டுகள்வரை முகமதியர்களின் படையெடுப்பு தெற்கே பரவாமல் தடுத்துநின்று விளங்கியது. கிருஷ்ணதேவராயரின் ஆட்சியில் விசயநகர் அரசாட்சி தன் உயரிய நிலையை அடைந்துநின்றது. இங்கிலாந்தில் எட்டாவது ஹென்றி மன்னனாக ஆண்டபோது விசயநகரப் பேர் அரசை கிருஷ்ணதேவராயர் ஆண்டுவந்தார். மேல் நாடுகளிலெல்லாம் இவ்வரசாட்சியின் புகழ் பரவியது. இந்தியாவிற்கு வந்த பிறநாட்டு அறிஞர் பலரும் அதனைக் குறித்த பலவகைச் சிறப்புக்களையும் விரிவாக எழுதியுள்ளார்கள்.

விசயநகர மன்னர்கள் தென்னிந்தியாவில் பல கோயில்களைக் கட்டியதோடு பழைய கோயில்களையும், இடிந்த கோயில்களையும், முகமதியர்கள் படையெடுப்பால் அழிவடைந்த கோயில்களையும் புதுப்பித்துச் சீர்திருத்தினர். சமய உரிமை அவரவர்கள் விருப்பத்தின்படி விடப்பட்டது விசயநகர மன்னர்களின் நற்பண்புகளில் ஒன்றாகும். இவர்கள் காலத்தில் இலக்கியம், இசை, சிற்பம், ஓவியம், காவியம்

முதலிய பல கலைகளும் போற்றப் பெற்றுச் செழித்தோங்கித் தத்தம் உயரிய நிலையை யடைந்தன. கலைஞர்கள் பெரிதும் மதித்துப் பாராட்டப்பட்டனர். விசயநகரப் பேரரசு தோன்றிக் காவல்புரிந்திலதேல் நம் நாட்டுச் செல்வங் களாகிய இலக்கியம், இசை, சிற்பம் முதலிய கலைகள் முகமதியர் படையெடுப்பால் இருந்த இடம் தெரியாமல் மறைந்தொழிந்திருக்கும்; தென்னிந்தியாவின் வரலாறும் வேறு விதமாகச் சென்றிருக்கும். இன்றிருக்கும் நிலையை எய்தி இராது என்பது திண்ணம்.

முகமதியர்களுக்கும் இந்துக்களுக்கும் கி. பி. ௧௫௬௫-இல் தலைக்கோட்டையில் ஏற்பட்ட போரில் விசயநகர மன்னர் முறியடிக்கப்பட்டார். அப்போருக்குப் பிறகு விசயநக்ர மன்னர்கள் முதலில் பெனுகொண்டாவையும் பின்னர் சந்திரகிரியையும் தங்கள் தலைநகரங்களாகக் கொண்டு பெயரளவில் மன்னர்களாகச் சிலகாலம் அரசு புரிந்தனர். இப்போது ஆனைகுந்தியிலுள்ள அரசர் அவ் விசயநகர மன்னர்களின் வழியைச் சேர்ந்தவராவர்.

பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டிய நாடு விசயநகரப் பேர் அரசின்கீழ் ஒரு சிற்றரசாகப் பழைய பாண்டிய மன்னர்களின் வழியினரால் ஆளப்பட்டு வந்தது. வந்தபின் பதினேழாவது அரசனாகப் பட்டத்திற்கு வந்த சுந்தரகுமார பாண்டியன் தன்னைப்போலவே விசயநகரப் பேரரசின் கீழ்ச் சிற்றரசனாக இருந்த சோழன் ஒருவனுடன் போரில் ஈடுபட்டான். அப்போரில் தனக்கு உதவிபுரிய விசயநகர மன்னராக வீற்றிருந்த கிருஷ்ணதேவராயரை நாடினான். அவர் நாகம நாயகர் என்னும் தம் படைத் தலைவரைப் படையுடன் பாண்டியனுக்கு உதவியாக அனுப்புவித்தார். அந் நாகம நாயகர் வந்து பாண்டியனுக்கு உதவியாய்நின்று வெற்றியுண்டாக்கினார். பின்பு அப் பாண்டியற்கு முடிசூட்டாது தாமே பாண்டிய நாட்டிற்கு அரசரானார். நாகம நாயகர் பாண்டிய நாட்டிற்கு அரச ரானதைக்கேட்ட கிருஷ்ணதேவராயர் முதலில் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் நாகம நாயகர் இறந்த பிறகு

அவர் மகன் விசுவநாத நாயகருக்குப் பாண்டியநாட்டை ஆள அனுமதிகொடுத்தார். அதன்பின் கி. பி. கருடுகூ-ஆம் ஆண்டில் விசுவநாத நாயகர் பட்டத்திற்குவந்தார். இவ் விசுவநாத நாயகரே மதுரையை யாண்ட நாயக மன்னர் களில் முதல்வர் ஆவர். பெரும்புகழுடன் விளங்கிய திருமலே நாயகர் இவர் வழித்தோன்றலில் ஒருவரே.

பாளேயக்காரர் வரலாறு

பழங்காலத்தில் தமிழகத்திற் பல குறுநிலமன்னர்கள் ஒருவரோடு ஒருவர் போர்புரிந்தனர் என்றும், போர்புரியத் தொடங்குமுன் பகைவர் நாட்டிலுள்ள பசுக்களேக் கவர்வது வழக்கம் என்றும், அதற்கு வெட்சிமாலே புனேந்து செல்வர் என்றும், கவர்ந்து செல்லப்பட்ட பசுக்களே மீட்டுவதற்குக் கரந்தை மாலே புனேந்து செல்வர் என்றும், வஞ்சிமாலே புனேந்து பகைவர் நாட்டைக் கவர்வது வழக்கம் என்றும் பல போர் முறைகளேத் தமிழ் இலக்கிய வாயிலாக நாம் அறிகின்றோம். இவ்வாறு நிலங் காவலர்களாகவும் படைத் தலேவர்களாகவும் இருந்த குறுநில மன்னர் ஆட்சிமுறை கள் பதினுன்காம் நூற்ருண்டு முதல் பல மாறுதல்களே யடையலாயின. சோழர்களும் பாண்டியர்களும் தங்கள் வலிகுன்றியபோது இந் நிலங்காவலர்கள் அவரவர்கள் உரிமைபெற்றவர்களாய்த் தத்தம் நாட்டை ஆண்டு வரலாயினர். ஆனல் இவர்கள் தம்முள் மாறுபட்டு அடிக்கடி போர்புரிந்து வந்தமையால் தென்னுட்டில் குழப்பம் மலிந்திருந்தது.

இந் நிலேமையில்தான் விசுவநாத நாயகர் பட்டத்திற்கு வந்தார். அவர் உடனே இந் நிலங்காவலர்கள்மேல் படை யெடுத்துச் சென்று நாட்டில் மலிந்திருந்த குழப்பங்களே ஒருவாறு அடக்கினுர். மேலும், நாட்டில் அமைதியையும், நிலங்காவலர்களிடை மனநிறைவையும் ஏற்படுத்தும் நோக்கத்தோடு பிற்காலத்தவர்களால் பாளேயக்காரர் முறை என்று வழங்கப்படும் ஏற்பாட்டை நிறுவினுர். அவ் வேற்பாட்டின்படி ஒவ்வொரு நிலங்காவலர்களிடமும்

அவரவர் நாடுகள் ஒப்புவிக்கப்பட்டன. ஏதோ ஒரு அளவு திறையையும், தேவை உண்டாகும்போது உதவிபுரியப்போர் வீரர்களையும் கொடுத்துதவவேண்டுமென்னும் திட்டம் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொருவரும் பாளையக்காரர் என்று அழைக்கப்பட்டார்.

சமீன் வரலாறு

விசுவநாத நாயகர் தம்முடன் தென்னாடுபோந்த தொட்டிய நாயகர்களுக்குத் திருநெல்வேலி மாவட்டத்தின் பக்கத்தில் மக்கள் குடியேறாதிருந்த இடங்களைப் பிரித்துக் கொடுத்து அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனிப் பாளையக்காரராக ஏற்படுத்தினார். நாயகர் ஆட்சி வீழ்ச்சியுற்ற பிறகு இப் பாளையக்காரர்கள் யாவரும் உரிமைபெற்றுத் தத்தம் நாட்டை ஆள முற்பட்டனர். ஆயினும் முன் போலவே குழப்பம் நிலவியது. பின்னர்த் தென்னிந்தியா ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்ததும் இக் குழப்பங்கள் ஒருவாறு அடங்கின. கி. பி. ௧௮௦௩-ஆம் ஆண்டிற்குப்பின் பாளையக்காரர் நிலங்களுக்கெல்லாம் நிலைத்த அரசிறை ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டு சமீன்தார் என்னும் பெயரால் இவர்கள் அழைக்கப்படலாயினர். இப் பாளையக்காரர்களே விசயநகர ஆட்சிக்கு முன்னும் பின்னும் நம் நாட்டு இலக்கியம், இசை, சிற்பம் முதலிய கலைகளிற் சிறந்தவர்களை ஆதரித்து அக் கலைகள் வளர்ச்சியுறச் செய்தவர்கள் ஆவார்கள். இவர்களிற் சிலர் சிறந்த வள்ளல்களாகவும், சிலர் சிறந்த கலைஞர்களாகவும் விளங்கியுள்ளார்கள்.

எட்டயபுரம்

எட்டயபுரத்து மன்னர்களின் முன்னோர்கள் விசுவநாத நாயகரால் ஏற்படுத்தப்பட்ட நாயகர் வகுப்பைச் சேர்ந்த பாளையக் காரர்களே. இந்தச் சமீன் கி. பி. ௧௫௬௫-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. கி. பி. ௧௭௯௯-௧௮௦௧ ஆண்டுகளில் ஆங்கிலேயருக்கும் பாளையக்காரர்களுக்கும் நடந்த பாளையக்காரர் போரில் முப்பத்தைந்தாவது சமீன்தாராகிய முத்துசகவீரராம நாயக மன்னர்

ஆங்கிலேயருக்குப் பெரிதும் உதவி புரிந்தார். அப் போரில் ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளம்பிய பாளையக் காரர்கள் தோற்றுப்போகவே அவர்களுடைய நாடுகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவைகளின் பெரும்பகுதி யைக் கைம்மாருக ஆங்கிலேயர்கள் எட்டயபுரத்து மன்ன ருக்கு அளித்தனர்.

இற்றைக்கு ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன் எட்டயபுரத்துச் சமீனை யாண்ட வேங்கடேசுவர எட்டப்ப நாயக மன்னர்தாம் இந்நூலாசிரியராகிய கடிகை முத்துப் புலவரைத் தமது அவைக்களப் புலவராய் அமர்த்தி ஆதரித்தவர். இவர் மிகவும் நீதிமானுகவும், கல்விமானுகவும், புலவர்களை யாதரிக்கும் பூமானுகவும் விளங்கினுர். இவர் பேரில் கடிகை முத்துப் புலவர் சமுத்திர விலாசம், காமரசமஞ்சரி என்னும் இரண்டு நூல்களையும், பல தனிப் பாடல்களையும் இயற்றியுள்ளார். மற்றும் புலவர் பலர் இவர்மேல் பாடிய நூல்களும், தனிப்பாடல்களும் பலவாகும். இப்போதுள்ள இராசசெகவீர இராமமுத்துக் குமார வேங்கடேசுவர எட்டப்ப நாயகர் ஐயன் அவர்கள் இவர் வழியினரே.

ஊற்றுமலை

எட்டயபுரத்தைப் போலவே ஊற்றுமலையும் ஒரு சமீன் தலைநகரம் ஆகும். திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டத்தைச் சார்ந்தது இந்நகர். இந்தச் சமீன் தாரின் முன்னோர்கள் முன்னர்க் கூறியபடி தமிழகத்தில் பழங் காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்களின் வழிவழி வந்த மறவர் குலத்தினர். அங்கயற்கண் ணம்மையின் திருவருளால் உக்கிரகுமாரனுக்குத் துணையாகத் தோன் றிப் பாண்டிய நாட்டில் சரிபாதி உரிமைபெற்று யுவ பாண்டியர் என்னும் பெயருடன், ஐந்தும் அவற்றின் மேலும் ஆகிய கோட்டை கொத்தளங்களைக் கட்டி அரசு புரிந்து வந்தனர். சோழநாட்டுக் குறுநில மன்னர்களைப் போலவே பாண்டிநாட்டுக் குறுநில மன்னர்களும்

பாண்டிய மன்னர்பால் அன்புவாய்ந்தவர்களாய் அரசு புரிந்து வந்தனர். இவ்வரலாறுகளை வாள் எழுபது, சேதுபதி நாணயம் என்னும் நூல்களாலும், புராணங்களாலும் செவிவழி வந்தசெய்தி(கர்ணபரம்பரை)களாலும் செய்யுட்களாலும் அறியலாம். இக்குடியினர் தொன்றுதொட்டு வீரத்தோடு விளங்குபவர் என்று புகழப்படுவர்.

முன்னர்க் கூறியபடி விசுவநாத நாயகர் காலத்தில் இம் மன்னர்கள் பாளையக்காரர்களாகவும், பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியில் சமீன்தார்களாவும் இருந்து தங்கள் நாட்டை ஆண்டனர். மருதப்பர் என்பது இந்தச் சமீன் தலைவர்களுக்கெல்லாம் உரிய பொதுப் பெயராகும். இப் பெயர் அம்பாசமுத்திரம் வட்டத்தைச் சார்ந்த திருப்புடை மருதூர் என்னும் சிவத்தலத்திலுள்ள இறைவன் பெயர். இஃது அம்மன்னர்கள் யாவருக்கும் குடிப்பெயர் எனத் தோன்றுகிறது.

பாட்டுடைத் தலைவர்

இந்நூலின் பாட்டுடைத் தலைவரின் இயற்பெயர் இஃதென அறியக் கூடவில்லை. இவரை இந்நூலாசிரியர் மருதப்பவசீரன் என்றே அடிக்கடி கூறிச் செல்கின்றார். இந்நூல் வாயிலாய் இவர் திருவேங்கடநாதர் மைந்தர் என்றும், இவருடைய உறவின்முறையினர் இவரிவர் என்றும், திக்குவிசயம் என்னும் மற்றொரு நூல்வழியாக பெரிய மருதப்பரின் பேரனார் என்றும் தெரிகின்றது.

இப்பாட்டுடைத் தலைவர் தம்குடிகளைத் தாய்போல் பாதுகாக்கும் செங்கோல் மன்னராகவும், போரில் இணையில்லா வீரராகவும் விளங்கினார். இந்நூலில் இவரை "சகலகலை நிபுணன்"(௧௮௬), "இசைப்பாவலன்", "கல்விப் பழக்கத்தான்"(௧௬௫), "சிவிகை வளநாடுதந்து செந்தமிழைக் கொண்டோன்."(௨௭) "பழுத்து விளைந்தரச பாகத் தமிழை, வழுத்து மருதப்ப வசீரன்." (௨௯௨) என்று பல படியாகப் புகழப்படுவதால் இவர் ஒரு நல்ல கல்விமான் என்றும், புலவர்களை யாதரிக்கும் இயல்பினர் என்றும்

அறியலாம். இந்நூலை இயற்றிய கடிகை முத்துப் புலவரை யாதரித்து அவரால் பாடல் பெற்றதே இதற்கு ஒரு தக்க சான்றாகும்.

"என்னூற்கும் எழுத்தொடுசொற் பொருளறி சங்கர நமச்சி வாயனென்னும், பன்னூற்செந் தமிழ்ப் பாவல ராகிய" நன்னூல் விருத்தியுரை யாசிரியர், சங்கர நமச்சி வாயர் காலமும், இந் நூலாசிரியராகிய கடிகை முத்துப் புலவர் காலமும் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியே யாதலால் இப்பாட்டுடைத் தலைவராகிய மருதப்பத்தேவரும், சங்கர நமச்சிவாயரை ஆதரித்து அவரைக் கொண்டு நன்னூலுக்குப் புத்துரை எழுதுவித்த வித்தகராகிய மருதப்பத்தேவரும் ஒருவரே யாதல்வேண்டும். "நன்னூ லுட் கருத்துலகோர் அறியவுரை செய்கவென நரேந்திர சிங்கம், தென்னூற்று மலைமருதப்பன் புகல" என்றார் அந் நூலின் உரைப்பாயிரத்தில். இந் நூலாசிரியர் சிறப்பித்துக் கூறுவது போலவே அவ்வுரையின் தற் சிறப்புப்பாயிரத்தில் சங்கர நமச்சிவாயர் "பொன்மலை எனவிப் புவிபுகழ் பெருமை, மன்னிய ஊற்று மலைமரு தப்பன், முத்தமிழ்ப் புலமையும் முறையர சுரிமையும் இத்தலத் தெய்திய இறை மகன்," என்று இப்பாட்டுடைத் தலைவரைப் புகழ்ந்துள் ளார். இந்நூலில் "ஞாலங்களுக்கதிபன்"(௧அஅ), "குலவு திசை முற்றும் புரந்த முனைவேந்தன்"(௨௧௨), "திசை யனைத்தும் ஒன்றாகச் செங்கோல் புரியும்"(௨௩௬) என்று கூறப்படுவதுபோலவே அவ்வுரையின் சிறப்புப்பாயிரத்தில் "திகந்தத் தளவும் நடத்தும் கீர்த்தி தென்னூற்றுமலை மருதப்பன்" என்று கூறப்படுகின்றது. இந்நூலில் கூறி யுள்ளபடி தமிழில் நல்ல புலமை யிருந்ததனால்தான் ஒரு இலக்கண நூலுக்குத் தக்க புலவரைக் கொண்டு உரை எழுதுவித்துள்ளார். இவ்வுரை அரங்கேற்றப்பட்டதும் அதன் நயங்களைப் பாராட்டிச் சங்கர நமச்சிவாயருக்குத் தக்க பரிசிலும் சிறப்பும் அளித்தார்.

இந்நூலினின்று இவர் செழுங்கிளை தாங்கும் செல்வர் என்றும் அறியக்கிடக்கின்றது. திக்குவிசயம் என்னும்

நூல்மூலம் இவர் அந்நூலின் பாட்டுடைத் தலைவராகிய சிவகிரி சமீன்தார் வரகுணராம வன்னியனருடன் நெருங்கிய நட்புப் பூண்டிருந்ததாகவும், மேலும் எட்டயபுரம், சிவகிரி, ஊற்றுமலை ஆகிய இம்மூன்று நாட்டு மன்னர்களும் ஒருவருக்கொருவர் அன்பு பூண்டிருந்ததாகவும் நாம் அறிகின்றோம். இதனாலன்றோ எட்டயபுரத்து மன்னரின் அவைக்களத்தைச் சார்ந்த கடிகை முத்துப் புலவர் மற்றிரு மன்னர்களையும் புகழ்ந்து நூல்கள் இயற்றியுள்ளார். வடகரைச் சமீன்தாரையும் புகழ்ந்து பள்ளு என்ற நூல் பாடியதாகவும் அறிகின்றோம். இவர் பாடிய திக்குவிசயம் என்ற நூலில்,

"சாற்றும் விசயச் சிவகிரியும் தமிழோர் பரவும் வடகரையும்
ஊற்றுமலையும் புரப்பவர்க ளுயர்ந்த தமிழ்நாட் டரசரன்றோ."

என்று இம்மூன்று மன்னர்களையும் ஒருங்கு புகழ்ந்திருப்பதே இவர்கள் நட்பை இனிது விளக்கும்.

இந் நூலில் இம் மன்னர் பெருமானின் செங்கோன் முறையும், கொடையும், குணமும், புலமையும், தூய்மையும் மற்றும் பல சிறப்புகளும் செவ்வனே சொல்லப்பட்டிருப்பதை ஆங்காங்குப் பரக்கக் காணலாம்.

ரு. நூலாசிரியர் வரலாறு

ஊரும் பெயரும்

இந் நூலாசிரியராகிய கடிகை முத்துப்புலவர் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் எட்டயபுரத்திலேயே பிறந்து அவ்விடத்திலேயே கல்வி பயின்றவர். அக் குறுநில மன்னர் ஆகிய இராச செகவீரராம வேங்கடேசுர எட்டப்ப நாயக மன்னர் பெருமான் புலவர்களில் முதன்மை வாய்ந்தவராக விளங்கினார். கடிகை என்பது இவருடைய குடிப்பெயர்; முத்துப்புலவர் என்பதே இவருடைய இயற்பெயர். (கடிகை என்னும் ஊரில் பிறந்து எட்டயபுரத்தில் வாழ்ந்தவர்

என்றும் அதனால் இவர் இயற்பெயராகிய முத்துப்புலவர் என்பதுடன் ஊர்ப்பெயராகிய கடிகையென்னும் சொல்லும் சேர்ந்து கடிகை முத்துப்புலவர் என அழைக்கப்பட்டார் என்றும் சிலர் கூறுவர்.)

குலமும் சமயமும்

இவர் வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் இயற்றியுள்ள திருப்புடைமருதூரந்தாதி என்னும் துதி நூலைக் கொண்டும், இவருடைய மற்ற நூல்களிற் காணும் காப்பு, கடவுள் வாழ்த்துச் செய்யுட்களைக் கொண்டும், (இவர் கால் வழியினர்களின் பெயர் நமசிவாயம், சுப்பிரமணியம் என்று இருப்பதைக் கொண்டும்) இவர் சைவசமயத்தவர் என்று கொள்ளலாம். இவர் நூல்களின் சிற்சில பகுதிகளைக் கொண்டு திருமாலிடத்தும் நல்ல பக்தியுடையவர் என்றும், பிற சமயத்தினர்பால் பகை பாராட்டாதவர் என்றும் அறியலாம்.

இயற்றிய நூல்கள்

எட்டயபுரத்து மன்னர் பெருமானாகிய வேங்கடேசுவர எட்டப்ப நாயகர் அவர்கள்மேல் பாடிய காமமிக்க கழிபடர் கிளவி என்ற துறை பற்றிய சமுத்திர விலாசமும், காதல் நூல்போன்ற காமரசமஞ்சரியும் சிவகிரி சமீன்தார்—வரகுணராமவன்னியனார் அவர்கள்மேல் பாடிய பரணி நூல் போன்ற திக்குவிசயமும் திருப்புடைமருதூர் இறைவன் மேல் பாடிய திருப்புடைமருதூரந்தாதியும் இவர் இயற்றிய நூல்களாம். (திருப்புடைமருதூரந்தாதி என்னும் இந் நூல் திருவிடைமருதூரந்தாதி என்னும் பெயருடன் அச்சாகி வெளிவந்துள்ளது. திருப்புடைமருதூர் என்பது புடார்ஜுனபுரமென வடமொழியில் வழங்கப்பெறுகின்றது. அர்ஜுனம் என்பது மருதமரத்தின் வடமொழிப் பெயர்.) பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவ மங்கையரைச் சிறப்பித்து ஒரு பருவத்திற்கு ஒன்றாக இசைநயம், சொன்னயம், பொருள்நயம் செறிந்த ஏழு பதங்கள்

பாடியிருக்கின்றனர். பருவப்பதங்கள் என்பது அந் நூலின் பெயர். எட்டையபுர மன்னரின் மைத்துனரும், வீரப்ப மன்னரின் மைந்தனுமாகிய பெரியசாமி மன்னரைப் பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடியது அது. காமச் சுவை பற்றிய இசைப் பாட்டுக்களைப் பதங்கள் என்றும் மற்றைப் பொருள் பற்றிய இசைப் பாட்டுக்களைக் கீர்த்தனங்கள் என்றும் பிற்காலத்தவர் வழங்கினர். முத்துத்தாண்டவர்பதம், கவிகுஞ்சரபதம், ராமகவிபதம், மதுரகவிபதம், சுப்பராம ஐயர் பதம், காமியப்ப கவி பதம், முத்துசாமி கவி பதம் என்னும் நூல்களையும்; முத்துத் தாண்டவர் கீர்த்தனம், இராமாயணக் கீர்த்தனம், கந்த புராணக் கீர்த்தனம், பெரியபுராணக் கீர்த்தனம், மாம்பழக் கவி கீர்த்தனம், ரெங்கநாதர் கீர்த்தனம் என்னும் நூல் களையும் நோக்குக. கடிகையார் வாழ்வுக் காலங்களிற் பாடிய தனிப் பாடல்கள் கணக்கிலடங்கா. அவைகளில் சில "தனிச் செய்யுட் சிந்தாமணி," "தனிப் பாடல் திரட்டு" என்னும் நூல்களில் வெளிவந்துள்ளன.

இவர் இயற்றிய நூல்களெல்லாம் கற்றவர் யாவரும் களிப்புறும் வண்ணம் கற்பனை அலங்காரம் அமைந்து செம்பாகமான திரிபு, யமகம், மடக்கு, சந்தம், சிலேடை, விரவிச் சொன்னயங்களும், பொருணயங்களும் தோன்றி மிளிர்கின்றன. ஓசை நயமும் செறிவும் பொருட்செறிவும் இவர் பாடல்களில் எங்குங் காணலாம். உலகிற் பல்வேறு இயற்கைகளும் இவர் பாக்களில் நன்றாகத் தோன்றக் காண்கின்றோம்.

பலவகைச் சிறப்பு

இப் புலவர் பெருமான் கவிபாடும் திறமையில் மட்டு மல்லாது அமையத்திற்கு ஏற்றவாறு நகைச்சுவை பெருக உரையாடுதலிலும் வல்லவராக விளங்கினார். இவர் பிறர் முன்பேசும்பொழுது இருபொருள் பயக்கும் சொற்களாய் இடத்திற்கேற்ற தகுதியுடையனவாக முன்பின் நினைத்து வைத்துச் சொல்லாது அவ்வப்போது விரைவாக நயம்படப்

பேசிய அறிவுடை மறுமொழிகள் எண்ணிறந்தன. அவை கேட்போருக்கின்பம் பயப்பதோ டமையாது அறிவைக் கூராக்கவும் வல்லன வாதலின் ஈண்டுச் சிலவற்றை எடுத்துக் காட்டுகின்றேம்.

ஒருநாள் இவர் தம் மனைவியின் திவசத்திற்காகக் கடையில் சில பண்டங்களை வாங்கி அவைகளை மூட்டை யாகக் கட்டித் தலையிற் சுமந்து வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவ்வமயம் எட்டயபுரத்து அரசர் பெருமான் புலவரை அந் நிலையில் தற்செயலாகக் காணவே மனமிரங்கி, "புலவரே! என் மூட்டை சுமந்துகொண்டு போகிறீர்?" என்று புன்முறுவலுடன் கேட்டார். புலவரோ சற்றும் தயங்காது "அரசே! என் தலைவிதிவசம்" என்று, இப் பண்டங்கள் தலைவி திவசத்திற்காக என்றும், இம் மூட்டையை இவ்வாறு சுமப்பது தலைவிதி வசம் என்றும் இருபொருள்பட்டு நகைவிளைக்கும்படி பதிலளித்தார். அரசர் புலவரின் வாக்கு நயத்தைப் பெரிதும் பாராட்டிய துடன் அன்றுமுதல் புலவர்க்கு ஏவலாளன் ஒருவனையும் அமைத்துக்கொடுத்தார் என்றும் கூறுவர்.

இப் புலவர்பெருமான் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடக்கும்போது இவர் மகள் பாலைத் தவறுதலாக அழுக்குத் துணியில் நனைத்துப் புலவர் வாயிற் பிழியவே அப்பால் அழுக்கு நாற்றம் வீசியதுணர்ந்து உட்கொள்ளாது வெளி யில் உமிழ்ந்தார். அதனையறிந்த மகள் தன் தந்தைக்குப் பால் கசப்பாகத் தெரிகிறதுபோலும் என்று கருதி "அப்பா! பாலுங் கசக்குதோ?" என்று கண்ணீர் பெருகக் கேட்டாள். அதற்குப் புலவர் "பாலுங் கசக்கவில்லை, துணியும் கசக்க வில்லை," என்று பதிலளித்தாராம். ஈண்டு, தன்மகள் அழுக்குத் துணியில் பாலைப் பிழிந்த தவறுதலை நகைச்சுவை பயக்கப் புலவர் எடுத்துக் காட்டியது எத்துணை வியப்பை யளிக்கின்றது பாருங்கள்.

புலவர் உயிர் பிரியுந் தருணங் கண்டு அவர் தம் மக்கள் "அப்பா! எங்களைவிட்டுப் போகின்றீர்களே;

எங்களுக்கு இனி யார் துணை?'' என்று கதறினார்கள். அப்போது புலவர் தம் மக்களை நோக்கி "உங்களுக்கு ஓர் அப்பன் போனால் என்ன? எட்டப்பன் இருக்கின்றான் உங்களைப் புரக்க. அழாதீர்கள்,'' என்றுகூறி வருத்தத்தில் ஆழ்ந்திருந்த சுற்றத்தார் அனைவரையும் வயிறுகுலுங்க நகைக்கவைத்தனர். எட்டப்பன் என்பது எட்டு அப்பனை யும், இவரை யாதரித்துவந்த எட்டயபுரத்து அரசனாகிய "எட்டப்பனையும்'' (எட்டப்ப மன்னன்) குறிக்கின்றது.

இவர் இத்தகைய சீரிய புலமையும் திறமையும் வாய்க்கப் பெற்று விளங்கியது பற்றியே, "முத்துப் புலவன் வாக்கை விற்றுப்பிழை,'' என்றும், "கடிகை முத்துப் புலவன் வாக்கைக் காய்ச்சிக் குடி,'' என்றும் பழமொழிகள் எழுந்தன. இவர்தம் செய்யுளின்பத்தில் திளைத்த புலவ ரொருவர்,

"தாணி யுப்புப் பணத்திற்குக் கொள்ளலாந்
துய்ய சீனி யரைப்பலங் காற்பலஞ்
சாணி கூடை பணத்திற்குக் கொள்ளலாம்
சவ்வா தப்படிக் கொள்ளத் தகுவதே
யாணி முத்தொன் றுக் காயிரம் பொன்விலை
யாமணக்குமுத் தாயிரங் காசுக்குக்
காணி கோடி கவிக்குப் பரிசுகொள்
கடிகை முத்துக் கிணையெவ ராவரே."

என்று பாடி இவர்தம் புலமையும், திறமையும் நன்கு பாராட்டிப் புகழ்ந்துள்ளார்.

இத்தகைய புலமையும் திறமையும் வாய்க்கப் பெற் றவர் கடவுள் சார்பாக நூல்கள் பல இயற்றாது வாழ்ந்தது பற்றித் திருப்புகழ் முருகதாச-தண்டபாணி சுவாமிகள்,

"தேவர் தந்துதி செப்பலின் றிக்கொடும்
பாவ மானிடர்க் கேகவி பாடிய
நாவ லோனுங் கடிகை நகரினின்
மாவ லானென வாழ்ந்ததுண் டுண்டரோ."

(புலவர் புராணம், எஉ; கஎ.)

என்று இவரைத் தாம் இயற்றிய புலவர் புராணம் என்னும் நூலில் இரக்கத்துடன் குறித்துச் செல்லுகின்றார். எனினும் கடிகை முத்துப் புலவர் தாம் இயற்றிய நூல்களில் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் கடவுளரை வாயாரத் துதிக்கின்றார். இந்நூலிலும் துதிபொதிந்து கடவுள் மணங்கமழும் கண்ணிகள் பலவற்றைக் காணலாம். திருப் புடை மருதூர் இறைவன்மேல் இவர் ஓர் அந்தாதி இயற்றி யுள்ளதையும் ஈண்டு நோக்குக. அகப்பொருள் புறப் பொருள் இயல்களைப் பொருளாகக் கொண்டு தம்மை ஆதரித்த அரசர் முதலியோரைப் பாட்டுடைத் தலைவ ராக்கிப் பாடும் வழக்கு அந்நாளில் தமிழ்மக்களால் பெரி தும் மதிக்கப்பட்டமையே இப் புலவர் நூல்களெல்லாம் அகப்பொருள் புறப்பொருள் பற்றியனவாய் இருப்பதற்குக் காரணமாகும். மேலும் உலகின் எல்லா மொழிகளிலும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவகையான இலக்கியம் தோன்றுதல் இயல்புதானே.

காலம்

அமைப்பில் கம்பன் கவிபோலுள்ள செய்யுட்களா லியன்ற சிறாப்புராணம் என்னும் முகமது நபியின் வரலாற் றைக் கூறும் அரும்பெருநூலை இயற்றிய உமறுப் புலவர் இந்நூலாசிரியர் மாணவர்களில் ஒருவர். தொண்டை மண்டல சதகம் முதலிய நூல்களின் ஆசிரியராகிய படிக்காசுப் புலவர், நன்னூலுக்கு விருத்தியுரை எழுதிய சங்கர நமச்சிவாயர், இலக்கண விளக்க ஆசிரியர் வைத்திய நாத நாவலர் மைந்தனாகிய சதாசிவதேசிகர் முதலியோர் இவர் காலத்தில் வாழ்ந்த மற்றப் புலவர்களாவார்கள். அரும் பெருங் கொடை வள்ளலாக விளங்கிய சீதக்காதி மரைக் காயர் என்னும் காயல்பட்டினம் சையத் அப்துல் காதர் மரைக்காயரும், இராமநாதபுரத்தை யாண்ட கிழவன் சேதுபதி என்னும் சேதுபதி விசயரகுநாத தேவர் முதலி யவர்களும் இவர் காலத்தவர்களே ; ஆதலால் இவர் காலம் கி. பி. பதினேழாம் நூற்றாண்டு என்று துணியலாம்.

ச. நூலின் சிறப்பு

இயல்பு

ஒப்பற்ற செய்யுள் நடைவாய்ந்துள்ள இந்நூல் முந்நூற்று முப்பது கண்ணிகளைக் கொண்ட ஒரு கலிவெண்பாட்டாக முடிந்துள்ளது. முதலில் காப்புச் செய்யுள் ஒன்றும், ஈற்றில் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் ஆக இரண்டு இரு விகற்ப நேரிசை வெண்பாக்களும் உள்ளன.

பெயர்க் காரணம்

மதன வித்தார மாலை என்பது மூன்று சொற்கள் இரண்டு தொடராய், முதற்றொடர் ஆறும் வேற்றுமைத் தொகையாகவும், இரண்டாம் தொடர் இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையாகவும் அமைந்துள்ளது. வித்தார மெனினும் அகலமெனினும் ஒக்கும், மாலை—மலர்மாலை. இஃது உவமையாகு பெயராய்ப் பாமாலையை உணர்த்தியது. எனவே மதனனது பண்புசெயல் விரிவைக் கூறும் மாலைபோன்ற நூல் என்பது திரண்டபொருள்.

பொருள்

இந்நூல் சிற்றிலக்கியத்தில் உலாவைச் சார்ந்ததாகும். வணப்பெட்டினுள் விருந்தின்பாற்பட்டு இன்சொற்றொடரான் இயன்ற பொருட்டொடர் நிலைச்செய்யுளாகும். பாடாண்கைக்கிளை இந்நூலில் பயிலப்பட்டுள்ளது. புறப்பொருள் வெண்பாமாலை நூலுடையார் பாடாண் கைக்கிளையை "தண்டாக் காதற் றளரிய றலைவன், வண்டார் விரும்பிய வகையுரைத் தன்று." என்பர். கெடாத அன்பினையும், நடங்கும் தன்மையினையு முடையவள் தலைவனுடைய வளவிய மாலையை ஆசைப்பட்ட கூறுபாட்டைச் சொல்லியது என்பது இதன் பொருள். இத்துறையைப் பிற்காலத்தவர்கள் பேதை முதலிய ஏழு பருவமாக வகுத்துக் கலிவெண்பாவால் உலா நூலாகச் செய்துள்ளார்கள். இது பரத்தையர்க் கன்றிக் குலமகளிர்க்கு உரியதன்று என்பர். பாடாணுவது புகழ்

முதலியவற்றை விரும்பிய ஆண்மகன் ஒருவனிடம் பரிசில் பெறவேண்டி ஒருபுலவன் அவன் நற்பண்புகளைப் புகழ்ந்து பாடுதல் (பாடாண்-பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு). அகப்பொருள் துறைகள் பாட்டுடைத் தலைவனுடைய இயற்பெயரோடு கூறப்பட்டு வருமாயின் அவையும் புறத் திணையின்பாற்படும் என்ப.

இந்நூல் முழுதும் ஒருதலைக்காமமாகிய கைக்கிளையுற்ற ஒருத்தியின் கூற்றாக அமைந்துள்ளது. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் உலாவந்தபோது அவனைக் கண்டு காமுற்று, காம மயக்கத்தால் வருந்தும் ஒருத்தி தன்னை வருத்தும் மன்மதனை விளித்துத் தன் நிலையைக் கூறி உலாவந்த தலைவன் மாலையை விரும்பிநிற்கின்றாள். மன்மதனை முன்னிலையாக்கும் முகத்தால் அவன் சிறப்புகளையும், வெற்றிகளையும் விரிக்கின்றாள். தன் நிலையை விளக்குமுகத்தால் உலாவந்த தலைவனின் தசாங்கங்களையும், செங்கோன்மையையும், அவன் உலாவந்த சிறப்பையும் கூறுகின்றாள். மன்மதனுடைய ஆற்றலையும் பாட்டுடைத் தலைவனுடைய சிறப்புக்களையும் கூற இவர் கையாண்டுள்ள வழி உன்னுந்தோறும் இன்பம் பயப்பதாகும்.

சிறப்பமைந்துள்ள இடங்கள்

இந்நூலில் க—ரு கண்ணிகளில் பாட்டுடைத் தலைவன் சிறப்பும், சு—கரு௮-இல் மன்மதனுடைய சிறப்பும், கருகூ—க௮௮-இல் பாட்டுடைத்தலைவன் தசாங்கமும், க௮கூ—உருஎ-இல் பாட்டுடைத்தலைவன் சிறப்பும், உரு௮—உஎஉ-இல் பாட்டுடைத்தலைவன் பவனி எழுச்சியும், உஎரு—உ௮சு-இல் பாட்டுடைத்தலைவன் பவனிவரும் சிறப்பும், உ௮எ—உகூகூ-இல் பவனிவரும் தலைவனைக் கண்ட மாதர் நிலையும், ௩0ரு—ருரு0-இல் காமுற்ற மாதொருத்தியின் கைக்கிளையும் ஓதப்பட்டுள்ளன. இடையிடையே யமகம், திரிபு, மடக்கு, சந்தம் முதலிய சொன்னயங்களும் உவமை, உருவகம், சிலேடை, துறை முதலிய பொருணயங்களும் பெரிதும் அமைந்துள்ளன. அவைகள் குறிப்புரையில்

ஆங்காங்குக் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் நாடுகளின் பெயரை யமகமாகக் கொண்டுவரும் ௨௦௯—௨௧௧ கண்ணிகளும், திரிபும், மடக்கும் பயின்று காட்சி, ஐயம், தெளிவு முதலிய கைக்கிளைத் துறைகளைத் தாங்கிவரும் ௯௭—௧௦௫ கண்ணிகளும், சந்தஓசை முழங்கிவரும் ௧௩௯—௧௮௫ வரையுள்ள கண்ணிகளில், தசாங்கங் கூறும் பகுதியும், அப் பகுதியில் பொதியமலைக்கும் திருமாலுக்கும், சித்திரா நதிக்கும் சங்கரனுக்கும், பாண்டி நாட்டுக்கும் செவ்வேட்கும், ஊற்று மலைக்கும் மேருமலைக்கும், முல்லைத்தாருக்கும் மழைத்தாரைக்கும், யானைக்கும் சூரியனுக்கும் சிலேடை யமைந்திருப்பதும் புலமைத் திறத்தினுயர்வை எடுத்துக்காட்டுகின்றது. யானையின் சிறப்புக் கூறும்போது ௧௭௮—௧௮௩ கண்ணிவரை சந்தம் அமைந்திருப்பதும் ௨௦௦—௨௦௫ வரை போர்புரியுஞ் செயல் சந்தத்தில் அமைந்திருப்பதும் வீரத்தின் வேகத்திற்கேற்ற ஓசைநயந் தோன்றுதற்கே என்பது உணரத்தக்கது. மன்மதனுடைய ஆற்றலை இவர் கூறிச்செல்வதுபோல் வேறு ஒருவரும் கூறியதில்லை. இங்ஙனமாய இந்நூலின் அருமை பெருமைகளை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

முடிவுரை

ஒட்டக்கூத்தரியற்றிய உலா நூல்களின் அமைப்பைப் பின்பற்றி இந்நூல் இயற்றப்பெற்றுள்ளது என்று கொள்ளத் தகும் இடங்களிருக்கின்றன. இந்நூல் ஒன்றைக்கொண்டே கடிகைமுத்துப்புலவர் பழந்தமிழ் நூல்களிலும், புராண இலக்கிய நூல்களிலும் நல்ல பயிற்சியுடையவர் என்பதும், உலகியல்பின் பல்வேறு துறைகளையும் நன்குணர்ந்த திறமையுடையவர் என்பதும்; பொருளிலக்கணம், அணியிலக்கணம் முதலியவற்றைச் செவ்வனே யறிந்த புலமையுடையவர் என்பதும்; சொல்லணி பொருளணிகளை எளிதில் அமைத்துக் கவிபாடும் ஆற்றலுடையவர் என்பதும்; எதுகை மோனை முதலியன வருத்தமின்றி எளிதில் வர அமைத்துப்பாடும் நாவன்மையுடையவர் என்பதும் நாம் அறிகின்றோம்.

ரு. நூற்பொருட்கு வேண்டும் பல்வகைக் குறிப்புகள்

பொருள் இலக்கணம்

பொருட்டொகுதியைப் பழந்தமிழ்ப் பெரியோர், அகத்திணை, புறத்திணை என இருபகுதியாகக்கொண்டு அவற்றிற்கேற்ப இயல்கள் வகுத்துக்கூறுவர். அகத்திணை என்பது அகவொழுக்கம். புறத்திணை என்பது புறவொழுக்கம்.

அகம்

அகமாவது ஒத்த அன்பினராகிய தலைவனும், தலைவியும் தம்முட் கூடுகின்ற காலத்துப் பிறந்து, அக்கூட்டத்தின் பின்பு அவ் விருவராலும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அநுபவிக்கப்படும் இன்பம். இன்பம்பற்றி அகத்தே நிகழும் ஒழுக்கத்தை அகம் என்பர்.

புறம்

புறமாவது மேற்கூறிய ஒத்த அன்புடையாராலேயேயன்றி, எல்லோராலும் அநுபவித்து உணரப்பட்டு இஃது இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள். இதில் அறனும், பொருளும் அடங்கும். அறனும் பொருளும்பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கத்தைப் புறம் என்பர்.

அகத்தின் பகுதி

அகத்திணை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என எழுவகைப்படும். இவைகளுக்கேற்பப் புறத்திணை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என எழுவகைப்படும். பன்னிருபடல நூலாசிரியர் புறத்திணை எழுடன் கரந்தை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் ஐந்தையும் சேர்த்துப் பன்னிரண்டாக்கியுள்ளார்.

குறிஞ்சி புணர்தலும், புணர்தல் நிமித்தமும்; முல்லை கற்புக்கடன் ஆற்றி இருத்தலும் இருத்தல் நிமித்தமும்; மருதம் ஊடலும் ஊடல் நிமித்தமும்; நெய்தல் இரங்கலும் இரங்கல் நிமித்தமுமாம்; பாலை பிரிதலும் பிரிதல் நிமித்தமுமாம். பெருந்திணை பொருந்தாக் காமம் பற்றியது. கைக்கிளை ஒருதலைக்காமம் பற்றியது.

புறப் பகுதி

வெட்சி பகைவர்களுடைய பசுக்களைக் கவர்தல். இது குறிஞ்சித்திணையின் புறத்திணை. பகைவர் கவர்ந்துசென்ற பசுக்களை மீட்டல் கரந்தை என்பர். வஞ்சி பகைவருடைய நாட்டைக் கொள்ள நினைந்து போர் செய்வதற்கு மேற் செல்லுதல். இது முல்லைத்திணையின் புறத்திணை. உழிஞை பகைவருடைய மதிலை வளைத்துக்கொள்ளுதல். இது மருதத்திணையின் புறத்திணை. தம்முடைய மதிலைக் காத்தல் நொச்சி என்பர். தும்பை பகைவரோடு போர்செய்தல். இது நெய்தல் திணையின் புறத்திணை. வாகை பகைவரை வெல்லுதல். இது பாலைத்திணையின் புறத்திணை. காஞ்சி போர்செய்தற்கு வந்த பகைவர்க்கு எதிர்சென்று ஊன்றுதல். காஞ்சித்திணை என்பது நிலையாமையைக் கூறுவது என்பர் தொல்காப்பியர். இது பெருந்திணையின் புறத்திணை. பாடாண் ஒருவனுடைய புகழ், வலிமை, கொடை, தண்ணளி முதலியவற்றை ஆராய்ந்து சொல்லுதல். இது கைக்கிளைத் திணையின் புறத்திணை. பொதுவியல் மேற் கூறிய புறத்திணைகட்கெல்லாம் பொதுவாயுள்ளனவும், அவற்றிற் கூறுதொழிந்தனவுமாகிய இலக்கணங்களைக் கூறுவது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை இவை ஐந்தும் அகம்; பெருந்திணை, கைக்கிளை, இவை இரண்டும் அகப்புறம்; வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை இவை ஏழும் புறம்; வாகை, பாடாண், பொதுவியல் மூன்றும் புறப்புறம் என்றும் கொள்ளுவர்.

S. இராமச்சந்திரன்

மன்மதனைப்பற்றிய குறிப்புகள்

மன்மதன் பெயர்

திருமகள் மைந்தன் மாரன் சித்தசன் சம்பராரி
உருவிலி மன்மதன்மீ னுறுகொடி உயர்த்த தோன்றல்
இரதி காதலன் வசந்தன் எழில்பெறு வேனி லாளி
கருதிய கருப்பு வில்லி கந்தர்ப்பன் மதன்பூ வாளி.

திங்கள்வெண் குடையோன் தென்றல் தேரினன் வில்லி மோகன்
ஐங்கணைக் கிழவன் எய்யும் மலர்க்கணை வேள்அ நங்கன்
செங்கண்மால் மைந்தன் மிக்க திறன்மனோ பவன்ம னோசன்
அங்கசன் மனோபு வேடீ ராழிவெம் முரசோன் காமன்.

(சூடாமணி நிகண்டு முதல். 25 - 26)

(சித்தசன், மனோசன், மனோபவன், மனோபு என்னும் இச் சொற்களுக்கு மனதிற் பிறந்தவன் என்று பொருள். மாரன் - காமவிகாரமுடையார்க்கு மரணவேதனை செய்வோன். மன் மதன் - புத்தியை மயக்குவோன். வேள் - விருப்பத்திற்குரியவன். மோகன் - மயக்கம் செய்பவன். அநங்கன் - உருவமில்லாதவன். அங்கசன் - உடம்போடு தோன்றுவோன்.)

மன்மதனுக்குரிய மாலை முதலியன

தொடைஇலஞ்சி மஞ்சளிளஞ் சோலைபடை வீடு
படைமங் கையர்கமுகம் பாளை—இடுகவரி
காளாஞ்சி மல்லிகையாம் காரிகையீர் மாரனுக்கு
வாளாம்ஓ லைப்பூவு மால்.

ஆலைக் கரும்புசிலை ஐங்கணைபூ நாண்சுரும்பு
மாலைக் கிளிபுரவி மாருதம்தேர்—வேலை
கடிமுரசம் கங்குல் களிறுகுயில் காளம்
கொடிமகரம் திங்கள் குடை.

(இரத்தினச் சுருக்கம்)

இரதம் வசந்தம் மதயானை
இரவாம் இனிய பசுங்கிள்ளை
புரவி படைமங் கையர்வாசம்
பொலியு மிணர்மென் பூஞ்சோலை
பரவு படைவீ டாமுரசு
பரந்த கடலாம் கொடிமகரம்
உரவார் அன்றில் காளமதாம்
உயர்வெண் குடையிந் தநங்கனுக்கே.

சொன்ன குடைக்கால் மதிக்கிரணம்
சுரிமென் குழலார் முகசயனம்
உன்னு வதுவை அவன்பரிசை
ஓங்கித் தளிர்க்கும் வெற்றிலையாம்
சின்னம் இசைபூங் குயில்விளம்பும்
தேரின் உருள்சந் தனச்சாணை
மன்னு நறுமாந் தளிர்பட்டாம்
மகிழ்கைச் சரம்மா துளம்பூவே.

வெல்லு மதவேள் மார்பினிலே
விளங்குமாலை இலஞ்சி மஞ்சள்
புல்லும் கமுகி னரும்பாளை
பொற்ப இரட்டும் சாமரையாம்
செல்லும் அவன்கா ளாஞ்சிமலர்
செண்ப கமுமல் லிகைப்பூவும்
ஒல்லும் வேனில் அவன்திருநாள்
உடைவாள் ஓலைப் பூவாமே.

பதிக்கு மதனன் பரிக்கலனை
பகரு நறும்பூ மல்லிகையாம்
கதிக்கும் இலஞ்சி கடிவாளம்
கன்னச் சல்லி புன்னையம்பூ
மதிக்கும் அவன்மெய் இடும்கவசம்
மலிந்த விரைதோழன் வசந்தன்
விதிக்குப் பினவன் தேர்ப்பாகன்
விரும்பு மகிண னெனலாமே.

அல்லி யீட்டி வாழையிலை யமர்சால் கட்கம் அதன்தண்டு
வெல்லுந் தண்டா யுதமாகும் வேட்குந் தேவ தாரியொடு
புல்லும் இரதி எனவிருபேர் போந்த மனையார் மாரனுக்குச்
சொல்லுஞ் சாமன் என்பவனே துணையாம் தம்பி என்பாரே.
*(உசித சூடாமணி)

மன்மதனுக்குரிய வில்வகை - 5

கதிர்ப்பூம் பச்சைத் தண்டும்வெறி
கமழும் பசிய மாந்தண்டும்
மதுக்கொண் டலர வழிந்தொழுகும்
வாச முறுமல் லிகைத்தண்டும்
துதிக்குங் கருப்பந்தண்டும் அளி
சூழுங் கமலப் பூந்தண்டும்
விதுத்தண் குடையான் எடுத்தபஞ்ச
வில்லென் றுணர்ந்தோர் சொல்வாரே.

(பூவில், கருப்புவில், இருப்புவில் என மன்மதனுக்கு மூவகை வில்லுள்ளன. தேவர்மேல் எய்வது பூவில், மாநுடர் மேல் எய்வது கருப்புவில், அசுரர்மேல் எய்வது இருப்புவில் என ஆசிரிய நிகண்டு கூறும்)

மேற்கூறிய விற்களின் நாண்வகை - 5

பிச்சிக் கொடியும் மடலவிழ்க்கும்
பிரச நறுந்தா மரைநூலும்
மெச்சப் பொலிவின் மணம்வீசும்
வெட்டி வேரும் கார்வண்டும்

---

* உசிதசூடாமணி என்னும் இவ் வரியநூல் இரத்தினச் சுருக்கம் போன்றது. பொருளாட்சி தாலூகா சமீன் ஊற்று நகரிலிருந்த திரு. ச. சிதம்பரக் கவிஞர் அவர்கள் இயற்றியது. திரிசிரபுரம் இராமலிங்கம் பிள்ளை யவர்களால் டாட்சன் அச்சுக் கூடத்தில் சுபகிருது ஆண்டில் பதிப்பிக்கப்பெற்றது. இதன் சில பகுதிகள்—ஆசிரியர், நூலின்பெயர் தெரியாத நிலையில், "உவமான சங்கிரகம்" என்னும் தலைப்பின்கீழ் மதுரைச் தமிழ்ச்சங்க வெளியீடாகிய செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்துள்ளன.

பச்சைப் பசுமாந் தளிருமெனப்
பகர்ந்த தனுக்கள் ஐந்தினுக்கு
மச்சக் கொடியோன் பூட்டியநாண்
வகையைந் தென்பர் தகவுடையோர்!"
(உசித சூடாமணி)

மன்மதனுக்குரிய கணைவகை

குடைகவித்த நன்கஞ்சம் கோதறுசூ தப்பூ
கடியுமசோ கந்தளவு காவி—படையெடுத்து
வாங்காச் சமர்விளைக்கும் மாரனுக்கெப் போதுமங்கை
நீங்காக் கணையா நினை. (இரத்தினச் சுருக்கம்)

சொற்றூர் நறுமுல் லைப்பூவும் தூய வசோகின் பூவுமிகக்
கற்றூர் புகழும் மாம்பூவும் கடிசேர் தண்டா மரைப்பூவும்
பொற்பா அலர்நீ லப்பூவும் போரின் மதவேள் செங்கையினுல்
பற்றுய்த் தொடுத்து நின்றெய்யும் பஞ்ச பாணத் தடைவிதுவே.
(உசித சூடாமணி)

கணை எய்யும் இடம்

நெஞ்சில் அரவிந்தம் நீள்சூதம் கொங்கையிலே
துஞ்சும் விழியில் அசோகமாம்—வஞ்சியர்தம்
சென்னியிலே முல்லை திகழ்நீலம் அல்குலிலே
அன்னவேள் எய்யுமியல் பாம். (இரத்தினச் சுருக்கம்)

சிரசின் முல்லை நேத்திரத்தில் திகழ்அ சோகு தனம்மீது
விரவு சூதம் மார்பின்கண் விளங்கு முளரி வயங்குபொறி
அரவ படத்தில் நறுநீலம் அணுகச் சமரிற் குறிநோக்கி
உரவேள் ஐந்து கணைஎய்தற் குற்ற தானம் ஐந்தாமே.
(உசித சூடாமணி)

கணைகளின் செயல்

நினைக்கும் அரவிந்தம் நீள்பசலை மாம்பூ
அனைத்துணவு நீக்கும் அசோகு—வனத்திலுறு
முல்லை கிடைகாட்டும் மாதே முழுநீலம்
கொல்லுமதன் அம்பின் குணம். (இரத்தினச் சுருக்கம்)

ஏற்ற முல்லை கிடைகாட்டும் எதிர்ந்த வசோகு சென்றுபல
தோற்றம் காட்டி உணவகற்றும் சூதமடலிற் பசலைதரும்
தேற்ற முறுசெந் தாமரைப்பூச் சிந்தை யார நினைவிக்கும்
கூற்ற மனைய நறுநீலம் கொலும்வேள் அம்பின் குணமிதுவே.

(உசித சூடாமணி)

(கோல் - அம்பு. இலஞ்சி - மகிழம்பூ. ஓலைப்பூ - தாழம்பூ. கன்னச்சல்லி - காதிடு தூக்கங்கள். பரிசை - கேடகம்.)

மயல்கொண்ட மகளிர்செயல்

தளவ நகையார் விரகத்தில்
தயங்கிற் புகுமு கம்புரிதல்
அளகம் சரிதல் உத்தரிகம்
அகறல் உடுத்த துகில்சோர்தல்
வளைகள் சிதறல் நாணழிதல்
மடலூர் தற்கு மனந்துணிதல்
புளக முலைபொற் பசலைகொண்டு
பொருமல் அணைமுட் போன்றிடுதல்.

கரவாய் நினைதல் மெய்வெளிறல்
கருத்துள் அடங்காத் துயருறக்கண்
விரவா துயினெட் டுயிர்ப்பெறிதல்
விரும்பிக் கூடல் இழைத்தயர்தல்
பரவு ரோமப் பொலிவொடொத்த
பாவையார் சொல் வசைக்கிரங்கல்
உரவர் நகுந யமறைத்தல்
உண்ணும் பாலோ தனங்கைத்தல்.

பதிவா யுருவி னெழிநோக்கிப்
பணிந்து பரித வித்தல்கலை
மதிவேள் சகிபு கார்கடல்கான்
மந்தா நிலமற் றிவற்றினொடும்
எதிர்கண் டிரந்து புலம்புறல்கை
இரண்டு மிசைய மேலெடுத்தல்
துதிசேர் அல்குல் தனைவருடல்
சோர்வில் காமசலம் பெருக்கல்.

மூசும் விரகாக் கினியினுதல்
வெயர்த்தல் அணிமுத் தம்பொரிதல்
ஊசல் கழங்கம் மனைவிளையாட்
டுன்னுக் கிடைமெய் வறிதிருத்தல்
மாசின் உடையைப் பெயர்த்துடுத்தல்
மயங்கிப் பிதற்றித் தனியிருக்கை
கூசி மேனி நடுங்கலெனக்
கூறும் அவத்தை ஐயாறே. (உசித சூடாமணி)

மயல்கொண்ட மகளிர் பகைப் பொருள்கள்

முத்துங் களபமுந் தண்பனி நீரு முயங்குமலர்த்
தொத்துங் குளிரியுந் தூய்மலர்ப் பாயலுஞ் சூழ்ந்துபுறங்
கத்துங் கடலுங் கதலியு மாலியும் கங்குலுமிப்
பத்தும் பெரும்பகை யாய்விட்ட வாமொரு பைந்தொடிக்கே.

செய்யாச் செயல்கள்

தொடியும் பலகலனுந் தூய்க்கச்சு முத்துங்
கடிகமழ்தா ரும்புனையாள் கால—விடமனைய
சேல்விழிக்கு மையுந் திலகநுதற் குங்குமியாள்
சாலமுடி யாளளகந் தான்.

தானே கழங்கமனை தண்சுனை நீராடாள்
கானே ரிசைபயிலாள் கைக்கிளியும்—மானினமும்
பூவையையும் போற்றாள் பொருந்தவே பாங்கியருக்
கேவல்புரி யாள்களிப்ப தென்று.

கண்டு வருந்தும் பொருள்கள்

தென்றற்கும் வீணைக்கும் சேமணிக்குங் கோகிலத்துக்
கன்றிற் கமைக்காழிக் கம்புலிக்கு—நின்றரற்றும்
அன்னைக்கு மாரற் கயர்ந்தாளென் றன்னமே
என்னைக்கு மாரர் கியம்பு.

தூதுக்குரிய பொருள்கள் - 10

இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்தகுயில்
பேதை நெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை.

(இரத்தினச் சுருக்கம்)

மதனவித்தாரமாலை

காப்பு

பூமருவும் வாழ்வு பொருந்துமரு தப்பனுக்கு
மாமதன வித்தார மாலைசொல—நாமகிழத்
தாங்கயமா றுந்தலைமு னாலுகரஞ் சத்திகொண்ட
காங்கயனும் பிள்ளையார் காப்பு.

(குறிப்புரை.) பூ மருவும் வாழ்வு - தாமரைப்பூவை யிடமாகக்கொண்டு வாழும் திருமகள். "வாழ்வு" என்பது தொழில் ஆகுபெயராய்த் திருமகளை யுணர்த்திற்று. அது செல்வத்தைக் குறித்தது. செல்வம் பொருந்திய மருதப்பன் எனக் கொள்க.

நாம் மகிழ - நாம் மகிழ்ச்சியுறும்படி. மூன்றும் அடி முருகனுக்கும் விநாயகனுக்கும் பொருந்துமாறு இருபொருள்பட அமைத்திருக்கின்றார் ஆசிரியர்.

விநாயகனுக்குக் கூறுங்கால், தாம் என்பதை அசையாக நீக்கிவிட்டு, கயம் மாறு ஆம் தலைமுன் நாலு கரம் சத்திகொண்ட காங்கயன் - யானையாகிய உடம்போடு மாறுபட்ட தலையையும் முன்னே தொங்குகிற துதிக்கையையும் (முத்தொழிலும் புரியும்) வலிமையையும் கொண்ட கங்கை மைந்தனாகிய மூத்த பிள்ளையார் எனவும் பொருள் காண்க. காங்கயன் - முருகன் என்பதைக் காட்டும்; கங்கையின் மைந்தன் என விநாயகனையுங் காட்டும். 'நாம், மதனவித்தாரமாலை சொல்ல விநாயகனும் முருகனும் காவலாக நிற்பார்' என வேண்டுவோம் என்பது கருத்து.

முருகனுக்குக் கூறுங்கால், தாங்கு அயம் ஆறு ஆம் தலை முந் நாலுகரம் சத்தி கொண்ட காங்கயன் - (ஊர்தியாகித்) தாங்கிய ஆட்டுக்கடாவையும் ஆறு என்ற எண்கொண்ட தலைகளையும், பன்னிரண்டு கைகளையும், வேற்படையையும் கொண்ட முருகனாகிய இளம்பிள்ளையார் எனவும்,

நூல்

கண்ணி 330. (2 வரி ஒரு கண்ணி)

1. நீர்பூத்த வேலை யுடுத்த நிலமடந்தை
தார்பூத்த மொய்ம்பு தழீஇக்கொள்ளச்—சீர்பூத்த

2. தண்கமலை கண்களினுந் தானமங்கை பாணியினும்
வெண்கமலை நாவினிலும் வீற்றிருக்கக்—கொண்கனென்றே

3 மற்றத் திருமகளிர் சூழ மருங்குடைவாட்
கொற்றத் திருமான் குடிகொள்ள—வுற்றிருந்தோன்

1. பூத்த - பொருந்திய ; வேலை - கடல் ; உடுத்த-சுற்றிய ; நில மடந்தை - பூமியாகிய பெண். தார் - மாலை ; மொய்ம்பு - தோள்.

2. தண்கமலை - திருமகள் ; குளிர்ந்த தாமரைப் பூவில் இருப்பவள் என விரியும். தானமங்கை - கொடைத்திருமகள். பாணி - கை. வெண்கமலை - கலைமகள் ; வெள்ளைக் கமலப்பூவில் இருப்பவள் என விரியும். கொண்கன் - நாயகன் ; (கணவன்.)

3. மற்றத் திருமகளிர் - முன்னும் பின்னும் கூறுது ஒழிந்த திருமகளிர் மூவர் ; திருமகளிர் எண்மர் என்றும் அவர்களில் பூமி, அருள், கொடை, கல்வி இவற்றைத் தரும் திருமகளிரை முன் கூறினர். பின் வெற்றியைத் தரும் ஒரு திருவைக் கூறு கின்றார் ; ஆதலால் மக்கள், செல்வம், ஊக்கம் இவற்றைத் தரும் மகளிர் மூவரையும் குறிக்கும். மருங்கு - இடை ; உடைவாள் - உடையுடன் வைத்துக் கட்டப்படும் வாள் ஆயுதம் ; இது, மருங்கு உடைவாள் - இடையில் உள்ள வாள் என்றும் பொருள் கொள்ளலாம் ; கொற்றத்திருமான் - வெற்றிக்குரிய திருமகள். குடிகொள்ள உற்று இருந்தோன் - (எட்டுத் திருமகளிரும் அவரவர்க்குரிய எட்டு உறுப்புக்களிற்) குடியிருந்து வாழுமாறு (எண்வகைச் செல்வங்களும்) பொருந்த இருந்த மன்னன் ; மருதப்பன் என்க. அரசு, அருள், கொடை, கலை, மக்கள், செல்வம், ஊக்கம், வெற்றி இவைகள் ஓர் ஆண்மகனுக்குரிய செல்வங்கள் எனவும் இவற்றைத் தரும் தெய்வங்கள் திருமகளிர் எனவும் இவர்கள் முறையே வேந்தர்கள் தோளிலும் கண்ணிலும், கையிலும், நாவிலும், வயிற்றிலும், மார்பிலும், உள்ளத்திலும், உடைவாளையுடைய இடையிலும் உறைவர் எனவும் கூறுவது இலக்கிய மரபு.

4. சீவலவன் முன்னோன் திருவேங் கடநாதன்
ஆவலுறு மைந்தன்மரு தப்பனெங்கோன்—பூவுலகில்

5. ஆதரவு செய்வனென்றே யாசைகொண்டு பின்றொடரு
மாதர் தமைவருத்து மன்மதனே—காதறந்து

மன்மதன் சிறப்பும் செயலும்

6. மாயாப்ர வஞ்சம் வளர்க்குநீ கண்ணனுக்குச்
சேயாய்த் துவாரகையிற் செல்லுநாட்—டாயான

7. கோவியர்க்கு நெற்றிக் குறுவேர் வரும்பிலுன்கை
ஏவினுக்கு ளாகாதா ரில்லையே—பூவெடுத்துப்

8. போரென்று சீறிப் புறப்பட்டாற் புண்ணியவா
ஞரென்றும் பாரா யதுகண்டோம்—பார்தந்த

4. சீவலவன் என்பவன், மருதப்பன் என்ற பாட்டுடைத் தலைவனுக்குச் சிற்றப்பன் எனத் தெரிகிறது. திருவேங்கடம் என்ற பெயருடையவன் மருதப்ப மன்னனுக்குத் தந்தை எனக் காண்க.

5. மருதப்ப மன்னன் பவனிகண்டு மயல்கொண்ட மகளிருள் ஒருத்தி தன்மேற் போர்செய்யும் காமனை நோக்கி, ''மன்மதனே!'' என விளிக்கின்றாள்.

6. மாயாப் பிரபஞ்சம் - நிலையில்லதாகிய உலகத் தோற்றம்; மாயை என்பது மாயா என வடமொழியில் நிற்கும். சேய் - பிள்ளை; இவன் பெயர் பிரத்தியும்நன் என்பது. மன்மதன் கண்ணனுக்கு மகனாகப் பிறந்து பிரத்தியும்நன் என்ற பெயரிடப் பெற்றுத் துவாரகையில் வளர்ந்தான் என்று பாகவதம் கூறுகின்றது.

7. தாயான கோவியர் என்பது கண்ணனைக் காதலித்துக் கலந்திருந்த பதினாறாயிரம் ஆய மகளிரை யுணர்த்தும், கண்ணனோடு புணர்ந்தவர் யாவரும் காமனுக்குத் தாயர் ஆவர் ஆதலின். வேர்வு அரும்பில் - வேர்வை தோன்றினால்; ஏவினுக்கு உள் ஆகாதவர் - அம்புக்குள் அகப்படாதவர் (கோவியர் நெற்றி வெயர்வை கண்டவர் யாவரும் காதல்கொள்வர் என்பது கருத்து.)

8. புண்ணியவான் என்பது புகழ்வதுபோலப் பழித்தல்; அண்மை விளி.

9. வேதன் மனைவிதனை மெல்லிதழுக் குள்ளொளித்தான்
மாதவனுந் தன்மனையை மார்பின்வைத்தான்—ஈதலாற்

10. சங்கரனு மாதைத் தணந்தொருநாண் மோனமதாய்த்
துங்கவட வானிழலிற் றேன்றுதலும்—அங்கும்போய்

11. இக்குவளைத் தம்புதொடுத் தெய்தா யதுநுதலிற்
கக்கு மனற்பிறக்கக் காயமாய்த்—தைக்குமந்தக்

12. கொப்புளமாம் புண்ணைக் குளக்கணென்று சொல்வதன்றி
வெப்பமுடன் போரிலுன்னை வென்றானே—அப்படியே

13. வென்று லவனொடுத்த வேடந் தவரும
னின்றானே காமமுற்று நீத்தானே—மன்றல்புரிந்(து)

14. ஆதிக்கஞ் செய்யுமுன்னை யஞ்சியன்றோ பார்வதிக்குப்
பாதிச் சரீரம் பகுந்தளித்தான்—பூதலத்தின்

9. பார்தந்த வேதன் - உலகத்தைப் படைத்த பிரமன்; மெல் இதழ் - மெல்லிய நாக்கு. மாதவன் - திருமால்; தன் மனை - தன் மனைவியாகிய திருமகள்.

10. தணந்து - நீங்கி. மோனம் - மௌனம். (பேச்சு மூச் சின்றி மனத்தை யடக்கியிருத்தல்.) துங்கம் - உயர்ச்சி. வட ஆல் நிழல் - வடக்கின்கண்ணுள்ள ஆலமரத்தின் நிழல்.

11. இக்கு - கரும்பு; மன்மதனுக்குக் கரும்பு வில்லாதலால் 'வளைத்து' என்றார். நுதல் - நெற்றி. காயம் - புண்.

12. கொப்புளம் - உடம்பில் 'நீர்க் குமிழி' போலச் சீயுடன் தோன்றும் சிலந்தியாகிய புண்; குளம் கண் - நெற்றிக் கண்.

13. நீத்தானே-நீக்கினனோ; ஓகாரம் எதிர்மறை; நீக்கின னல்லன் என்பது கருத்து. மன்றல் புரிந்து - திருமணஞ் செய்து.

14. ஆதிக்கம் செய்யும் - அரசுபுரிகின்ற; உன்னை அஞ்சி- (காமனாகிய) உனக்குப் பயந்து: பார்வதி - உமை; பர்வதம் - மலை. மலையரசன் மகளாகப் பிறந்ததால் பார்வதி என்ற பெயர் பெற்றாள். பாதிச் சரீரம் - இடப்பாகம்; பிரமன் கலைமகளை நாவில் வைத்தான்; திருமால் திருமகளை மார்பில் வைத்தான்; சங்கரன் பார்வதியை இடப்பாகத்தில் இருத்தினான்.

15. மக்கட் பரப்பை வகுத்ததுதான் வேதாவோ
தக்கநெடு மாலோ சதாசிவனோ—முக்கணனுஞ்

16. சீதரனும் வேதாவுஞ் சிட்டித்தா ராலுலுங்
காதல்விளைத் தாண்பெண் கலவாமன்—மேதினியில்

இச்செயல்கள் எல்லாம் மன்மதனாகிய உன்னாணையால் நிகழ்ந்தன என்பது குறிப்பு. நெற்றிக் கண்ணைத் திறந்து அதினின்றெழுந்த நெருப்பினால் காமனையெரித்து நீறாக்கினான் எனச் சிவபெருமானை உயர்த்திக் கூறுவர் சைவர். அதனை ஆய்ந்தால் சிவன் கல்லாலின்கீழ் யோகத்தமர்ந்திருந்தபோது நீ சென்று பாணத்தை ஏவ அது நெற்றியிற்பட்டுப் புண்ணானது; அந்தக் கொப்புளமாகிய புண்ணைத்தான் நெற்றிக்கண் என்று கூறுகின்றார் உண்மை, இது என்பதும் நீ போர்செய்தவுடன் யோகத்தினின்று நீங்கிப் பார்வதியை மணந்து பாதியுடம்பில் வைத்தனர் என்பதனால் உன்னை அவர் கொன்று வென்றார் என்பது பொய் என்பதும் தானே விளங்கும் என்பது கருத்து. இதனால் முத்தொழில் புரியும் மூவரும் உன் ஆணைக்கு அஞ்சி ஒழுகுகின்றனர் என மன்மதனை உயர்த்திக் கூறினர் எனக் காண்க.

15. பறப்பன - பறவைகள்; ஊர்வன - பாம்பு பல்லி முதலிய உயிர்ப் பொருள்கள். பைந்தரு - பசிய மரங்கள். உன்னால் பிறப்பனவும் உண்டு என்பது நீ பெண்ணாசையையுண்டாக்குவதால் மனமயங்கிச் செய்யத்தகாத தீய தொழில்கள் புரிந்து பறவைகளாகவும் பாம்பு முதலிய உயிர்ப் பொருள்களாகவும் பலவகை மரங்களாகவும் மனிதர் மாறிப் பிறக்கின்றனர் என்று மன்மதனது பெருமை கூறினர் எனக் கொள்க.

16. வலாரி - இந்திரன். நகுடன் - நகுஷன் என்ற ஓர் அரசன். கந்தன் - முருகன். முறையே இவர்கள் மூவரும் அகலிகை, இந்திராணி, வள்ளி என்ற மங்கையர் காதலால் சேவல் ஆகவும், மலைப்பாம்பாகவும், வேங்கைமரமாகவும் மாறியதைப் பெரியோர் எடுத்துக்காட்டுவர்.

இந்திரன் அகலிகை காதலால் சேவல் உருவமாகிக் கூவினான். பின் கௌதம முனிவர் வடிவங்கொண்டு அவர் மனையுட்சென்று அவளோடு சேர்ந்தபோதுகௌதமர் வரக்கண்டு அவருக்குத் தோன்றாதவாறு பூனை யுருவங்கொண்டான். அம் முனிவர் ஞானக்கண்ணாலறிந்து இந்திரனைச் சினந்து சபித்தனர்.

நகுடன் நூறு வேள்விபுரிந்து இந்திரபதவிக்கு வந்தான். இந்திராணியைக் காணவேண்டுமென்று மிகுந்த காதலால்

17. மைந்தர் பிறப்பதுண்டோ மாரனே நீபுரியும்
அந்தவினை யாட்டென் றறியோமோ—முந்தப்

18. பறப்பனவா யூர்வனவாய்ப் பைந்தருவா யுன்னாற்
பிறப்பனவு முண்டே பெரியோர்—சிறப்புரைக்கில்

19. அந்த வலாரி யறியா நகுடனொரு
கந்த னிவர்களென் றுங் காட்டாரோ—சுந்தரமாய்

20. விண்ணெல்லாந் தான்புரந்த வேந்தனுக்கு மெய்ந்நிறைந்த
கண்ணெல்லா நீபொருத காயமன்றோ—பண்ணவர்தா

21. முன்வரவைக் கண்டா லொளிக்கவன்றோ கன்னிமையார்
பொன்வரையை விட்டுப் புறம்போகார்—மன்மதனே

22. எங்கே இருந்தாலு மென்னகலைக் கோட்டுமுனி
சங்கேத முன்னைத் தடுத்ததோ—மங்கையர்மேல்

பல்லக்குத் தாங்கிவரும் முனிவர்களின் பெருமை யறியாது "சர்ப்ப, சர்ப்ப" என்று கூறினான். ('சர்ப்ப' என்பது விரைந்து செல் என்னும் ஏவல்வினை) அதனையுணர்ந்த அகத்திய முனிவர், "சரிப்பம் ஆகக் கடவாய்" எனச் சபித்தார். உடனே ஒரு மலைப்பாம்பாயினான் நகுடன்.

முருகன் வள்ளிமேற் காதல்கொண்டு தினைப்புனம் சென்று அவளுடன் உரையாடி நிற்கும் அமையம் வேடர்கள் அங்கு வந்ததுகண்டு தனது வடிவை மறைப்பதற்காக வேங்கைமரம் ஆய் நின்றான். என்பன வரலாறுகள்.

17. வேந்தன் - இந்திரன். மெய்நிறைந்த கண் - உடம்பு நிறைந்த ஆயிரங்கண்கள். இந்திரன் காம மயக்கத்தால் அகலிகையிடஞ்சென்று முனிவர் சபிக்க ஆயிரங் கண்கள் பெற்றான் ஆதலால் அக் கண்களை மன்மதன் அம்பு தைத்த புண்கள் என்றார்.

21. பொன்வரை - மேருமலை. தேவர்கள் மேருமலையின் உச்சியில் இருக்கின்றனர் என்பது இலக்கிய மரபு.

22. சங்கேதம் - கட்டுப்பாடு. கலைக்கோட்டு முனிவர் உலகமயக்கம் நீங்கி யிருக்கவேண்டுமென்ற கட்டுப்பாட்டுடன் இளமையிலேயே கானகஞ் சென்று ஆண் பெண் என்ற வேறுபாடுகூட அறியாதவராயிருந்தார். உரோமபதன் தன் நாட்டில் மழையில்லாமை யறிந்து அம் முனிவரை அழைக்க விரும்பினான்.

23. ஆவலுறக் கோசிகன்மே லம்புதொட்டாய் சூரனுமாய்த்
தேவசபை கண்டான் திலோத்தமைக்காய்-மேவுமந்தச்

24. சூதறியாச் சுந்தோப சுந்தருயிர் மாய்த்ததுவு
மாதவனே வுன்கை வனசமே—காதன்மிக

25. ஆகிய தானவருக் காரமுத நீக்கினது
மோகினியா நீபிடித்த முல்லையே—மோகப்

மங்கையர் இருவர் அங்குச் சென்று அவரை மயக்கிக் கூட்டி வந்தனர். பின்பு மழை பெய்தது. பின்னர் அம் முனிவர் அம் மன்னன் மகளாகிய சாந்தையை மணந்து சின்னாள் வாழ்ந்து பின் கானகம் சென்றார் என்பது வரலாறு.

23. மங்கையர் (22) என்பது மேனகை திலோத்தமை என்ற அரம்பையர்களை. கோசிகன் - விசுவாமித்திரன். இம் முனிவர் தவத்தைக் குலைப்பதற்காக இந்திரன், மேனகை திலோத் தமை இவர்களை விடுக்க அவர்களைக் கண்டு ஆசைகொண்டு திலோத்தமை பின்சென்று தேவரவையைக் கண்டு பின் மீண் டான் என்பது வரலாறு.

24. சுந்தோபசுந்தர் - சுந்தன், உபசுந்தன் என்பவர். மாதவன் - திருமால். வனசம் - தாமரை மலர். சுந்தன் உப சுந்தன் என்ற இருவரும் இரணியகசிபு என்ற அசுரன் வழிவந்த மைந்தர்கள். தவம்புரிந்து ஒருவராலும் சாவாத வரத்தைப் பெற்றனர். ஒத்தவலிமை யுடையவர்; உடன் பிறந்தவர்; தேவர்கட்கும் துன்பம் விளைத்தனர். அவர்கள் திருமாலிடம் சென்று முறையிட அவர் எழிலிற் சிறந்த இளமங்கை ஒருத்தி யைப் படைத்து அவ் விருவர்பால் விடுத்தனர். கண்டு காதல் கொண்டு இருவரும் மணஞ்செய்ய விரும்பினர். அம் மங்கை கருத்தை வினவ "உங்களில் வலியவர் எவரோ அவரையே மணந்துகொள்வேன்" என்றாள். காதலால் இருவரும் கடும்போர் புரிந்து இருவரும் மாண்டனர் என்பது வரலாறு. இதனை உட்கொண்டு "உயிரை நீக்கினது மாதவனே உன்கை வனசமே" என்றார். தாமரைப்பூவாகிய அம்பினை நீ யேவியதாற் காதல் கொண்டனர். அக் காதலே சாதற்குக் காரணமாயிற்று. திருமால் ஒன்றுஞ் செய்திலர் என்பது கருத்து.

25. தானவருக்கு - அசுரர்கட்கு. ஆர் அமுதம் - அருமை யான அமிழ்தம். முல்லை - முல்லைப் பூவாகிய அம்பு.

திருப்பாற்கடலிற் பிறந்த அமுதத்தைத் தேவர்களுக்கு மட்டும் வழங்க எண்ணினர் திருமால். மாயத்தால் ஒருமோகினிப்

26. பிரம ளொருசிரசைப் பிச்செறிந்து போட்ட
தரனல்ல வுன்கை யசோகே—அரியரனோ

27. காதல்கொடுத் தேதாரு காவனத்து மாமுனிவர்
மாதவந்தீர்த் தாரதுவுன் மாம்பூவே—ஈதல்லான்

பெண்ணாக வந்து தேவர்களை யொருபுறமாகவும், அசுரர்களை யொருபுறமாகவும் இருத்தித் தேவர்களுக்கே அமுதத்தைப் பங்கிட்டு வழங்கினார். அசுரர்கள் அவளைக் கண்டு மயங்கித் தமக்கு அமுதம் வழங்காமலிருப்பதை மறந்து நெடுநேரஞ் சென்று அமுத முழுவதும் உண்டு முடிந்தபின் போர் தொடங்கினர் தேவர்களோடு என்பது கதை. இதனை மனத்திற்கொண்டு "தானவருக்கு ஆர் அமுதம் நீக்கினது மோகினியா?" என்றார். முல்லை மலரம்பை நீ ஏவ அசுரர்கள் காதல்கொண்டு மோகினியை நோக்கி மயங்கியிருந்தனர். ஆதலால் அம் முல்லைதான் அதனைச் செய்தது என்றார்.

26. சிரசு - தலை. அசோகு - அசோகம் பூவாகிய அம்பு

பிரமன், அரம்பையரைக் காதலுடன் பார்ப்பதற்கே ஐந்து தலையையும் தானே படைத்தான். பின் "சிவனைப்போல நாமும் ஐந்துதலை யுடையோம். உமை ஏன் நம்மைக் காதலுடன் நோக்கிலள்" என மனத்தில் நினைத்தான். அதனை யறிந்த சிவபெருமான் ஒரு தலையைக் கிள்ளியெறிந்தார். இது குறித்துப் "பிரமன் தலையைப் பிய்த்தது அரனல்ல: அசோகே" என்றார். அசோக மலரம்பு பாய்ந்ததால் காதலுண்டாயிற்று அவனுக்கு. அதனால் அவன் தலை கிள்ளி யெறியப்பட்டது எனக் குறித்தார்.

27. அரி அரனோ (26) என்பதை அரியோ அரனோ என ஓகாரத்தைக் கூட்டுக. ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது. இருவரும் அல்லர், உனது மாம்பூவே என்பது.

தாருகாவனத்து முனிவர்கள் எல்லாரும் "தமது வினையின் விளைவால் நன்மையும் தீமையும் உண்டாகுமேயன்றிக் கடவுளால் ஒன்றும் செய்ய இயலாது" என்று தெளிந்து செருக்குற்றிருந்தனர். அதனை யறிந்த திருமால் மோகினி வடிவமாய் அம் முனிவர்பாற் செல்லக் காதல்கொண்டு கருத்து மயங்கினர் என்பதும், அம் முனிவர் மனைவியர் அனைவரும் ஒரு காலத்திற் சிவபெருமான் பிச்சைக்கோலத்துடன் மறுகில் வரக்கண்டு காதல் கொண்டு கையற்று நின்றனர் என்பதும் புராண வரலாறு. இதனைக் குறித்து உன்மாம்பூவே மாதவத்தைத் தீர்த்தது எனக் கூறினர்.

28. மாலதிக மாந்தூண்டு மாமுனியைத் தானெரித்தான்
நீலமுகி லோவுனது நீலமே—ஞாலத்தில்

29. திக்கு விசயஞ் செலுத்திவந்த ராவணனு
மிக்குடைய போரிலுன்னை வென்றானே—இக்குத்

30. தொடுஞ்சாப நீவளைக்கத் தோற்றெருத்தி வாயா
லிடுஞ்சாப மேற்கொண் டிருந்தான்—கடுங்கோப

---

28. மால் அதிகம் ஆம் - காமமயக்கம் மிகுதியாகிய. எரித்தான் - சாம்பலாக்கினான். நீல முகில் என்பது நீல நிறத்தை யுடைய மேகம் போன்றவன் எனத் திருமாலை யுணர்த்திற்று.

தூண்டுமா முனி என்ற பெயருடையவன் சிவனை நோக்கிப் பலநாள் தவம்புரிந்தான். வரம் என்ன வேண்டும் என்று அச்சிவன் வந்து வினவ, "நான் கையால் தொட்ட பொருள்கள் வெந்து சாம்பல் ஆகும் வரம் எனக்கு வேண்டும்" என்றான். அவ்வாறே கொடுத்தேன் என்றார். அடுத்து நின்ற பச்சைமரத்தைத் தொட்டான். பட்டமரம்போலக் கரிந்தது. வரம் பலித்ததென்று கண்டு வரங்கொடுத்த சிவனையே எரித்து விடப் பின்றொடர்ந்தான். ஐவிரலி என்ற செடியில் மறைந்து திருமாலை நினைந்தார். அவர் மோகினிப் பெண்ணாகி வந்து அம் முனிமுன் நின்றார். கண்டு மயல்கொண்டார். முனியை நீரிற் குளித்துவரும்படி அப் பெண் கூறினள். குளிக்கச் சென்று நீர் சிறிதேயிருந்ததாற் கையால் அள்ளித் தன் தலையில் ஊற்றித் தேய்த்தான். தலையைத் தொட்டவுடன் அம் முனி சாம்பலாகி மடிந்தான் என்பது கதை. அம் முனிவன் பெயர் பத்மாசுரன் என்றுங் கூறுவர். மன்மதனே! நீ நீல மலரம்பை யேவியதால் அம் முனிவன் மாலதிகம் கொண்டான். அதனால் மாய்ந்தானே யன்றித் திருமால் மோகினியாய் வந்து அவனைக் கொன்றிலர் என்ற கருத்துத் தோன்ற "நீலமுகிலோ உனது நீலமே" எனக் குறித்தார்.

29. திக்கு விஜயம் - எல்லாத் திசையிலும் தனது வெற்றி. இக்கு - கரும்பு.

30. தொடும் சாபம் - (நீ கை) தொட்ட (கரும்பாகிய) வில். வாயால் இடும் சாபம் - வாக்கினால் கூறிய சாபமொழி. சாபம் - சபித்தல். இது "இன்னவாறு கெடுக" என வைதலை யுணர்த்தும்.

ஒருத்தி என்பது அரம்பை என்ற தெய்வப் பெண்ணைக் குறிக்கும். அரம்பையை அவள் உடன்பாடின்றி வலிதிற் பற்றிப்

31\. மாராவுன் கைக்கணையான் மாமோகங் கொண்டவரை
யாராலுஞ் சொல்லி யடக்குவதோ—போராலே

32\. தைவருமுன் னைம்பாலே தம்பி தமையனெனு
மைவருமோர் மாதை அநுபவித்தார்—மெய்வரம்பு

33\. காமியருக் குண்டோநின் கைக்கணையால் ராதையெனு
மாமிதனக் காசைகொண்டான் மாயோனும்—ஆமப்

34\. பிரமன் றிலோத்தமையைப் பிள்ளையென்று பார்த்தோ
சுரதவகை செய்யத் தொடர்ந்தான்—குருவான

35\. பொன்மனைவி தன்னைப் புணர்ந்தான் மதிக்கடவுண்
மன்மதனே யுன்மகிமை மட்டுண்டோ—உன்மலைவால்

புணர்ந்தபோது அவள் சினந்து இராவணனை நோக்கி, "நீ இனி எம்மங்கையரையேனும் உடன்பாடின்றித் தீண்டில் உயிரிழப்பாய்" எனச் சபித்தனள் அச் சாபத்தை யுணர்த்தும். அன்றியும், வேதவதி தவஞ்செய்திருந்தபோது உடன்பாடின்றி அவளைக் கைப்பற்ற, அவள் சினந்து "ஏடா, உனக்கும் இலங்கைக்கும், உன் கிளைக்கும் கேடாகத் தோன்றுவேன்" என்று சபித்துத் தீயிற் பாய்ந்திறந்ததால் அச் சாபத்தையும் கூறலாம். இதனைக் கூறும்போது "ஒருத்தி" என்பது வேதவதியை யுணர்த்தும்.

32\. தைவரும் - தடவும். இஃது உடம்பைத் தடவும் அம்பு என்று பாய்ந்து ஊடுருவிச் செல்வதைக் குறிப்பால் உணர்த்திற்று.

ஐவர் - பாண்டுவின் புதல்வர்கள். தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற ஐவரையும் உணர்த்தும். ஓர் மாது - பாஞ்சாலி. மெய் - உண்மை. வரம்பு - ஒழுங்கு.

33\. மாயோன்-திருமால். கண்ணன் ஆகப் பிறந்து இடைப்பாடியில் வளர்ந்தபோது தன் அத்தையாகிய இராதை என்பவளைப் புணர்ந்து பிரியாதிருந்தான். அதனால் இவனுக்கு "இராதா கிருஷ்ணன்" என்ற பெயரும் அமைந்தது என அறியலாம்.

34\. சுரதவகை - புணர்ச்சியின் விதம். கொக்கோக நூலிற் கூறப்பட்ட பலவகைப் புணர்ச்சியை உணர்த்தும்.

35\. பொன் - வியாழன், தேவர்கள் யாவர்க்கும் குருவாயிருப்பவன். வடமொழியிற் "பிரகஸ்பதி" என்பர். அவன்

36. ஈசன் றுரோணன் மனைவியல்குற் கேக்கமுற்றுத்
தூசுகளை ந் தையமிடச் சொன்னனே—பூசலால்

37. உன்னியவு னம்புக் குடைந்துமா லாயர்குலக்
கன்னியர்தஞ் சேலை கவர்ந்தானே—இன்னங்

38. குருகுலவேந் தன்பரவர் கொம்பனையைச் சேர்ந்தான்
முருகன் குறத்திநல மொய்த்தான்—உருவிலியுன்

39. பேரம்பு தைத்தாற் பெருமைகுலம் பார்ப்பதுண்டோ
ஈரம் பெருநெருப்புக் கில்லையே—மாரனே

மனைவி தாரை. மதிக்கடவுள் - சந்திரனாகிய தெய்வம். சந்திரன் தன் குருவாகிய வியாழன் மனைவி தாரையைப் புணர்ந்து புதனைப் பெற்றான் என்பது கதை.

36. துரோணன் மனைவி - கிருபி என்ற பெயருடையவள். தூசு களைந்து - சேலையை நீக்கி (உடை உடுத்தாமல்.) கிருபி தனக்கு மகவில்லாக் குறையை நீக்கக் கருதி வருவோர் விருப்பப்படி உணவு கொடுக்கும் விரதமேற்கொண்டிருந்தாள். அவள் மனவலிமை யறிந்து மகவு அருள நினைந்த சிவபெருமான் ஒரு முனிவராகச் சென்று "ஆடையின்றி வந்து எனக்கு உணவு படைத்தால் உண்பேன்; இல்லையெனில் உன் மனையில் உண்ணேன்" என்றார். அவ்வாறே அவள் வந்து உணவு படைத்தாள். அவள் மனவலிமைகண்டு பின் அசுவத்தாமா என்ற மகவு குதிரை வயிற்றிற் பிறக்குமாறு அருள் புரிந்தார். இதனை அல்குலைக் காணவேண்டுமென்ற ஏக்கத்தினால் தூசுகளைந்து ஐயம் இடச் சொன்னான் சிவன் எனக் கற்பித்துக் காமனைச் சிறப்பித்தார். பூசலால் - (உனது) போரினால்.

37. கண்ணன் கோவியர் நீராடும்போது அவர்கள் சேலை முழுவதையும் வாரிக்கொண்டுபோய்க் குருந்த மரத்தில் ஒளிந்திருந்ததும் உன் அம்பு பாய்ந்ததால்தான் என்றார்.

38. குருகுலவேந்தன் - சந்தனுமன்னன். பரதவர் கொம்பனை - பரதவர் குலமகள், அவள் பெயர் மச்சகந்தி என்பது. பரிமளகந்தி என்பது மற்றொரு பெயர். பராசர் என்ற முனிவர் இவளது மச்சகந்தத்தை மாற்றிப் புணர்ந்து அவளிடம் வேத வியாசரைப் பிறப்பித்தார். அதன்பின் பரிமளகந்தி என்ற பெயர் வழங்கியது. அவளைச் சந்தனு கண்டு மணந்தான். இது பாரதக் கதை.

40. மாது விரும்பு மணவாள னைத்தனக்குத்
தூது விடுத்தான் சுரர்பதிதான்—ஏதுசெய்வான்

41. மங்கைதம யந்தி மறுக்க நளன்வடிவாய்ச்
சங்கையுறச் சென்றானுன் சண்டைக்காய்த்—துங்கமலர்

42. அம்பா லரம்பையருக் காசைகொண்டோர் வேள்விசெய்து
வெம்பாத புங்கவராய் மேவுவார்—தெம்பாக

43. எந்தவித நீநினைத்தா யென்றாலு மூவுலகு
மந்த விதநடக்கு மங்கசனே—வந்தவர்க்குத்

குறத்தி - வள்ளிநாயகி. உருவிலி - மன்மதன். அநங்கன் என்பது வடமொழி. சிவன் தனது நெற்றிக்கண்ணால் எரித்துச் சாம்பலானபின் அவன் மனைவி இரதி கண்ணுக்குமட்டும் உருவம் தோன்றும்படி வரங் கொடுத்ததால் "உருவிலி" எனப் பட்டான்.

40. மாது - பெண். அது பின் தமயந்தி என வருவதனால் அவளை யுணர்த்திற்று குறிப்பால். மணவாளன் - நளன். சுரர்பதி - தேவர்கட்கு அரசன் (இந்திரன்.)

40—41. உன் சண்டைக்காகத் தமயந்தி மணவாளனாக விரும்பியிருக்கும் நளனையே அவளிடத்திற்குத் தூதாக விடுத்தான். அதுவும் அன்றித் தேவனாகிய தனது வடிவை மறைத்து (நளனாகிய) மனிதவடிவங்கொண்டு மணமண்டபத்தில் இருந்தான். உன் சண்டையால் காமமிகுந்து மதிமயங்கி அறிவு கெட்டதாலன்றோ இத்தகைய இழிவாகிய செயல்புரிந்தான் என்று எடுத்து விளக்கினர்.

இந்திரன், யமன், அக்கினி, வருணன் ஆகிய நால்வரும் வானுலகத்திலிருந்து தமயந்தியை மணக்க விழைந்து வந்தனர் என்பதும் இடையில்வந்த நளனைக்கண்டு இந்திரன் எங்கட்குத் தூது சொல்லி வா என்று தமயந்தியிடம் விடுக்க அவன் சென்று திரும்பிவந்து, "அவள் என்னைத்தான் மணப்பதாகக் கூறுகிறாள்; உங்களில் ஒருவரையும் மணக்க விருப்பில்லை" என மறுத்தனள் என்று கூறக்கேட்டு அந் நால்வரும் நளனுருவமாக மண்டபத்திற் போய்த் தங்கியிருந்தனர் என்பதும் நளன் கதை.

42. வெம்பாத - மெலியாத. புங்கவர் - தேவர். தெம்பு ஆக - தெளிவாக. இது தென்பு என்பதன் மரூஉ. நூறு வேள்வி செய்தவர் இந்திரபதவியை யெய்துவர் என்ற இலக்கியமரபு குறித்து வேள்விசெய்து, புங்கவராய் மேவுவார் என்றார்.

44. தானே சுகந்தரலாற் சங்கரனென் றார்சிவனை
யானேறி யின்ப மருள்வனென்றே—ஊனே

45. யுலர்ந்து தவசா லொடுங்கிப் புலனும்
புலர்ந்து சிறைக்கோலம் போல—அலைந்தோர்கள்

46. இம்மையிலே பட்டசள மெல்லாங்கண் டோமினிமேற்
செம்மையுட னென்னசுகந் தேடுவரோ—அம்மம்மா

47. காமா வுனைப்பணியுங் காமுகரைக் கண்டோமே
யாமா மலர்ப்பா யமளியின்மேற்—றாமே

48. சயன சுகம்பெறுவார் சார்ந்தபுல னைந்தும்
பயனுறவே யின்பம் பலிக்க—மயலகலப்

49. பக்கந் தனிலிருந்து பாவையர்கை மேற்கொடுக்கச்
சொர்க்கம் பெறுவார் சுகம்பெறுவார்—மிக்க

---

44. சங்கரன் என்பது பரமசிவன் பரியாயப் பெயர்களில் ஒன்று. சம் - இனிமை. கரன் - உடையவன் எனப் பொருள்படும். யாவருக்கும் இன்பத்தை அளிப்பவன் என்ற கருத்தினால் அப்பெயர் சிவனுக்கு அமைந்தது எனக் காரணங்காட்டி அதனையும் காம வின்பந்தான் என்றார். ஆன் ஏறி - காளை வாகனத்தில் ஏறியவன் எனச் சிவனைக் குறிக்கின்றது.

45. தவசு - தவம். சிறைக்கோலம் போல - சிறைக் கூடத்திலிருப்பவர் வடிவம்போல. உலர்ந்து, ஒடுங்கி, புலர்ந்து அதனாற் சிறைக்கோலம் போல எனக் கூட்டுக.

46. இம்மை - இப்பிறப்பு. இனிமேல் - இறந்த பின்பு. சளம் - துன்பம். அம்மா அம்மா என்பது அம்மம்மா எனக் குறைந்து வியப்பிடைச்சொல்லாய் நின்றது; அடுக்குத்தொடர். தேடுவரோ இதில் ஓகாரம் எதிர்மறை. தேடார் என்பது பொருள். சிவன் இன்பம் அருள்வானென நினைத்துத் தவஞ்செய்தவர் பட்ட துன்பத்தைக் கண்டோமேயன்றி இன்பம் எய்தியதை நாம் கண்டிலோம் என்பது கருத்து.

47. காமுகர் - காம வின்பத்தையே விரும்பியவர், தூர்த்தர், விடர் என்பதும் அவர் பெயரே. யாம் - நாம். மா மலர்பாய் அமளி - சிறந்த பூப்பரப்பிய படுக்கை.

49. சொர்க்கம் - சுவர்க்க வின்பம், கொங்கையையும் குறிக்கும். இப் பிறப்பிற் சுவர்க்க வின்பத்தைப் பெறுகின்றனர் என இரு பொருள் பயந்து நின்றது அச்சொல்.

50. விதவையொரு பார்ப்பனியுன் வெங்கணையி னாலே
அதம மிகுங்காமி யாகி—மதமாய்க்

51. கொலைபுரிந்துங் கட்குடித்துங் கோத்திரத்தார் தன்னை
நிலைபிரிந்துந் தன்னுருவ நீத்தும்—புலைமகளாய்த்

52. தீமையே செய்துஞ் சிவலோகஞ் சார்ந்ததினாற்
காமமே மோக்கமெனக் கண்டோமே—காமக்

53. கவளமுறு சித்திராங்கி காதலின்பப் பேறு
தவறினசா ரங்க தரனும்—அவனை

54. அறுத்தனர்கை காலையென்று லங்கசனே யுன்னை
மறுத்தவருக் கிவ்விதம்வா ராதோ—குறித்துரைக்கில்

52. மோகம் - முத்தி.

கூறப்படுங் கதை திருவிளையாடற் புராணம் மாபாதகந் தீர்த்த படலத்தில் உள்ளதுபோலத் தோன்றுகிறது. ஆயினும் அதில் அப் பார்ப்பனியைச் சேர்ந்த பார்ப்பனன் சிவலோகம் அடைந்ததாகக் கூறுகின்றதே யொழிய அவ் விதவைப் பார்ப்பனி மதுரை வந்ததாகக் கூறப்பட்டிலது. அவள் எங்குச் சென்றாள் என்பது ஆயத்தக்கது. வேறு எத்தலத்தில் நிகழ்ந்த செயலோ? ஆய்ந்து காண்க. (50—52)

53—54. சாரங்கதரன் ஓர் இளவரசன். அவன் தந்தை அவனை யறியாமல் அவனுக்கு மணம்புரிவதாக அவன் ஓவியத்தைக் காட்டிச் சூழ்ச்சியாகச் சித்திராங்கியை மணம்புரிந்து கொண்டு வந்தான். தனக்கு மனைவியாக்க நினைத்து அவள்பாற் சென்றான். கிழவனைக் கண்டவுடன் நாற்பது நாள் நோன்பு என்று கூறி அவனுடன் புணராது தனித்திருந்தாள். சாரங்கதரன் ஒருநாள் புறாவை விடுத்து விளையாடினான். அப் புறா சித்திராங்கி மனைக்குட் சென்றது. அவள் அதனைப் பிடித்துப் புறாவிற் குரியவன் வந்து கேட்டாற் கொடுப்பேன் என்றுகூறி வந்தவரை வெருட்டினாள். சாரங்கதரன் சென்று புறாவைக் கேட்டனன். கண்டு தன் கணவன் என வரலாறுகூறித் தழுவத் தொடங்கினாள். அவன் சிற்றன்னை யெனத் தீண்டாது ஓடிவந்தான். அவட்குச் சினமூண்டது. தந்தையிடம் உன் மைந்தன் என்னை வலிந்து பற்றினான் எனப் படாப்பழி கூறினள். தந்தை, மைந்தனைக் கால்கைகளை வெட்டும்படி உத்தரவு செய்தான். இது சாரங்கதரன் கதை.

55. இல்லறமே நல்லறமா மேற்றபொருண் மைந்தரென்று
சொல்ல வருவதுமுன் சூழ்ச்சியே—நல்ல

56. அரிசியுந்தண் ணீருமனை லும்வெவ்வே றுரு
லுருசியுடன் சோருவ துண்டோ—பரிசித்துப்

57. பாகந் தரச்சமைக்கும் பான்மைபோ னீங்காமற்
போகங் கொடுத்துப் பொருத்துவா—யாகையினுல்

58. என்னதொழில் செய்து மெடாதவித்தை தானெடுத்துங்
கன்னமிட்டு நாட்டிற் களவாண்டு-மிந்நிலத்தோர்

59. தன்மனைவி மக்களுக்குத் தக்கபொருட் டேடுவது
மன்மதனே நீபுரிந்த மாயமன்றே—நன்மையாய்

60. முன்னூட்டுப் பேய்க்கூட்டு முன்னேபூ சாரியெடுத்
துன்னூட்டுக் கென்று லொளிப்பானே—யிந்நாட்டில்

61. உன்பூசைக் கென்று லுடையவரை விற்பார்கள்
வன்பூசைச் சைவர் மதவேளே—அன்பாலே

---

55. மக்கள் யாவரையும் உன் வசப்படுத்தி "இல்லறமே நல்லறம் என்றும், மக்களே சிறந்தபொருள் என்றும் கூறும்படி வஞ்சகமாகச் செய்திருக்கிறாய்" என்று தோன்ற "சொல்ல வருவதும் உன் சூழ்ச்சியே" என்றார். இல்லறமல்லது நல்லற மன்று, மங்கலமென்ப மனைமாட்சி, தம்பொருள் என்பதம் மக்கள், என்ற முதுரைகளைக் காண்க.

56. பரிசித்து - தொட்டு.

60. ஊட்டு - பலி. தெய்வங்கட்குப் படைக்கும் உணவு முழுவதையும் உணர்த்தும். கோயிலிற் பலி யுணவுகளை முதலின் முன்னோடி என்று நிறுத்தியிருக்கும் பேய்களுக்குப் படைத்துப் பின் உள்ளிருக்கும் தெய்வத்திற்குப் படைத்து வணங்குவது இயல்பு. அப் பேய்களுக்குப் படைக்கு முன்னே பூசாரி காமக் கிழத்தியை வைத்திருந்தான் எனின் அவளுக்கு முதலிற் பலி யுணவிற் சிறிது ஒளித்துவைத்துப் பின்கொண்டு சென்று கொடுப்பான். அதனைக்கருதி உன்னூட்டு என்றார். காதல்கருதிக் கொடுப்பதால் மன்மதனுடைய ஊட்டு ஆயிற்று.

61. உடையவர்-சிவபெருமான். இஃது இங்குச் சிவலிங்கத் தைக் குறிக்கும். சைவர் போகத்தைப் பொருளாகக் கொண் டவர் எனிற் காதற்பரத்தைக்குப் பொருள் கொடுப்பது கருதிச் சிவலிங்கத்தையும் விற்றுவிடுவர் என்பது கருத்து.

62. காமனே காவிகட்டுங் கள்ளருறங் காமனடுச்
சாமமிருந் துன்பதத்தைச் சந்திப்பார்—நேமமிகு

63. பத்தியுடன் கோயில்புகும் பத்தர்செய்தி யத்தனையுஞ்
சித்திரமன் றேவெளியிற் செப்பவோ—வத்தனுக்குச்

64. செங்கை குவிப்பார் திரும்பிநின்று தேவடியார்
கொங்கைதனைப் பார்ப்பார் குறிப்பாக—வங்கவர்கள்

65. நேமிக்குஞ் சிந்தை நினைவுமட வார்மேலே
சாமிக்குக் கும்பிடல்லோ தக்கினது—காமியர்கள்

66. பற்றுடனே யாலயத்தைப் பத்துவிசை யெட்டுவிசை
சுற்றுவது மாதர்வரச் சுற்றுவதே—கற்றறிந்தால்

67. ஈசனுக்காய்க் கோயிலுக்கு ளேன்போவார் காமாவுன்
பூசலுக்காய்க் கோயிலுக்குப் போவாரே—நேசமிகுஞ்

68. சித்தசனே யுன்னுடைய சேனையெனு மாதர்வடி
வத்தனையு முன்கோல மல்லவோ—வத்தகைய

69. உன்கணையாம் பார்வை யுருட்டி விழிக்கையிலே
வன்கணராம் வாலிபரும் வாடாரோ—நன்குடனே

---

62. காவிகட்டும் கள்ளர் என்றது போலித்துறவிகளை. நேமம் - நியமம் அல்லது ஒழுங்கு. உன் பதத்தைச் சந்திப்பார் என்றது மாதரைப்புணர்வர் என்பதைக் குறிப்பாலுணர்த்தும்.

63. நேமிக்கும் - நியமிக்கும். இது பதிக்கும் எனப் பொருள்படும் தக்கினது தங்கினது இது மிஞ்சியிருப்பது என்ற பொருளைத் தந்தது.

67. உன் பூசலுக்காய் - உன்னுடைய போரினுக்கு ஆற்ருது. காதலுணர்ச்சி மீதூர அதனைப் பொறுக்கவியலாது கணிகையரைக் கண்டு வரலாம் என்ற எண்ணத்தாற் பெரிய கோயிலுக்குப் பலர் செல்வர் என்ற கருத்தினுல் "உன் பூசலுக்காய்க் கோவிலுக்குட் போவாரே" என்ருர்.

68—69 சித்தசன் - மன்மதன். மன்மதனுக்குச் சேனை மாதர்கள். ஆதலால் மாதர்கள் எல்லாம் உன் வடிவம்; உன்னுடைய் கணையாகிய கண்ணையுருட்டி விழித்தால் வன்கண்மையுடையவரும் வாடி மயங்குவர் என்ருர்.

தூர்த்தர் செயலும் கணிகையர் செயலும்

70. சுல்லச் சலவைகட்டிக் கொண்டைத் தலையசைத்து
மெல்ல நடந்திருகை வீசியே—செல்லையிலே

71. முன்கையிற் சந்தனத்தை மூக்காலே மோந்துகொண்டு
தன்கையி லாழி தனைத்திருத்திப்—பொன்குலவு

72. காதுக் கடுக்கனிலே கையைவைத்துப் பூசியசவ்
வாதைத் துடைத்து மணம்பார்த்து—வீதியிலே

73. தூர்த்தர்வரு வார்களவர் தூரநின்று பார்க்கையிலே
வார்த்தைசொல்லா ரிந்த மடவார்கள்—பார்த்து

74. நெளித்தி ரவிக்கை நெகிழ்த்துநகிற் சேலை
அளித்து மனைக்கே அகல்வார்—வளித்தேரில்

75. ஏறியசீ மான்விளையாட் டென்னசொல்வேன் காமுகர்மேற்
சீறிமலர்ப் பாணமெல்லாஞ் சிந்துவா—யாறுவரோ

---

70 முதல் 73 வரையுள்ள கண்ணிகளிற் பரத்தையரை நாடி வரும் தூர்த்தர் செயல் கூறுகின்றார்.

70. சுல்லச்சலவை - மெல்லிய ஆடை, சல்லாப் புடைவை என்றுங் கூறுவர் இதனை.

71. ஆழி - மோதிரம். இதனைக் கணையாழி என்று கூறுவது வழக்கம்.

73. தூர்த்தர் - பல மாதரை விரும்புவோர். காமுகர், விடர் எனவும் கூறுவர் இவரை.

73—74. காமுகரைக் கண்டவுடன் நேர்நின்று உரையாடாமல் நாணமுடையவர்கள் போலப் பார்த்தவுடன் முகத்தைத் திருப்பி உடம்பை வளைத்துக் கச்சை யவிழ்த்துக் கொங்கையைச் சிறிது காட்டி விரைவில் மனைக்குட்புகுவார் எனக் கணிகையரியல்பு கூறினர். வளித்தேர் - தென்றற்காற்றாகிய தேர்.

75. சீமான் என்பது அன்மைவிளி. சீமானே! உன் விளையாட்டு எனக்கொள்க.

76 முதல் 91 வரையுள்ள கண்ணிகள் அடிமடக்காயமைந்து நிற்கின்றன. அடிமடக்கை இயமகம் என்று புலவர் புகல்வர். திரிபு என்பது அடிமுதலெழுத்து ஒன்றுமட்டும் வேறுபட்டு நிற்பது.

76. காமனையும் போர்க்குவரக் காட்டினளேழையிலக்
காமனையிற் சென்றாளே கன்னெஞ்சி—சோமன்

77. வருந்திவலை யானபனி வாட்டுமினி நெஞ்சே
வருந்தி வலைபுகுந்த மான்போல்—திருந்தியே

78. செவ்விதழைப் பானவளைச் சீறடிதொட் டாறுலுஞ்
செவ்விதழைப் பானமுறச் செய்தோமோ—கவ்வையினுள்

79. மட்டுப் படுத்தி மலர்க்குழலைப் போகாமன்
மட்டுப் படுத்தி மறித்தோமோ—விட்டுவிட்டோம்

80. என்று புலம்பியவர்க் கின்பம்வரத் தூதனுப்பி
என்றுபுகும் வேளையங்கே யெய்தியே—நன்றுடனே

---

76 முதல் 80 வரை காமுகர் நினைவும் செயலுங்கூறிப் பின் 82 முதல் 91 வரை பரத்தையர் உரையும் செயலும் விரிக்கின்றார்.

76. காமனையும் - மன்மதனையும். ஏழை - பெண். இலக்கு ஆம் மனையில் - (கண்ணிற்குத் தோன்றும்) குறிப்பாகிய இல்லத்தில். கல்நெஞ்சி - கற்போன்ற மனமுள்ளவள்.

77. சோமன்வரும் திவலை ஆனபனி - சந்திரன் வருவான், துளியாகியபனி. இவைகள் வாட்டும் எனக் கூட்டுக. வருந்தி வலைபுகுந்த மான்போல் - வலையிற்புகுந்த மான்போல் வருந்தி எனமாற்றுக.

78. செவ்வி தழைப்பான் அவளை - நம் அழகு தழைக்கும் பொருட்டு அவளை என்றும், செவ்வி தழைப்பு ஆனவளை - அழகின் பெருக்கமாகியவளை என்றும் இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்.

அவளை: உருபுமயக்கம்; அவளது சீறடி, அவளது செவ்விதழ் என ஆறனுருபு விரித்துக்கொள்க. செம்மை+இதழ்-செவ்விதழ்-சிவந்த உதடு. பானம்உற - பருகுவதற்குப் பொருந்தும்படி.

79. (78) கவ்வையினால் - (பூவில் உள்ள) தேனோடு, மட்டு படு உத்தி மலர்க்குழல் - மணமும் பொருந்திய தலைக்கோலத்தை யுடைய பூப்புனைந்த கூந்தலையுடையாள். உத்தி - திருவும் பிறையும் சேர்ந்த தலைக்கோலம் என்னும் ஓர் அணி. இதனை யணிந்த கூந்தல் எனக்கொள்க. மட்டுப்படுத்தி - அளவுபடுத்தி. இஃது "என்னளவில் நில் என்று கூறி" எனப் பொருள்பட்டது.

80. என்று புலம்பி - என்று கூறி வருந்தி. காட்டினாள், சென்றாள், (76) சோமன்வரும், பனிவாட்டும், (77) என வருந்தி,

81\. கைக்கணையு நீயுங் கடக்கநிற்கக் காரிகைகொங்
கைக்கணையு மின்பநலங் காண்பாரோ—மிக்குடனே

82\. துப்பா ரிதழுஞ் சுருளுமொன்றாய்த் தந்துசுவைத்
துப்பாரென் பார்மலருஞ் சூட்டுவார்—மெய்ப்பாகத்

83\. துத்தா மடித்த சுருளிலே பாதிகடித்
துத்தாவென் றேதிரும்பச் சொல்லுவார்—துய்த்தாற்

84\. கசக்குமென்றி ராமற் கதுப்பைச் சுவைத்துக்
கசக்குமென்று நீவு நகிற் காம்பை—வசப்படுத்தி

பானமுறச் செய்தோமோ, (78) போகாமல் மறித்தோமோ, விட்டுவிட்டோம் (79) (இனி யென்செய்வோம்) என்று (ஒரு பரத்தையைக் கண்ட காமுகன்) புலம்புவன் என அவன் இயல்பு விளக்கினர். என்று புகும்வேளை - சூரியன் (மலையிற்) புகும் அமையம் (இரவு) நன்று உடனே - நலமுடன்.

81\. கைக்கணையும் - உனது கையில் உள்ள அம்பும். கடக்க நிற்க - (தூர்த்தரையும் பரத்தையரையும் அடுத்துநில்லாமல்) (நெடுந்தூரம்) கடந்துநின்றால் ; கொங்கைக்கு அணையும் இன்பம் நலம் காண்பாரோ-கொங்கையின்மேற் புணரும் இன்ப நலத்தை நுகர்வாரோ (நுகரார்.)

82\. துப்புஆர் இதழும் சுருளும் - பவளம்போன்ற உதட்டினையும், வெற்றிலைச் சுருளையும். தந்து சுவைத்துப் பார் என்பார் - கொடுத்து (இவ்விரண்டினையும்) (நாவிற்) சுவைத்துப் பார்ப்பாய் என்று சொல்வார் (பரத்தையர்) என்க.

83\. மெய் பாகத்து தாம் மடித்த - உண்மையோடு பக்குவமாகத் தாங்கள் மடித்துக்கொடுக்கும் ; சுருள் என்க. பாதி கடித்துத்தா என்று - (அச்சுருளிற்) பாதியை எனக்குக் கடித்துக் கொடு என்று ; சொல்வார் எனக் கூட்டுக. துய்த்தால் - (கடித்து) சுவைத்தால்.

84\. கசக்கும் என்று இராமல் - கைக்கும் (கசப்பாக இருக்கும்) என்று நினைத்து (வறிதே) இராமல் ; கதுப்பைச் சுவைத்து - கன்னத்தைச் சுவைத்து. கசக்கும் மென்று நீவும் நகிற்காம்பை, "நகிற்காம்பை மென்று கசக்கும் நீவும்" என மாற்றிக் கூட்டி எனது தனக் கண்களைப் பல்லாற் கடித்து மென்று கையாற் கசக்குங்கள், பின் தடவுங்கள் என்று பொருள் கொள்க. பரத்தையர் கூற்று இது. நகில் - கொங்கை

85. ஆடவா வென்னை யலக்கழிப்ப தென்னொருமுத்
தாடவா வென்பா ரவசரமாக்—கூடக்

86. கடிதடத்துக் குள்ளே கரிகரஞ்செய் தாலுங்
கடிதடக்கக் கூடுதில்லைக் காமம்—விடுவிடடா

87. கைச்சரச லீலையிலே காமசலம் போகுதையோ
கைச்சரசமாகுதென்பார் கைநெரிப்பா—ரிச்சைகொண்ட

88. காசலைக்கு மேலாங் கலவிச் சரிபோகங்
காசலைக்கு மாமுலையார் காட்டுவா—ராசை

89. வரத்துடைக்குட் சேர்த்து மதனசல ராசி
வரத்துடைக்கச் சற்றே மயங்கி—யுரைப்பதிலே

90. சங்கையும்பா ராமற் றனரே கையுநெரிந்த
சங்கையும்பார்ப் பாரடித்துத் தள்ளுவார்—சிங்கார

---

85. ஆடவா - ஆண்மகனே! அலக்கழிப்பது - துன்பப் படுத்துவது. என் - என்ன. ஒருமுத்து - ஒரு முத்தங்கொடு. ஆடவா - விளையாட வருக. என்பர் அவசரமாக்கூட - விரைவிற் கூடுக என்று சொல்வர் எனமாற்றுக.

86. கடிதடம் - அல்குல், பெண்குறி. கரிகரம் - புணர்ச்சி யில் ஒரு கரணம். கடிது அடக்கக்கூடுது இல்லை - (காமத்தை) விரைவில் அடக்கமுடியவில்லை. கடிது - கொடியது (காமம்) என்றும் பொருள் கொள்ளலாம்.

87. கை சரச லீலையிலே - கையாற்றொட்டு விளையாடும் போதிலே. கைச்ச ரசம் ஆகுது - வெறுத்த (சுவையில்லாத) இன்பமாகிறது (இது.)

88. காசு அலைக்கு மேலாம் - மணிகளையுடைய கடலுக்கும் மேலாகிய. காசு அலைக்கும் மாமுலையார்-பொற்காசுகள் (கிடந்து) வருத்துகின்ற பெரிய கொங்கைகளையுடைய பரத்தையர்.

89. ஆசை வர துடைக்குள் சேர்த்து - காமம் பெருகும்படி இரு துடைக்குள் (ஆடவரை இறுக) சேர்க்க. மதன சலராசி - காமநீர்ப் பெருக்கு. வரத்து உடைக்க - வருவது கரைகடந்து செல்ல.

90. சங்கையும் பாராமல் - (உரைப்பதிலே) மதிப்பையும் ஆராயாமல். தனரேகை - கொங்கையில் உள்ள வடுக்கள் (பல் நகம்பட்ட குறிகள்.) நெரிந்த சங்கையும் - உடைந்த வளையல் களையும்.

91. எத்தனையோ லீலைசெய்தா ளெங்கேயுங் காணுத
எத்தனையேன் கூடினே னென்றுசொல்வா-ரத்தனையும்

92. உன்னுன் முடிந்ததென்று லுன்மாய மாரறிவார்
மின்னு ரையுமயக்கும் வில்வேளே—உன்னூலாங்

93. கொக்கோக மார்க்கமுடன் கூடுமினை யோர்மீதி
லக்கோக மாமுலையா ராசைகொள்ள—மிக்காய்

94. இருவருக்குங் காமமய லேற்றுமிந்த வித்தை
யுருவிலிக்கல் லான்மற்றோர்க் குண்டோ—செருவில்

மடலேறுதல்

95. அடலேறு முன்பகழிக் காற்று தினையோர்
மடலே றுவது வழக்கா—லிடமுடைய

---

91. எத்தனையோ லீலை - எவ்வளவோ கலவி விளையாடல். எத்தனை ஏன் கூடினேன் - ஏமாற்றுவோனை நான் ஏன் புணர்ந்தேன் ; என்று சொல்வார் அத்தனையும் உன்னுல் முடிந்தது.

92. இன்பத்தையே விரும்பாமல், பொருளையே விரும்பிப் புணரும் விலை மகளிரும், தம்மையறியாது, காதலால் வந்த ஆடவரைக் கலவி விளையாடல் புரியும்படி தாமே கூறிப், புணர்ச்சியில் மயங்கிப், பின் எழுந்து, குறிகளைக் கண்டு, அவரையடித்துத் தள்ளி இவனை ஏன் கூடினேன் என்று தன்னை வெறுத்துரைக்கும்படி நீயே காமத்தை மூட்டுகின்றாய் என்ற கருத்து அடங்க, "மின்னுரையும் மயக்கும் வில்வேளே!" என்று சிறப்பித்தார்.

93. கொக்கோக மார்க்கம் - கொக்கோக முனிவரால் கூறப்பட்ட காமவழி. அ கோகம் மாமுலையார் - அந்தச் சக்கரவாகம் போன்ற பருத்த கொங்கையுடையவர்.

94. இருவருக்கும்-ஆடவர் மகளிர் என்ற இருபாலார்க்கும். உருவிலிக்கு - மன்மதனுக்கு. இது முன்னிலையிற் படர்க்கை வந்த வழுவமைதி.

95 முதல் 111 வரையுள்ள கண்ணிகளில் மடலேறும் இயல்பு கூறுகின்றார். சோலையில் மங்கையரைக் கண்டு ஐயுறுவதும் இரந்து பின்னிற்பதும் மறுத்து வெறுத்துச் சென்ற பின் மடலேறுவதும் வழக்கு என்கிறார். இச்செயல் பண்டை வழக்கம் பலவற்றுள் ஒன்று. மடலேறுதல் என்பது, "ஓர்

96. சோலையிலே மாதர்தமைத் தோன்றிவரக் கண்டிளையோர்
மாலை விளைத்து மனமயங்கிக்—கோலத்தால்

97. விண்ணரம்பை யோதுடையு மெல்லரம்பை யோமருட்டுங்
கண்ணரம்பை யோமென் கடிதடந்தான்—பெண்ணரசி

98. செங்கமலை யோமுலையுஞ் செம்பொன்மலை யோவுடலுந்
தங்கமலை யோகுழலாய்ச் சாதித்தார்—மங்கைநல்லார்

99. மேனகையோ பைந்தளவ மேனகையோ வானைதனக்
கானகையோ மாத ரடித்துடைகண்—மானனையார்

ஆடவன் தன்னுடன் புணராது மறுத்துச் சென்ற கன்னியின் உருவை ஓவியமாகத் தீட்டிக் கண்ணும் கருத்தும் அதிற்செலுத்தி உண்ணும் உணவும் உறக்கமும் நீத்து உடல்மெலிந்து பின் எவ்வாறேனும் அவளை அடையக்கருதிப் பனைமடலைப் பரியாக்கி நீறுபூசிச் சடைமுடித்து எருக்கமாலை புனைந்து அம்மடன்மாவில் ஏறி இருக்க அவனது தோழர்கள் பலர்கூடியிழுத்துச் சென்று ஊர்மன்றத்தில் நிறுத்தி "இவன், உயிர் நீப்பான்போலும் இம் மங்கை காதலால்" எனக் கூற அவையோர் அவன் குணம் செயல் ஆய்ந்து அவனுக்கே அவளை வற்புறுத்தி மணம்புரிவிப்பது என அறிகின்றோம்.

95. அடல் ஏறும் உன்பகழி - வலிமை மிகுந்த உன்பாணம். 97 முதல் 105 வரை திரிபும் இயமகமும் ஆகிய சொல்லணி அமைத்தனர்.

97. விண் அரம்பையோ - வானுலகிலுள்ள அரம்பை என்பவளோ. மெல் அரம்பையோ - மெல்லிய வாழைத்தண்டோ (துடையும்) என்க. மருட்டும்கண் - மயக்கும் (இவளது) விழிகள். அரம் - அரம்போன்றன. மென்கடிதடம் தான் - மெல்லிய அல்குல், பையோ - பாம்பின்படமோ.

98. செங்கமலையோ - சிவந்த கமலத்தில் (செந்தாமரைப் பூவில்)இருக்கும் திருவோ. உடலும் தங்கம் - இவள் உடம்பும் தங்க நிறமேயாகும். அலையோ குழலாய் சாதித்தார் - இருளையோ கூந்தலாகப் படைத்தார்கள் (இவளுக்கு.) அல் - இருள்.

99. மேனகையோ - (இவள்) மேனகை என்பவள் தானோ. பைதளவம் - பசிய முல்லையரும்பு. மேல் நகையோ - மேலான பற்களோ. ஆனை தனக்கு ஆன கையோ மாதர் அடிதுடை - யானைக்குப் பொருந்திய துதிக்கையோ இப்பெண்ணின் துடையின் அடிப்புறம்.

100. எந்தவரை யோகடலோ வேற்றவரை தோளீகள்வளை
யுந்தவரை யோபுருவ மொப்பென்பார்—இந்தமின்னு

101. மாதரையோ பொன்னுலகோ மாதரையா ரென்றறியோம்
போதரையோ வெல்லப் புறப்பட்டாள்—ஏதென்று

102. வன்மநங்கா யக்க வலைகொண் டிருப்பதென்ன
வன்மநங்கா யக்கவலை மாற்ருயோ—நன்மைச்

103. சரச மருளுந் தயவுசெய்தான் மார
சரச மருளுந் தவியேன்—மருவு

104. மிரும்பா கருத்து மிளகாதோ வாரு
மிரும்பா கருத்துமென்ரு லேச்சோ—விரும்பாத

---

100. எந்த வரையோ - (இவர் வசிப்பது) எந்த மலையோ. தோள்கள் ஏற்றவரை - தோள்கள் பொருந்திய மூங்கில் ஆம். வளையும்தவர் ஐயோபுருவம் ஒப்பு என்பார் - வளைகின்ற வில்லை ஐயோ புருவத்திற்கு உவமை என்று சொல்வார்கள். (இப் புருவத்திற்கு அது தகாது.)

101. மாதரையோ - பெரிய பூவுலகமோ. மாதரை யார் என்று அறியோம் - இம் மங்கையை யார் என்று அறியாமல் மயங்குகின்ருேம். போதரையோ - அறிஞர்களையோ. ஏது என்று - (இவள் இப்பொழிலில் வந்ததற்குக் காரணம்) எதுவென்று. (ஐயமுற்றுப் பின்தெளிந்து) அவளைநோக்கி முன்னிலையாக்கிக் கூறுகின்ருன். அவை பின்வருவன.

102. வன் மநம் காய கவலைகொண்டு இருப்பது - வலிய நெஞ்சம் வருந்த நீ கவலையைக்கொண்டிருப்பது. என்ன வன்மம் - என்ன வைராக்கியம் இது. நங்காய் - நங்கையே! அக்கம் வலைமாற்ருயோ - (என்மேல் எறிந்த) கண்வலையை மாற்ற மாட்டாயோ? (மாற்று.)

103. நன்மை சரசம் அருளும் தயவு செய்தால் - நலமாகிய உன்னைத் தொட்டு விளையாடுதற்கு நீ தயவு செய்வாயாகில். மாரன் சரம் சமர் உள்ளும் தவியேன் - மதனுடைய அம்புப் போரின் இடையிருந்தாலும் இளைக்கமாட்டேன்.

104. இரும்பா கருத்தும் இளகாதோ - (உனது) நெஞ்சமும் இரும்புதானே? இரங்காதோ? வாரும் இரும்பாகு அருத்தும் என்ருல் ஏச்சோ - வாருங்கள்; இருங்கள். பாக்கு (வெற்றிலைச் சுருள்) ஊட்டுங்கள் என்று (நீ என்னை நோக்கி) கூறினல் இழிவாகுமோ? (ஆகாது.)

105. வாதே வரம்பாய் மறையநிற்ப தென்னகிட்ட
வாதே வரம்பாய் மயங்கினே—னோதெனவே

106. காலை யவன்பிடிப்பக் கன்னியுதைத் தேகமயல்
வேலை யமிழ்ந்தி விதிர்ப்பெய்தி—நீலவிழி

107. மாதுதனைக் காணுமன் மாமடலே தெய்வமென்று
போது புகுமுன் புறப்பட்டுக்—காதலாய்ப்

108. பெண்ணைவெட்டிச் சாய்த்தொருவள் பெண்ணுரைசெ யான்மடலைப்
பண்ணை யமைத்த பரியாக்கி—வண்ணச்

109. சடைமுடித்து வெண்ணீறு சாத்தியெருக் கின்பூத்
தொடைய லெனமார்பிற் சூட்டி—மடன்மாக்

110. கருக்கு முதுகினிந்தக் காமுகன்போ யேறி
யிருக்க விளையோ ரிழுக்கச்—செருக்குடனே

111. பேரம் பலத்திலவள் பேருரைத்து நிற்பதுமுன்
கூரம்பு தைத்த குணமன்றோ—போரம்பு

---

105. வாதே வரம்பு ஆய்-(என்னோடு) வாது செய்வதையே வரையறையாகக் கொண்டு; கிட்டவா தேவரம்பாய் - அருகில் வருக தேவரம்பை போன்றவளே !

106. மயல் வேலை - காதற்கடல். விதிர்ப்பு எய்தி-நடுக்கங் கொண்டு.

108. பெண்ணை - பனைமரம். பண்ணை அமைத்த பரி - கல்லணையைப் பொருத்திய குதிரை.

109. மடல்மா - பனைமடலாற் செய்யப்பட்ட குதிரை.

110. கருக்குமுதுகின் - கருக்குகளின் புறத்தே. கருக்கு என்பது பனைமடலின் இருபுறத்திலும் கருப்பாகக் கூர்மையாக இருக்கும் ஓர் உறுப்பு.

111. பேர் அம்பலம்-பெரிய நீதிமன்றம். "ஓர் ஆண்மையிற் சிறந்த ஆடவன் மானத்தை விடுத்து ஒரு கன்னியின் பெயர் கூறிப் பெரிய நீதிமன்றத்திற் சென்று நிற்பது உன் கூர் அம்பு தைத்த குணம் அன்றோ" எனக் காமன் வீரத்தின் சிறப்பை விளக்கினர்.

மன்மதன் ஐந்துகணைகளின் கொடுமை

112. சூரியனை நட்பாய்த் துணைக்கொண்ட பங்கயமும்
பாரிதனைத் தேர்பறித்த பைந்தளவும்—வாரிதனிற்

113. சூரனைக்காட் டிக்கொடுத்த சூதமுந்தங் கோயிலென்றே
வாரம்வைத்தோ ரைக்குறைக்கும் வன்மரமும்—கூரிரவிற்

---

112. பங்கயம் - தாமரைமலர். உலகத்தை மூடிய இருள் முழுவதையும் தொலைத்து ஒளியைப் பரப்புகின்ற சூரியனைத் தனக்கு நண்பனாகவும் கொண்கனாகவும் கொண்டிருப்பதாற் பங்கயஞ் சிறந்தது எனக் காண்க. பைந்தளவு - பசிய முல்லைப்பூ. பாரி என்பவன் கொடையிலும் வீரத்திலும் சிறந்தவன். அவனது தேரையும் தன் ஆற்றலாற் பறித்துக்கொண்டது என முல்லைக்குச் சிறப்புக் கூறினர். பாரி ஒருநாள் வேட்டைக்குச் சென்றபோது வழியருகில் கொழுகொம்பின்றி அசைந்து வாடி நின்ற முல்லைக்கொடியைக் கண்டு மனமிரங்கித் தனது தேரைப் பற்றுக்கோடாக நிறுத்திவிட்டு வந்தான் என்பது வரலாறு. வாரிதனில் - கடலில்.

113. சூரன் - சிங்கமுகவசுரன். சூதம் - மாமரம். சிங்கமுகாசுரன் என்பவன் முருகனோடு போர் புரிந்து ஆற்றாமல் மறைந்து சென்று நடுக்கடலின் மாமரமாகி நின்றான். அம்மரம் தலைகீழாக நிற்பதை யறிந்து மாயையால் தோன்றிய மரம் என ஆய்ந்து முருகக் கடவுள் வேலாயுதத்தை யேவி அம்மரத்தை யிரு கூறாகப் பிளந்தார் என்பது கந்தபுராணக் கதை. இதனை யுட்கொண்டு "சூரனைக் காட்டிக்கொடுத்த சூதமும்" என்று சூதத்தை உயர்த்தினர். ஒருவருக்குந் தெரியாமல் மறைந்திருக்கும் ஒருவனை யறிந்து இன்னவிடத்தில் இருக்கின்றான் அவன் எனக் காட்டுவதற்கு நுண்ணுணர்வும் மனத்துணிவும் ஆற்றலும் வேண்டுமன்றோ? அத்தகைய சிறப்புடையது சூதம் என்றார். வாரம் - அன்பு. குறைக்கும் - குறையும்படி செய்கின்ற. வன்மரம் - வலியமரம். இது குறிப்பால் அசோக மரத்தை யுணர்த்தும் எனத் தோன்றுகிறது. அருகன் அசோக மரத்து நீழலின் அமர்ந்தவன்; அவனுக்குக் கோயிலாயமைந்தது அசோகு. அதன் மேல் அன்பு வைப்பவர் சமண் மதத்தினர். அவர், தானம், சீலம், தவம், அறிவர் சிறப்பு என்ற நான்கும் வழுவாதியற்றி உடல் மெலிவது இயற்கை. நாளுக்குநாள் உடல் மெலிந்து மக்கட் பிறப்பிற்சிறப்படையவேண்டும் என்பது சமணர் கொள்கை. இதனை மனங்கொண்டு "வாரம் வைத்தோரைக் குறைக்கும் வன்மரமும்" என்றார். சமணர் இயற்கையை அசோகமரத்தின் செயலாகக் கற்பித்து அதன் வலிமை காட்டினர்.

114. கள்ளரைப்போலேயெழுந்து கண்மலர்ந்து மாதருயிர்
கொள்ள முளைத்த குவலயமு—முள்ளபடி

115. சீயத்தின் வெவ்வாயுந் தீங்கிலாத் தாபதர்தங்
காயத்தை வாட்டுங் கடுங்கன லு—மாயமாம்

116. வெய்யகொடும் பாவமும்போல் வெங்கணையு மைந்துருவா
யைய னெடுத்த தறியோமோ—வையகத்தைச்

மன்மதன் கரிபரி முதலியவற்றின் கொடுஞ்செயல்

117. சூழுமத யானையைநீ தூண்டினுற் பல்வகையாய்
வாழுமுயி ரெல்லா மயங்குமே—யேழுலகுந்

---

114. குவலயம் - குவளை மலர் இதனை நீலமலர் நீலோற்பலம் என்றுங் கூறுவர். நீலமலர், கருப்பு நிறமும் இரவில் கண்மலர்தலுமுடைமையால் அதனைக் "கள்ளரைப்போலே யெழுந்து கண்மலர்ந்து" என்றார். கண்மலர்தல் - துயில் நீங்குதல். நீலமலர்க்குச் சேர்க்கும்போது கள் மலர்தல் - தேனுடன் விரிதல் எனப் பொருள்படும். நீலமலர், கொல்லுவதற்கு மன்மதனல் ஏவப்படுங் கணை யென்னுங் கருத்தால் "மாதர் உயிர்கொள்ள முளைத்த குவலயமும்" என்றார்.

தாமரைப்பூ, முல்லைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, நீலப்பூ என்ற ஐந்தும் மதன் அம்புகள் என அறிக.

115—116. சீயம் - சிங்கம். வெவ்வாய் - கொடிய முகம். தாபதர் - முனிவர். காயம் - உடம்பு. கடுங்கனல் - கொடுமையான தீ. கொடும்பாவம் (பொய் முதலிய) கொடிய பாவங்கள். சிங்கத்திற்குப் பஞ்சானனம் என்று பெயர் இருப்பதால் அது நாற்புறமும் வரும் பொருள்களையும் மேல்வரும் பொருள்களையும் நோக்கும் வலிமையுடையது என அறிகிறோம். முனிவர் வளர்க்கும் தீயும் பஞ்சாக்கினி என்று பெயர் பெறுகின்றது. இதனல் தவஞ்செய்வோர் தமக்கு இடையூறு நேராது நாற்புறமும் மேற்புறமும் தீ வளர்ப்பர் எனத் தெரிகிறது. "பஞ்சபாதகங்கள்" எனக் கூறுவது பொய், களவு, கொலை, கட்குடித்தல், குருநிந்தை என அறிகின்றோம். எனவே சீயத்தின் வெவ்வாய், தாபதர் வளர்க்கும் கனல், கொடும்பாவங்கள் போல "வெங்கணையும் ஐந்துருவாய்" என்றார். அம்புகளின் ஒற்றுமைச் செயலுக்கு இவ் வுவமைகளைக் காட்டினர்.

117. மதயானை - மதம் கொண்ட யானை. தூண்டினல் - நடத்தினல். மன்மதனுக்கு யானை இருள் ஆதலால் தூண்டினல் உயிர் எல்லாம் மயங்குமே என்றார்.

118. தொட்டகடுந் தேரசையிற் றெல்லுலகெல் லாமசையு
நட்ட மரமு நடுங்குமே—கட்டளையாய்

119. மேவியவுன் கைப்பிடித்த வின்னு ணொலித்ததென்றாற்
பூவிலுங்கண் ணீரெழுந்து பொங்குமே—கூவியே

120. சீரெல்லாங் கொண்டகுயிற் சின்னமதி ருங்காலம்
பாரெல்லாம் வேனிற் பரக்குமே—பேரோசை

121. சேருங் கருங்காளந் திண்பனைமேற் கூப்பிடுநாட்
காருங் குடித்தபுனற் கக்காதோ—போரடரு

122. நேமியெனு முன்முரச நின்றதிர்ந்து வந்திடுங்காற்
பூமியெல்லா மொன்றாய்ப் புதையாதோ—காமனே

---

118. கடுந்தேர் - வலிமையான தேர். அவனுக்குத் தேர் - தென்றற்காற்று. ஆதலால், "உலகெல்லாம் அசையும் நட்ட மரமும் நடுங்கும்" என்றார்.

119. வில் நாண் - வில்லிற் கட்டுங் கயிறு. மன்மதனுக்கு வில் நாண் வண்டு. வண்டுகள் ஒலித்துச்சென்று மலர்த் தேன் பருகும் என்பது குறித்து "ஒலித்தாற் பூவிலும் கள் நீர் எழுந்து பொங்கும்" என்றார்.

120. மதனனுக்குக் குயிற்பறவை சின்னம் ஆதலால் வேனிற் பரக்கும் என்றார். இளவேனிற் காலம் குயில்கள் கூவுவது இயற்கை.

121. கருங்காளம் - பெரிய தாரை. இது பின்முன் வரும் சொற்றொடர்களால் அன்றிலைக் குறிக்கும். மதனனுக்கு "அன்றில்" ஊது கொம்பு என இலக்கியம் பல கூறுவதாலும் பனைமேல் உறைவது அன்றில் எனத் தெரிவதாலும் அன்றிற் பறவை எனத் துணியலாம். அன்றில் அலறுங்காலம் கார்காலமாதலால் "காரும் குடித்த புனற் கக்காதோ" என்றார். கார் - மேகம். குடித்த புனல் - கடலிற்சென்று மேகம் நீரைக் குடித்து மழைபொழியும் என்ற கருத்தினுல் மழை பொழிவதைப் புனலைக் கக்குவதாகக் கூறினர். மேகம் குடித்த புனலைக் கக்கும்படி செய்கின்றது என அதன் வலிமை கூறியது.

122. நேமி - கடல். இது காமனுக்கு முரசு. கடல் மேல் எழுந்து பொங்கிவந்து பூமியைத் தொலைத்துக் கீழே புதையும்படி செய்யும் என அம் முரசின் வலிமை கூறினர்.

123. உன்படையு நீயுமல்லா லும்பருல கும்புவியும்
வன்படையுங் கொற்ற மறுத்துண்டோ-வன்பகைசெய்

124. பொல்லாச் சிலைமாரா பொன்போ லிருந்தவருக்
கெல்லாப் பகையுமுன்னு லெய்துமே—வல்லாளா

காமனால் வருந்தீமைகள்

125. வாலிக்குத் தம்பி மனையாண் மேலாசைவந்து
பாலிக்க நீயே படையெடுத்தாய்—வாலியெனும்

126. அண்ணனைச்சுக் ரீப னமர்க்களத்தி லாவிகொள்ள
எண்ணமுற நீகணைதொட் டெய்தாயே—மண்ணுலகில்

127. தம்பியுட னண்ணனுக்குச் சண்டைவரப் பண்ணுவது
வெம்பியவுன் கைக்கணையாம் வில்வேளே—வம்பலவே

128. என்ன சிநேக மிருந்தாலுங் காமாவுன்
சன்னதம்வந் தாலுடனே சண்டையாம்—பின்னையுமோ

129. ஆச்சரிய மாகவுனக் காளானார்க் கச்சமுண்டோ
கூச்சமுண்டோ வேதுங் குறையுண்டோ-பேச்சுண்டோ

130. மூப்பிளமை யுண்டோ முறையுண்டோ பெண்களுடன்
மாப்பிளமா ரைப்பிணைக்கு மன்மதனே—தாப்பெனவே

---

123. உன் படை என்றது காமனுடைய சேனையை. அவனுக்குப் படை மகளிர். வன்பு அடையும் கொற்றம் - வலிமையால் அடையும் வெற்றி. மறுத்து - வேறு. நீயும் உன் படையும் மக்கள்மேற் போர்புரிந்து வெற்றிகொள்வீரே யன்றி மற்றொருவரும் வெற்றிகொள்ளார் என்பது.

124. பொன்போலிருந்தவர் என்பது ஆருயிர் நண்பர்களைக் குறிக்கும்.

129—130. காம மயக்கத்தால் அறிவுகெட்டு அச்சமின்றியும், கூச்சமில்லாமலும், குறைவு கருதாமலும், கலந்து பேசாமலும், மூப்பு, இளமை, முறை பாராமலும் பெண்களை ஆடவர்கள் விரும்புவதும் பெண்களும் இணங்கிக் கூடுவதும் உலகத்தின் நிகழ்வதுகண்டு அச்சமுண்டோ.........முறையுண்டோ என விளக்கினர்.

131. கைகொடுத்த நாயகனைக் கைநெகிழ்ந்து மற்றொருவன்
மெய்கொடுத்த வின்பமின்னார் வேண்டுவது-மைகொடுத்த

132. கண்ணார் மயங்கியொரு காமுகனைக் கண்டுதொடர்ந்
தெண்ணமற் பற்றி யிழுப்பதுவும்—பெண்ணவார்

133. இன்பம் பொருளா விருந்தபொரு ளுங்கொடுத்துத்
துன்ப மடைந்துசிலர் தூங்குவதும்—பின்பொருவன்

134. தேனார் மொழியாரைத் தேடிமழைக் காரிருட்டி
லானாலும் வேற்றா ரடைவதுவுந்—தானாக

135. ஓடி யொருவ னொருவன் மனையாளைக்
கூடி யுயிரைக் கொடுப்பதுவு—நாடியே

136. தன்மனையா ளேங்கத் தணந்தொருவன் மற்றொருத்த
னன்மனையைத் தேடி நடப்பதுவு—மன்மதனே

137. எல்லாமுன் மாயமென்பா ரென்னாசை நாயகனை
யல்லாம லென்னை யடர்வாயோ—சொல்லக்கேள்

138. உன்கணையா மைந்தி லொருமுல்லை நான்புனைந்தால்
வன்கணையா நாலுமெய்ய மாட்டாயே—நன்காய்

131—137. தன் கணவனை விடுத்து மற்றொருவன் தந்த இன்பத்தை மின்னார் வேண்டுவதும், காமுகனைக் கண்டு கன்னியர் தொடர்ந்து பற்றி இழுப்பதும் கைப்பொருளை யின்பத்தின் பொருட்டுக் கொடுத்துத் துன்பம் அடைந்து சிலர் தூங்குவதும் ஒருவன் ஒருத்தியைத் தேடி மழைக்கா ரிருட்டில் வேற்றா ரடைவதும், அயலான் மனைவியைக் கூடி ஆவியைக் கொடுப்பதும், தன் மனைவி வருந்த அயலான் மனைவியைத் தேடி நடப்பதும் ஆகிய செயல்களை எல்லாம் "உன் மாயம் என்பார்" என்று உலக நிகழ்ச்சி கூறினள். பின் நானும் அப்படியே எண்ணுகின்றேன் என்றாலும் எனது ஆசை நாயகனை நான் அடைந்தாற் பின்பு நீ என்னை வருத்தமாட்டாய் என்பது தெளிவு என முடிவு கூறினள் அக் காதற்காரிகை எனக் கொள்க.

138. முல்லை புனைந்தால் என்பது, நான் என் காதற் கணவனை மணந்து இல்லறம் நடத்தினால் என்பதை யுணர்த்தும். அன்றியும், பாட்டுடைத் தலைவனுக்கு முல்லைமாலை கூறியிருப்பதனால் அம்மாலையை அவன் கொடுக்க நான் புனைந்தால் எனவும் பொருள் கொள்ளலாம்.

பாட்டுடைத் தலைவன் புகழ்ச்சி

தசாங்கம்

(1) மலை

139. நிலைப்பார்க்கு மச்சமாய் நீண்டவுரு வத்தாற்
றலைக்கூர்மஞ் சார்தோற்றந் தன்னுன்—மலைப்பில்லாக்

140. கானவரா கத்துருவங் காண்பதினுற் செய்யமுடி
வானவரைக் காக்கும் வளத்தினுல்—ஆன

141. முருகனரச சிங்கத் திடத்தான் முனிசீர்
மருவிய வாமனங்கூர் வாழ்வால்—அருமையுறுஞ்

142. சீராம ராமரா மந்திரமே சேருமரி
பேரா வனநிறையப் பெற்றதினுற்—காராரு

---

139 முதல் 185 வரை தசாங்கம் கூறுகின்றுர். தசா+ அங்கம். பத்து உறுப்புக்கள்.

139 முதல் 145 வரை பாட்டுடைத் தலைவன் பொதியமலைக்கும் திருமாலுக்குஞ் சிலேடை கூறுகின்றுர்.

பொதியமலைக்குப் பொருள் கொள்ளுங்கால்,

139. நிலை பார்க்கும் அச்சமாய், தலை கூர் மஞ்சு ஆர்.

140. கானவர் ஆகம் துருவம், வானம் வரைக்கு ஆக்கும்.

141. முருகன் அரசு இங்கு அத்து அவா மனம் கூர்.

142. சீர் ஆ மராம், அரா, மந்திரம் அரி, பேரா, வனம்.

143. கார், ஆரும், நல், கண், அல், நாகம், அருந்ததி, கற்கு இவரும், ஆறு.

144. பைய, ரவி, நின்று, துய்ய நிறத்து ஐவனம்.

145. சந்தனத்தை, மாதவரை எனப் பிரித்துக் கொள்க.

(பொழிப்புரை.) நிலையாகிய பூமியில் உள்ள மனிதர்களுக்கெல்லாம் அஞ்சத்தக்கதாய் உயர்ந்த உருவங்கொண்டிருப்ப

143. நற்கண்ண ஞக வருந்ததியை நாடுதலாற்
கற்கிவரு மாறுநலங் காட்டுதலா—னற்குறிப்பாற்

144. பையரவி நின்றசையும் பான்மையா னீங்காமற்
றுய்ய நிறத்தைவனஞ் சுற்றுதலால்—ஐயமின்றிச்

145. சந்தனத்தை மாதவரைத் தாங்குதலான் மாயனைப்போல்
வந்த பொதிய மலையினுன்—சந்ததமு

தாலும், உச்சியில் மிகுந்த மேகம் நிறைந்திருக்கும் காட்சியாலும், வேடர்கள் உடம்பு நிலைபெற்ற வாழ்வு காணப்படுவதாலும் செய்ய சிகரத்தை வானம் வரைக்கும் உயரமாக்கியிருக்கும் வளத்தினுலும், தெய்வமாகிய முருகன் அரசு இங்கு இயைந்த இடமாக இருப்பதாலும், முனிவர்கள் சிறப்புடன் பொருந்தி விருப்பம் வைத்து வாழ்வதாலும், சிறந்த ஆச்சாவும் வெண் கடம்பும், மலைப்பாம்பும் குகைகளிற் சேரும் சிங்கமும் பேராமல் உள்ள காடுகள் நிறைந்திருப்பதாலும், மேகங்கள் நிறைந்த நல்ல இடத்தில் இருளிலும் விண்ணிற்றேன்றும் அருந்ததி என்ற விண்மீனும் விரும்பிவருவதாலும், கற்களில் ஏறிச்செல்லுமாறு வழிநலத்தைக் காட்டுவதாலும், மெல்லச் சூரியனும் உச்சியில் நின்று அசைந்து செல்லும் காட்சியாலும், தூய நிறத்தை யுடைய மலைநெல் விளைந்து சூழ்ந்திருப்பதாலும், சந்தன மரங் களையும் பெரிய முனிவர்களையும் தாங்கியிருப்பதாலும் என்பது.

திருமாலுக்குப் பொருள் கொள்ளுங்கால்,

139. நிலைப்பு, ஆர்க்கும், மச்சம், ஆய், தலை, கூர்மம், சார்.

140. கானம், வராகத்து, உருவம், வானவரை, காக்கும்.

141. முருகு, அல், நரசிங்கம், திடத்தால், வாமனம், கூர்.

142. சீ, ராம, ராமர், ஆம், மந்திரம், அரி, பேர், ஆ, வனம்.

143. கார் ஆரும் நல் கண்ணன் ஆக அரும் ததியை கற்கி, வரும், ஆறு.

144. பை அரவுஇ நின்று நிறத்தை வனம்.

145. சந்தம், நத்தை, மா, தவரை எனப் பிரித்துக்கொள்க.

(பொழிப்புரை.) நிலைத்து ஆரவாரஞ் செய்யும் மீன் ஆகிய நீண்ட வடிவமாகிப் பிறந்ததாலும், முதன்மையான ஆமையாச் சார்ந்த பிறப்பினுலும், காட்டுப்பன்றியின் வடிவமாகக் காணப் பட்டதாலும், செம்மையான கிரீடத்தையுடைய தேவர்களை யெல்லாம் காக்கும் வளமையாலும், அழகில்லாத நரசிங்கம்

(2) நதி

146. மெய்துலங்கு கங்கை விடாதமைத்த லாற்குளக்கண்
ணெய்துதலா லம்பலம்வந் தேறுதலா—னெய்தின்றி

147. மேவு மலைவளைக்கு மேன்மையான் மெய்க்கோலந்
தாவு மரவந் தரித்தலான்—மேவிநிறை

148. யாமதியு மாரமுஞ்சேர்த் தக்கோடுந் தாங்குதலாற்
காமனையுஞ் சாய்த்துக் கலக்குதலா—னுமறியக்

ஆகிய வலிமையாலும், குறள்வடிவமாக வாழ்ந்ததாலும், சிறந்த ராம ராமர் ஆகிய மந்திரமே சேர்ந்திருக்கவும் அரி என்பது ஒரு பேராகவும், அழகு நிறையப்பெற்றிருப்பதாலும், கருமை நிறம் பொருந்திய நல்ல கண்ணன் ஆகப்பிறந்து அருமையான தயிரை உணவாக விரும்பியதாலும், குதிரையாகப் பிறந்து வருவதற் குரிய பல நன்மைகளைக் காட்டுவதாலும், காளிங்கன் என்ற படம் பொருந்திய பாம்பு ஆகிய இதன்மேல் நின்று ஆடிய தன்மையாலும் தூய்மையான மார்பினைத் துழாய்மாலை சுற்றி யிருப்பதாலும், அழகிய (பாஞ்சசன்னியம் என்ற) சங்கத்தை யும், (சார்ங்கம் என்ற) பெரிய வில்லினையும் கையில் தாங்கி யிருப்பதாலும் என்பது.

146—150. சித்திராநதிக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை.

சித்திராநதிக்குப் பொருள் கொள்ளுங்கால்,

146. மெய்துலங்கு கங்கு+ஐ - கங்கை விடாது. குளம் கண், அம்பு, அலம்.

147. அலைவளைக்கும் மெய்கோலம் தாவும் மரவம்.

148. ஆ, மதியும், ஆரமும், அ, கோடும், கா, மனை.

149. கானம், கடந்த, விசை, காதுறல், ஆலம் பால் நந்து அனக்கூட்டம்.

150. நால் நிலமும் தன்மயமே யாக்குதலால் எனப் பிரித் துக் கொள்க.

(பொழிப்புரை.) உண்மையாக விளங்கும் அணையை விடா மல் அமைத்திருப்பதாலும், குளத்திற்போய்ச் சேர்வதாலும், நீர் சுழன்று வந்து (பலவிடங்களிலும்) ஏறுவதாலும், பொருந்திய

149. கானங் கடந்தவிசை காதுறலா லாலமுறும்
பானந் தனக்கூட்டம் பற்றுதலா—னானிலமுந்

150. தன்மயமே யாக்குதலாற் சங்கரனைப் போலெழுந்து
நன்மைதரு சித்ரா நதியினான்—தன்மையாய்

அலை சுற்றி வருகின்ற பெருமையாலும், தன்மேல் பாக்கு மரமும் குங்கும மரமும் தாவிச்செல்லும்படி ஏந்துவதாலும், ஆச்சா, அசோகு, சந்தனமும் சேர்ந்து அந்தக் கொப்புகளையும் தாங்கிச் செல்வதாலும், சோலைகளையும் அங்குள்ள இல்லங்களையும் கெடுத்துக் கலங்கும்படி செய்வதாலும், காடுகளைக் கடந்து வேகத்தோடு மோதுவதாலும், நீரில் வாழ்கின்ற வெள்ளிய சங்குகளும் அன்னப்பறவைக் கூட்டங்களையும் பற்றிச்செல்வதாலும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களையும் தனக்குள் அகப்படுத்துவதாலும் என்பது.

சிவபெருமானுக்குப் பொருள் கொள்ளுங்கால்,

146. மெய், துலங்கு, கங்கை, விடாது, குளம், கண் அம்பலம்.

147. மலை வளைக்கும் மெய்கோலம் தாவும் அரவம்.

148. நிறையா மதியும், ஆரமும், சேர்ந்து, அக்கு, ஓடும், காமனையும், சாய்த்து.

149. கானம், கடந்த, இசை, காது உறலால், ஆலம் உறும் பானம் தனக்கு ஊட்டம் பற்றுதலால் 150. நானிலமும் தன்மயமே யாக்குவதால் எனப் பிரித்துக்கொள்க.

(பொழிப்புரை.) தன் உடம்பில் விளங்குங் கங்கை நதியை வழிந்தோடவிடாமல் தலையில் அமைத்திருப்பதாலும், நெற்றியிற் கண் சேர்ந்திருப்பதாலும், (தில்லையிற்) பொன்னம்பலத்தில் வந்து ஏறி நடஞ் செய்வதாலும், பொருந்திய இமயமலையை வில்லாக வளைத்த பெருமையாலும், உடம்பிற்குக் கோலம் (அழகு) ஆகத் தாவிச்செல்லும் பாம்பையும் (அணியாக) தரித்திருப்பதாலும், நிறையாத (பிறை) சந்திரனையும் ஆத்தியையும் சேர்த்து அக்குமணியும் கபாலமும் தாங்கியிருப்பதாலும், மன்மதனையும் எரித்துத் தொலைத்துக் கலங்கும்படி செய்ததாலும், இசைகளிற் சிறந்த இசைகளைச் செவியிற் பொருந்தும்படி (அசுவதரன், கம்பளன் என்பவர்களை எப்போதும் செவியில் இருத்திப் பாடும்படி) செய்தலாலும், நஞ்சினைப் பொருந்திய பானமாகத் தனக்கு உணவாகும்படி கைப்பற்றியதாலும் உலக முழுவதும் தன்னுருவமாகவே எங்கும் நிறைந்திருப்பதாலும் என்பது.

(3) நாடு

151\. மீறியசங் கேகயத்தின் மீதேறி யூர்வதினால்
ஆறுதா னங்கோட்ட மாவதினாற்—சீறுசினம்

152\. போற்றியகா லாலடரும் பூங்கொடிவா சந்தரலா
னாற்றிசைக்கும் வேலை நடத்தலாற்—றேற்றிய

153\. கண்ணா றிருவகையாய்க் காலிரண்டு மேவுதலால்
எண்ணா வினங்குடிசே ரில்லத்தாற்—பண்ணருந்

151—154. பாண்டிநாட்டுக்கும் செவ்வேளுக்கும் சிலேடை. செவ்வேள் - முருகன்.

பாண்டிநாட்டுக்குப் பொருள் கொள்ளுங்கால்,

151. சங்கே, கயத்தின், மீது, ஏறி, ஆறுதான் அங்கு ஓட்டம்.

152. காலால் அடரும், நாற்று இசைக்கும் வேலை.

153. கண்ணாறு, இருவகையாய், கால் இரண்டு எண்ணா, இனம், குடி, சேர், இல்லத்தால் எனப் பிரித்துக் கொள்க.

(பொழிப்புரை.) (வலிமை) மிகுந்த சங்குகளே குளத்தின் மேலேறி ஊர்வதனாலும், (சித்திரா நதியாகிய) ஆறுதான் அங்கு ஓடிக்கொண்டிருப்பதாலும், காற்று வீசுவதாற் பூங்கொடிகள் வாசனையை யெங்கும் தருதலாலும், நெல் நாற்றுக்களைப் பொருத்தி நடும் வேலை நடப்பதாலும், கண்ணாறு இருவகையாகவும், வாய்க்காலும் இரு பிரிவாகப் பொருந்தியிருப்பதாலும், எண்ண முடியாத மக்களினம் குடிகளாக வாழ மனைகள் சேர்ந்திருப்பதாலும் என்பது.

செவ்வேளுக்குப் பொருள் கொள்ளுங்கால்,

151. மீறி அசம், கேகயத்தின்மீது ஏறி ஆறுதானம் கோட்டம் ஆவதனால்.

152. காலால் அடரும் பூ கொடி நால் திசைக்கும் வேல் + ஐ - வேலை.

153. கண் ஆறிரு வகையாக கால் இரண்டு என் ஆவினங் குடிசேர் இல்லத்தால் எனப் பிரித்துக் கொள்க.

(பொழிப்புரை.) (வலிமை) மிகுந்து ஆட்டுக்கடா மயில் இவற்றின்மீது ஏறிச் செலுத்துவதாலும், (செந்தூர், பரங்குன்று, பழமுதிர்சோலை, பழனி, ஏரகம், குன்றுதோருடல்

154. தேடுந் தமிழ்விளங்கச் செவ்வேளைப் போலெவரு
நாடுந் தமிழ்ப்பாண்டி நாட்டினன்—தேடரிய

(4) ஊர்

155. சொற்புலவர் கூடுதலாற் சூழ்கோட்டை யேந்துதலா
னற்புவிக்கு மேலாய் நகுதலால்—அற்புதமாம்

156. பொன்னாற் பணத்தாற் பொருந்துதலா லூரரவந்
தன்னாற் பொறைமிகுக்குந் தன்மையினால்—எந்நாளுஞ்

157. சீரை யகலாத் திருமா லருள்புரியும்
வீரை யடுத்த வியப்பினாற்—பாருலகில்

158. வேற்றுமலை வில்லாத மேருமலை போலுயர்ந்த
ஊற்றுமலைத் தென்கிளுவை யூரினன்—சாற்றுங்கால்

ஆகிய) ஆறு இடங்களிலும் கோயில் உண்டாகியிருப்பதாலும், காலாற் போர் செய்யும் (சேவல் ஆகிய) கொடியாடை தங்கியிருப்பதாலும், நான்கு திசைகளிலும் தனது வேலாயுதத்தைச் செலுத்தியதாலும், கண்கள் பன்னிரண்டாகவும் கால் இரண்டாகவும் பொருந்தியிருப்பதாலும், (யாவரும்) மதிக்கும் பழனியை வீடாகக் கொண்டிருப்பதாலும் என்பது.

155—158. மேருமலைக்கும் ஊற்றுமலைக்குஞ் சிலேடை. ஊற்றுமலை - பாட்டுடைத் தலைவனது ஊர். கிளுவை என்பதும் அதன் பெயர்.

மேருமலைக்குப் பொருள் கொள்ளுங்கால்
அடியில் வருமாறு கொள்க.

புலவர் - தேவர், கோடு - சிகரங்கள், நகுதல் - விளங்குதல், பொன் - தங்கம்.

பணம் - படம். ஊர் அரவம் - நகர்கின்ற பாம்பு (ஆதி சேடன்.) வீரை - கடல்.

ஊற்றுமலைக்குப் பொருள் கொள்ளுங்கால்
அடியில் வருமாறு கொள்க.

புலவர் - அறிஞர். கோட்டை-மதில். பொன் பணம் - பொன் வெள்ளி முதலிய பொருள்கள். ஊர் அரவம் - மக்களின் ஒலியாகிய ஆரவாரம். பொறை - பாரம். வீரை - வீர கேரளம் என்ற ஓர் ஊர். அதனை யடுத்திருப்பது - ஊற்றுமலை.

(5) தார்

159. மேலாரத் தோடசைந்து வீசுதலால் வாய்நெகிழ்ந்து
காலாற் றுவண்டுவிழுங் கட்டளையான்—மாலாலே

160. மின்னார் பரவ மிகுந்தளித்த லாலுலகந்
தன்னார மென்றுபெயர் சாற்றுதலால்—எந்நாளுங்

161. காரை யடுத்தரும்பு காரணத்தாற் பெய்யுமழைத்
தாரை நிகர்த்தமுல்லைத் தாரினன்—சீரறிந்து

159—161. மழைத்தாரைக்கும் முல்லைத்தாருக்கும் சிலேடை.

மழைத்தாரைக்குப் பொருள் கீழ் வருமாறு கொள்க.

மேல்ஆர தோடு அசைத்து வீசுவதால் - மேலே நிறைய (தென்னை பனை மடல் ஆகிய) தொகுதிகள் தாங்கிப் பின் காற்றால் அசைக்கப்பட்டு வீசுவதால், வாய் நெகிழ்ந்து காலால் துவண்டு விழும் கட்டளையால் - இடம் விட்டு நழுவிக் காற்றினால் அசைந்து விழுகின்ற இயற்கையால், மால் ஆல் ஏ மின் ஆர் வருட மிகுந்து அளித்தலால் - மேகத்தாலே மின்னல் பொருந்திய மழை மிகவும் கொடுத்தலால், உலகம் தன் நாரம் என்று பெயர் சாற்றுதலால் - உலகமெல்லாம் தமக்குரிய நீரென்று பெயர் கூறுவதால், காரை அடுத்து அரும்பு காரணத்தால் - மேகத்தை யடுத்துத் தோன்றுகின்ற காரணத்தினால்

முல்லைத்தாருக்குப் பொருள் கீழ்வருமாறு கொள்க.

மேல் ஆரத்தோடு அசைத்து வீசுதலால் - மேல் அணிந்துள்ள மார்பிற் பதக்கத்துடன் கிடந்து அசைந்து ஒளி வீசுவதால், வாய் நெகிழ்ந்து கால் ஆற்று வண்டு விழும் கட்டளையால் - அரும்பு மலர்ந்து ஆறுகால் வண்டுகள் மொய்க்கும் இயற்கையால், மாலாலே மின்னார் வருட மிகுந்து அளித்தலால் - காம மயக்கத்தாலே மங்கையர் கையால் தடவும்படி மிகவும் அவர்களைக் காத்தலினால், உலகம் தன் ஆரம் என்று பெயர் சாற்றுதலால் - உலகமெல்லாம் தனக்குரிய மாலையென்று பெயர் சொல்லப் படுவதால், காரை அடுத்து அரும்பு காரணத்தால்-கார்காலத்தை யடுத்துத் தழைத்து அரும்பு தோன்றுகின்ற காரணத்தினால். மழைத் தாரையைப் போன்ற முல்லைத்தாரினையுடையவன் என இயைத்துக் கொள்க.

(6) பரி

162. கையா லடித்தெழுப்பக் கந்துகமாய்ச் சுற்றிவரும்
வையாளி கொண்டுகன வட்டமாய்ப்—பொய்யாமற்

163. கோபம்வரச் சீறுதலாற் கோரமாய் மிக்கபிர
தாப முறக்குதித்துத் தாக்கியே—சோபமின்றி

164. வெம்புரவி தேர்நுகத்தில் விக்கிலொரு பங்குறை
யும்புரவி யென்றதனே டொன்றுதல்போல்—அம்பரத்தில்

165. தோயுங் கதிரோன் சுடர்த்தே ரையுமசைத்துப்
பாயுங் கவனப் பரியினன்—நேயமிகு

(7) கரி

166. தூயவெள்ளத் தானத் துதிக்கையா லம்பாரைக்
காயவெயி லேறுங் கடுப்பினுற்—பாயொளியாற்

162—165. குதிரையின் சிறப்புக் கூறப்படுகிறது கந்துகம்-பந்து, குதிரைக்கும் பெயர் கந்துகம் என்பது. பந்து கையால் அடித்து எழுப்பப்படுகின்றது. அதுபோலக் குதிரையும் ஏறுவோன் கையால் அடித்தெழுப்பப்படும் எனப் பெயர்க் காரணங் கூறினர். வையாளி - குதிரையின் மிகுந்த வேகம். கனவட்டம் - குதிரை. கனம் வட்டம் - மிகுதியாகிய வட்டம் என்பது மற்றொரு பொருள். பலமுறை மிகுந்த வேகமாக வட்டஞ் சுற்றிவருவதால் இதற்குக் கனவட்டமெனப் பெயரிட்டனர் என்பது கருத்து கோரம் - குதிரை ; மற்றொரு பொருள் கோபம். கோபம் வந்து பகைவரைச் சீறுதலாற் கோரம் என்ற பெயர் பெற்றது என்றார். வெம்பு ரவி - காய்கின்ற சூரியன். புரவி - குதிரை. கவனம் - வேகம். இக் குதிரை சூரியனுடைய தேரையும் முட்டி யசையும்படி மேலெழுந்து பாயும் என்றும், அவ்வாறு பாயுந் தோற்றம் "என்னையும் உங்களுடன் சேர்த்துக் கொண்டால் ஒரு பங்குப் பாரம் குறையுமல்லவா சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று சூரியன் பச்சைக் குதிரைகள் ஏழுடன் பரிந்து பேசப் போவதுபோல் இருக்கின்றது என்று கற்பனை செய்தார்.

166—172. சூரியனுக்கும் யானைக்கும் சிலேடை.

சூரியனுக்குப் பொருள் கொள்ளும்போது அடியில் வருஞ் சொற்கள் அங்ஙனம் பொருள் தரும்.

167. கண்டகஞ்ச மாமணிவாய் விண்டு கலித்திடலான்
மண் டருங்கோ டுன்னி வருதலாற்—றண்டத்

168. துடக்கிய தாலவட்டஞ் சுற்றுதலாற் றிக்கை
யடக்கிரண மூட்டு மடலாற்—றிடப்படவே

169. கந்தடவு மாறுகொண்ட காட்சியாற் கன்னலையுஞ்
சிந்த வெழுந்த திரத்தினான்—முந்தவே

170. காலை நிமிர்த்துவருங் காரணத்தாற் செவ்வான
மாலை மறைக்கும் வளப்பினான்—ஞாலத்திற்

171. றேராருங் கண்டுகண்டு சேவித்த லானமதி
வாரா தடர்ந்து வருதலால்—தீராத

172. வெப்பத்தா லோடும் விசையினாற் சூரியனை
யொப்பத்தா னெங்கு முலாவியே—யப்படியேழ்

வெள்ளத்தானம் - நீர்ப்பெருக்கையுடைய இடம் (கடல்). உதிக்கையான் - தோன்றுதலால். அம் பாரை - அழகிய பூமியை, காய - சுட. வெயில் ஏறும் - வெயில் மிகுகின்ற; கஞ்சம்மா மணி வாய்விண்டு - தாமரை அரும்பு பெரிய அழகிய வாய் மலர்ந்து. மண்டு அரும் கோள் துன்னி - நெருங்கிய அருமையான பல செவ்வாய் முதலிய கோள்கள் (கிரகங்கள்) அடுத்து. தண்ட தொடக்கிய தாலம் வட்டம் - தட்டும்படி பொருத்திய பூமி வட்டம்; திக்கை அட கிரணம் மூட்டுவதால் - திசைகளைக் காயும்படி ஒளியை வளர்ப்பதனால்; கம் தடவுமாறு-வானத்தைத் தடவும் விதம்போல; கன்னலையும் சிந்த - நாழிகைகளும் ஒவ்வொன்றாய்ச் சிதறும்படி; காலை நிமிர்த்து-காலை என்ற பொழுதை உயர்த்தி. செவ்வானம் மாலை மறைக்கும்-சிவந்த வானமானது மாலைக் காலத்தில் மறைக்கின்ற. தேராரும் - (தெய்வத்தை) அறியாதவரும்: அ மதி வாராது அடர்த்து - அந்தச் சந்திரன் ஒளி வாராமல் நெருக்கி. வெப்பம் - வெம்மை. விசை - வேகம்.

யானைக்குப் பொருள் கொள்ளும்போது அடியில் வரும் சொற்கள் அங்ஙனம் பொருள் தரும்.

வெள்ளம் தானம் துதிக்கை - வெள்ளம் போன்ற மதத்தை யுடைய துதிக்கை. நம்பாரை காய எயில் ஏறும் - பகைவரைக் கொல்லக் கோட்டையில் ஏறுகின்ற. கஞ்சம் கண்ட மாமணி வாய்விண்டு கலித்தலால் - வெண்கலத்தாற் செய்த பெரிய மணிகள் வாய்விட்டு ஒலித்தலால் மண் தரும் கோடு உன்னி -

173. மண்டலங்கு லுங்கவந்து மந்தரம்பி ளந்தெறிந்து
கொண்டலும்பி செந்தனைந்த கோம்புகொண்டு—மிண்டிமிண்டி

174. யண்டமுந்த கர்ந்துகங்கை யங்குமிங்கு நின்றலம்ப
மொண்டுமொண்டு சிந்தைதிண்டு முண்டுகொண்ட
—சண்டைகொண்டு

175. விரதண்டை யோசையண்ட மேன்முழங்க விறுபோந்து
பாரமஞ்சு மேலிருந்த பாகெறிந்து—கோரமிஞ்சி

176. மேனிதந்த சாயைகண்டு வேறுதந்தி யாகுமென்று
தானடர்ந்து கோடுகொண்டு சாடிமங்குல்—போரிமிர்ந்து

177. கட்டுபட்ட நெற்றிதொட்ட கைத்துளைப்பு ளற்பெருக்கி
வட்டமிட்ட சக்ரவெற்பு மட்டுமுட்டி—யொட்டிவைத்த

178. கொத்தணிப்ப டைச்செருக்கர் கொத்தளத்தெ யிற்பரப்பை
மத்தகத்தி லெற்றுமுக்ர வாரணத்தான்—சித்தத்

மண்ணைக்குத்தி யெடுத்துச் சிதறுகின்ற கொம்புகளோடு நினைத்து. தண்டம் தொடங்கிய தாலவட்டம் சுற்றுதலால் - செல்லும் வழியில் வால் சுழன்று வருவதால். திக்கை அடக்கி ரணம் ஊட்டும் - திசையில் உள்ள வீரர்களை யடக்கி எல்லார்க்கும் புண்களை உண்டாக்குகின்ற. கந்து அடவும் மாறுகொண்ட - கட்டுத்தறியை முறிப்பதற்கும் மாறுபாடு கொண்ட. கன்னலையும் சிந்த - கரும்பையும் முறிக்க. காலை நிமிர்த்து-முன்னங்காலை உயர்த்தி (மிதிப்பதற்கு). செவ் ஆன மாலை மறைக்கும்-செவ்வையான மதமயக்கத்தை மறைத்திருக்கின்ற; தேராரும் - பகைவர்களும். அமதி வாராது - அறியாமை வராமல் (அறிவுடனே). வெப்பம் - கோபம். விசை - வேகம்.

173—178. யானையின் வீரச் செயல் கூறப்படுகின்றது. சந்தத்தின் இனிமை படித்துக் காண்க.

173. மண்டலம் - பூமி. மந்தரம் - மந்தரம் என்ற பெயருடைய ஒரு மலை.

174. சிந்தை திண்டு மிண்டு கொண்ட சண்டை கொண்டு- மனத்தின் மாறுபாடு கொண்ட போர் புரிந்து.

175. பாரம் மஞ்சு - சுமையாகச் சுமந்திருக்கும் தவிசு. பாகு எறிந்து - பாகனைக் கொன்று.

176. சாயை - தனது நிழல், தந்தி - யானை, கோடு - கொம்பு, சாடி - மோதி. மங்குல் - மேகம்.

(8) கொடி

179. தருடத்து சங்காழி யானை நிகராகக்
கருடத்து சங்காமர் காட்ட—அருகினிலே

180. மாலப் பிறைக்கவிண்ணைத் தாங்கும் வளைதடியாங்
கோலப் பிறைசேர் கொடியினன்—சாலவே

(9) முரசு

181. சூரியனார் மேனி துணுக்கேறக் கட்டிளமை
நாரியர்க்கும் வாலிபர்க்கு நாணேற—மேருவைப்போல்

---

178. மத்தகத்தில் - நெற்றியால். ஏற்றும் - முட்டுகின்ற, பாய்கின்ற. உக்ரம் - கோபம். வாரணத்தான் - யானையையுடையவன்.

179—180. கொடியின் சிறப்புக் கூறுகின்றார்.

179. சித்தத்து அருள்தத்து சங்கு ஆழியானை நிகராக - மனதிற் கருணை பெருகி யெழுகின்ற சங்குசக்கரமுடைய திருமாலைப்போல. கருடன் துசம் - கருடனை வரைந்த கொடி. காமர் - அழகு.

180. மால் அப்பு இறைக்க - மேகம் நீரைச் சிந்த. விண் - வானம். வளைதடி ஆம் கோலம் பிறை - வளைதடி என்ற அழகிய பிறை. இது உருவகம். மேகம் மழை பெய்ய அதனருகில் வானத்தைத் தாங்கி நிற்பதால் பிறையைப்போன்றது வளைதடிக் கொடி என்பது கருத்து. வளைந்ததடி பிறைவடிவமாக இருக்கும். அது கருதி உருவகஞ் செய்யப்பட்டது. இதனால் வளைதடியை எழுதிய கொடியே பாட்டுடைத் தலைவனுக்குரிய கொடியெனத் தோன்றுகிறது. இதனை வளரிக்கொடி எனவும் கூறுவர் சிலர்.

181—183. முரசங்களின் இயல்பு கூறுகின்றார். வென்றி குறித்தும் மணம் குறித்தும் கொடை குறித்தும் மூன்றிலின் மூன்று முரசு முழங்கும் என்று கூறுகின்றார்.

181. துணுக்கு - நடுக்கம். நாரியர் - மங்கையர், வாலிபர் - இளைஞர். நாண் - வெட்கம்.

182. ஆர - நிறைய. கனகம் - தங்கம். அளகையர்கோன் - அளகை என்ற நகரில் வாழும் அரசன் (குபேரன்). பாரம் கருகூலம் - பாரத்தைத் தாங்கிய பொற்பேழை.

(10) ஆணை

182. ஆரக் களக மமைக்கு மளகையர்கோன்
பாரக் கருகூலம் பார்த்தேங்க—விரமிகு

183. வென்றி மணங்கொடையான் மேன்மேலு மாருமன்
முன்றிலதிர் மூன்று முரசினான்—என்றும்

184. நிரம்புபுகழ் வீரைநவ நீதகிருஷ்ண சாமி
வரம்புபுரி தாளாணை வாழ்த்திப்—பரஞ்சோதி

185. மெய்க்குருவி னாணைதலை மேற்புனைந்து தன்னாணை
திக்கு முழுதுஞ் செலுத்தினோன்—தக்கவர்க்கு

போரிற் புறங்கொடாது மடிந்த வீரர், சூரியனுடைய உடலின் நடுவே வழியாகச் சென்று வீரசுவர்க்கம் புகுவர் என்பது இலக்கிய மரபு. ஆதலால் போர்முரசு முழங்குவது கேட்டால் சூரியன், "இனிப் போர் தொடங்குவர் போலும்; வீரர்கள் மடிந்தால் நம்முடம்பைத் துளைத்துச் செல்வாரே; எத்தனை பேர் இனி வருவாரோ" என்று நினைத்து வருந்தி உடல் நடுங்குவான் என்ற கருத்துத் தோன்ற "சூரியனார் மேனி துணுக்கேற" என்றும், மணமுரசு முழங்குவது கேட்டால் இளைஞரும் இளமங்கையரும் "நாம் இன்னும் மணம் புரியாதிருக்கின்றோமே" என்று நாணி யேங்குவர்" என்ற கருத்துத் தோன்ற "நாரியர்க்கும் வாலிபர்க்கும் நாணேற" என்றும், கொடைமுரசு முழங்குவது கேட்டால் குபேரனுடைய பொற்பேழைகள் "நாம் ஓர் வள்ளலிடம் இருந்தாற் பயன் பெறுவோமே! இவனிடத்தில் வறிதே யிருந்து நாள் கழிக்கின்றோமே" என்று நினைத்து வருந்திப் பெருமூச்சு விடும் என்னுங் கருத்துத் தோன்ற "கருகூலம் பார்த்து ஏங்க" என்றும் முறையே மும்முரசின் சிறப்பை விளக்கினர்.

184—185. பாட்டுடைத் தலைவன் ஆணை கூறுகின்றார். வீரைநகரிற் கோயில் கொண்டிருக்கும் நவநீதகிருட்டிணசாமியின் ஆணையை மனத்துட் கொண்டு, பின் உண்மைக் குருவாகிய பரஞ்சோதி என்பவர் ஆணையைத் தலைமேற் கொண்டு தன் ஆணையைத் திக்கு முழுவதும் பரப்பி அரசியல் நடத்துவோன் என ஆணைச் சிறப்புக் கூறினர். இதுகாறும் மலை, ஆறு, நாடு, ஊர், தார், பரி, கரி, கொடி, முரசு, ஆணை என்ற அரசியலுறுப்புக்கள் (தசாங்கம்) பத்தும் கூறப்பட்டன. இனிப் பாட்டுடைத் தலைவனது சிறப்புப் பலவகையாகக் கூறுவர்.

பலவகைச் சிறப்பு

186. மும்மையிலு நன்மைதரு மும்முலைத்த டாதகையா
மம்மைதவஞ் செய்யு மருமையாற் — செம்மைதருங்

187. கொண்டையங் கோட்டைவள நாட்டுக் குலமரபைப்
பண்டையிலு மும்மடங்காய்ப் பார்புகழ—வுண்டாக்கும்

188. ஞாலங் களுக்கதிப னுட்டுமரு தப்பனெங்கோன்
ஆலங் குளத்தி லரசிருந்தோன்—சீலச்

189. சகல கலைநிபுணன் சக்ரபரி பாலன்
அகில புயதரவ லாரி—புகலு

190. மனுவளவ ராசேந்த்ரன் மற்புயவிலாசன்
தனுவிசயன் சத்யவரிச் சந்த்ரன்—தனிவான்

186—205. வரை அரசன் சிறப்புக் காண்க.

186. மும்மை-மூன்று பிறப்பு. முற்பிறப்பு. இப் பிறப்பு வருபிறப்பு இவற்றை யுணர்த்தும். உம்மை இம்மை அம்மை என்பனவும் அவற்றைக் குறிக்கும் மறுபெயர்களாம். "தன்னைப் பணிந்த மக்களுக்கு மூன்று பிறப்பிலும் நன்மையை அளிக்கும் அம்மை" எனப் பார்வதியைக் கூறினர். மூன்று கொங்கைகளுடன் மலயத்துவச பாண்டியன் மகளாகப் பிறந்தபோது "மும்முலைத் தடாதகைப்பிராட்டியார்" என்ற பெயர் பெற்றமை குறித்து "தடாதகையாம் அம்மை" என உமையின் பெருமை யுரைத்தார். அவ்வம்மை யிருந்து தவம் புரிந்த ஊர் ஆலங்குளம் என்றும், அம் மகிமை மனத்துட் கொண்டு தலைநகராகக்கொண்டு அரசு புரிந்தான் அம் மன்னன் என்றும் அவனது சிவபத்தியை இங்கு விளக்கினர்.

189. சக்ரம் - பூமி. அகில புயதர வலாரி - எல்லாவுலகங்களையும் தோளிற்றாங்கிய இந்திரன் போன்றவன் என்பது பொருள்: வடமொழித் தொடர்.

190. மனுவளவன் - "மனு" என்ற பெயர்கொண்ட சோழன் போன்றவன். ராசேந்திரன் என்பதும் அது. தனுவிசையன் - வில்வீரத்தில் அருச்சுனனைப் போன்றவன். சத்யவரிச்சந்திரன் - உண்மை கூறுவதில் அரிச்சந்திரனைப் போன்றவன்.

191\. முகடு கிடுகிடென மூதண்ட மாடச்
சகடுடையத் தாக்குஞ் சரணன்—இகலும்

192\. அரசர் குலதிலக ஞக்ஞசுக் ரீவன்
வரகுண ராம வசீரன்—நிருபர்பிரான்

193\. சிவலவ மாறனென்ற தென்ஞட்டு ராயனிசைப்
பாவலவன் கல்விப் பழக்கத் தான்—மேவியே

போர்புரியும் வீரச்செயல்

194\. சத்திபடைக் குந்தமொடுந் தானவெடி யோடுநடந்
தத்திமுக நாலுகையு மாய்ப்பொருந்தி—மெய்த்தவளக்

195\. கோட்டையுங் கொண்டு குறுகா ரையுமுடித்து
வேட்டைவரக் கொற்றமலை மேலெழுதி—நாட்டிற்

191\. முதுமை + அண்டம் = மூதண்டம் - பழமையான உலகங்கள். சகடு - வண்டி. சரணன் - பாதமுடையவன். கண்ணனைக் கொல்வதற்குக் கஞ்சனல் ஏவப்பட்டுச் சகடாசுரன் வந்து வண்டியாக நின்முன் என்றும் அதனை அவ்வண்டியின் அடியில் இளங்குழந்தையாக இருந்த கண்ணன் அறிந்து காலாலுதைத்துக் கொன்முன் என்றும் பாகவதம் கூறும். அதனையுட்கொண்டு கண்ணனே பூமியைக் காக்கவந்துள்ளான் என்ற கருத்தினுல் "சகடுடையத் தாக்குஞ் சரணன்" என்முர்.

192\. ஆக்கிஞசுக்ரிவன் - ஆணைநடத்துவதிற் சுக்கிரீவனை யொத்தவன். சுக்கிரீவன் ஆணைசெலுத்துவதிற் சிறந்தவன் எனத் தெரிகிறது. வரகுணராமன்: பட்டப்பெயர். சிவலவமாறன், தென்ஞட்டுராயன் என்பன சிறப்பாற் பெற்ற பெயர்போலும்.

194 முதல் 205 வரை, தலைவன் மாற்முரோடு போர்புரியும் செயல் விளக்குகிமுர்.

194—196. விநாயகர்க்கும் தலைவனுடைய படைக்கும் சிலேடை.

சத்தி படைக்கும் தம்மோடு தானம் வெடியோடு நடந்து அத்திமுகம் நாலுகையும் ஆய்மெய் தவளம் கோட்டையும் கொண்டு குறுகு ஆரையும் முடித்து வேள் தைவர கொற்றம் மலைமேல் எழுதி எனப் பிரித்து, உமை படைத்த தமர்களுடன் மதமும் அச்சமும் தோன்ற நடந்து. யானை முகமும் தொங்குகின்ற துதிக்கையும் ஆகப்பொருந்தி, உடலில் வெள்ளிய ஒற்றைத்

196. கயத்தா னனத்தானைக் காய்ந்தவரைப் போலச்
செயத்தா னடத்துபடைச் சேனை—வயப்போரில்

197. ஏவினுற் பின்வாங்கா தேற்றுல் விடாதமரில்
தாவினுற் சற்றுந் தறுகாது—கூவிசையங்

198. கொண்ட பரித்திரளுங் குஞ்சரமுங் காலாளு
மண்டலர்மேற் சீறி யடல்விளைக்கக்—கண்டுவந்து

199. மாற்று ரெதிர்த்து மலைந்த செருக்களத்தில்
ஆற்றும லோடு மவர்போக—வேற்றுரை

200. வாளறுத்து வேலறுத்து வாயறுத்து நாவறுத்து
நீள்விரற்கை தாளறுத்து நேருதித்த—தாளறுத்து

தந்தமும்கொண்டு, நெருங்கிய ஆத்திமாலையும் புனைந்து, முருகன் அடுத்துவர வெற்றியாகிய பாரதக் கதையை இமயமலையில் எழுதி என விநாயகருக்குப் பொருத்துக.

சத்தி படை குந்தம் ஓடுதானம் வெடியோடு நடந்து அத்திமுகம் நாலுகையும் ஆய்மெய்த்த வளம்கோட்டையும் கொண்டு குறுகாரையும் முடித்து வேட்டைவர கொற்றம் மலைமேல் எழுதி எனப் பிரித்து, வேலும் ஆயுதமாகிய குந்தமும் கொண்டு, போர் நிகழும் இடத்திற்கு வெடியுடன் சென்று, கடற்புறமும் நாற்புறமும் பரந்ததாகி, மெச்சுகின்ற வளம் பொருந்திய கோட்டையைக் கைப்பற்றிப், பகைவர்களையும் கொன்று, வேட்டையாடி வருவதுபோல வந்து தமது வெற்றியை மலைமேல் வரைந்து எனப் படைக்குப் பொருத்துக.

196. கயத்து ஆனனத்தான் - யானைமுகத்தையுடையவன் (கயமுகாசுரன்.) காய்ந்தவர் - கொன்றவர். கயமுகாசுரன் என்பவனைத் தமது கொம்பு ஒன்றை ஒடித்து எறிந்துகொன்முர் விநாயகர் என்பது கந்தபுராணக் கதை. ஆதலாற் காய்ந்தவர் என்பது விநாயகரை யுணர்த்திற்று. செயத்தால் நடத்து படை சேனை - வெற்றிக்காகச் செலுத்துகின்ற ஆயுதந்தாங்கிய சேனை. காய்ந்தவரைப்போல நடத்தும் சேனை எனச் சிலேடையை முடித்துக்கொள்க.

198. அண்டலர் - பகைவர். அடல் - போர்.

200—204. போர் விரைவுகாட்ட முடுகுசந்தம் அமைத்துள்ளார். படித்துச் சொல்லின்பம் காண்க.

201. வீழமத்த யானைபட்டு விழவுக்ர ராசர்பட்டு
வீழமற்ற வாசியற்று மேறுணித்து—வீழவெட்டி

202. ஓரிபிய்க்கு நீள்பிணத்தை ஓடிமட்டை வாரமுட்டு
சோரிரத்த வாறெடுத்த சோனையொத்த—நீரினுக்குள்

203. ஆடுபத்ர காளிநிர்த்த மாடவெட்டி லேசரிக்கி
ஓடுசத்ரு ராசர்தப்பி யூரடுக்க—ஓடிமுற்றும்

204. வாதுமெத்த வேயுரைத்த வாயடைத்து மேனடுக்க
வீதியிற்கு ளோடிமுற்ற மீதினிற்கு—மாதருக்குக்

205. கைக்கரணங் காட்டிக் கடலேறப் போர்துரந்து
மிக்க ரணக்கொலுவில் விற்றிருந்தோன்—அக்ரமராய்

206. வஞ்சிக்கு மாற்ருர் மலையேறக் கப்பமிட
வஞ்சிக்குச் சீட்டு வழங்கினேன்—அஞ்சிவரு

பகையரசர் பணிந்து திறைதரும் பெருமை

207. வங்கநாட் டைத்திறையை வாங்கிவணங் காதபல்ல
வங்கநாட் டைத்தனதாய் வைக்கின்றேன்—சிங்களத்தார்

---

201. மத்தம் - மத்தகம், மதமும்ஆம். உக்ரம் ராசர்-சினங் கொண்ட மன்னர்.

202. ஓரி - நரி. மட்டை - உடற்குறைப்பேய். வாரம் - உரிமை. சோர் இரத்தம் ஆறு - சோர்கின்ற குருதியாகிய ஆறு.

206—212. பல நாட்டு மன்னர்களை யடக்கித் திறைவாங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. மடக்கு என்ற சொல்லணி வருவன காண்க. பலவிடங்களிற் சிலேடையும் மடக்கும் அமைத்திருப்பது கவிஞர் திறத்தை விளக்கும் கண்ணுடியாம்.

206. வஞ்சிக்கும் மாற்ருர் - வஞ்சனைச் செயல்புரியும் பகைவர். வஞ்சிக்கும் - சேரனுடைய தலைநகரான கருவூர்க்கும்.

207. வங்கம் நாட்டு ஐ திறையை - வங்கத்திற்சென்று (குறித்த) கப்பத்தை. பல்லவம் கம் நாட்டை - பல்லவமாகிய குறைந்த நாட்டை.

208. ஆங்கே கயத்திறைதந் தஞ்சலிப்ப வஞ்சாதா
ராங்கே கயத்தாரை யாட்கொண்டோன்—நீங்காக்

209. கடாரத் திறைவர்வந்து காத்திருந்து செம்பொற்
கடாரத் திறையளக்கக் கண்டோன்—விடாதிருந்த

210. வல்லமரை நாழிகையில் வாங்கிமரு வாரெடுத்த
வல்லமரை யெல்லாம் வலிதொலைத்தோன்—கொல்லத்தார்

211. சேரவந்தி ராசித் திறையளப்பத் தன்னடிக்கீழ்ச்
சேரவந்தி ராசர் தினம்வணங்கப்—பாரனைத்துங்

212. கொற்றக் கவிகை நிழற்றக் குலவுதிசை
முற்றப் புரந்த முனைவேந்தன்—உற்று

சமுகம்

213. மதியமைச்சர் மன்னவரு மைந்தருமுன் னெய்த
நிதியுந் திருவும் நிரம்பத்—துதிகூர்ந்து

---

208. ஆங்கே கயத்து இறை - அவ்விடத்திற் யானையாகிய திறைப் பொருளை. ஆம் கேகயத்தாரை-ஆகிய கேகயநாட்டாரை. ஆட்கொண்டோன் - அடிமையாகக் கொண்டவன்.

209. கடாரத்து இறைவர் - கடாரம் என்ற நாட்டின் அரசர். செம்பொன் கடாரத்து இறை அளக்க - தங்கத்தைக் கொப்பரையாற் கப்பமாக அளந்துகொடுக்க.

210. வல்லம் அரை நாழிகையில் வாங்கி - வல்லம் என்ற நாட்டை அரை நாழிகையிற் கைப்பற்றி. வல் அமரையெல்லாம்- வலிய போரை யெல்லாம்.

211. சேர வந்து இராசி திறை-(கொல்லத்தார்) கூடிவந்து தொகையாகிய திறைப் பணத்தை. சேர் அவந்திராசர் - சேர்ந்த அவந்தி நாட்டரசர்.

212. கொற்றம் கவிகை - வெற்றிக்குடை.

213 முதல் 215 வரை தலைவன் அரசுவீற்றிருக்கும் அவைக்கும் கடலுக்கும் சிலேடை.

மதி அமைச்சர் மன்னவரும் மைந்தரும் முன் எய்த நிதியும் திருவும் நிரம்ப துதிகூர்ந்து பா பணைதாம் ஓது அரவம் பண்ண வரும் சங்கமுமே காப்பதும் அ வாழ்வும் கவின் எய்த ஓங்கும்

214. பாப்பணைத்தா மோதரவப் பண்ணவருஞ் சங்கமுமே
காப்பதும வாழ்வுங் கவினெய்த—நீப்பரிதாய்

215. ஓங்கும் பெரியவரை மேற்கொண் டுலகமிசை
தாங்குங் கடல்போற் சமுகத்தான்—பாங்காய்க்

216. கரும்பைமிதித் தாடல்செய்தோன் கன்னியர்மேற் போர்க்குங்
கரும்பைவளைத் தெய்யாத காமன்—விரும்பு

பெரியவரை மேற்கொண்டு - அறிவுடைய அமைச்சர்களும் அரசர்களும் வலியவரும் முன் வந்துநிற்க, பொன்னும் பல செல்வமும் நிறைந்திருக்கத், துதிமிகக் கூறிப் பரவும் பண்களைத் தாமே யோதுகின்ற ஒலியுடைய இசைப் புலவர்களும் இயற் புலவர்களும் காத்துநிற்பதும், அவர்களைக் காப்பாற்றுவதும் ஆகிய வாழ்க்கை அழகுபெறப், பெரியவர்களைத் தன்னிடத்தே கொண்டு இருக்கும் சமுகம் என்றும் கொள்க.

மதியம் மைச்சர் மன்ன வரும்ஐந்தரு முன்எய்த நிதியும் திருவும் நிரம்ப பாப்பு அணை தாமோதர அ பண்ணவரும் சங்கமும் ஏகாப்பதுமவாழ்வும் கவின் எய்த ஓங்கும் பெரியவரை மேற் கொண்டு - சந்திரனும் மச்சமாகிய பிறப்புடையவரும் முன் நிலைத்து அடியில் இருக்க (வானில் இருந்து) வந்த ஐந்து தருக் களும் முன்தோன்ற இருநிதிகளும் திருமகளும் நிறைந்துவரப் பாம்புப் படுக்கையில் அறிதுயில்கொள்ளும் திருமால் ஆகிய தேவரும் சங்கங்களும் நீங்காத கோடிக்கணக்கான வாழ்வும் அழகுபெற "மைந்நாகம்" என்ற பெரியமலையைத் தன்மேற் கொண்டு இருக்கும் கடல் என்று கொள்க. கடல் கடைந்த காலத்திற் சந்திரன், ஐந்தரு, திருமகள், சங்கநிதி பதுமநிதியாகிய இருநிதிகள், அக்கடலிலிருந்து வெளிவந்தன என்ற வரலாற்றை எண்ணிக் கடலுக்கு இவைகளைப் பொருத்தினர் என உணர்க. மச்சர் என்பது மைச்சர் எனப் போலியாயிற்று. மச்ச வடிவு கொண்டு திருமால் கடலுட் சென்றார் என்பதனால் "மைச்சர் மன்ன" என்றார். இந்திரன் மலைகளையெல்லாம் சிறையரியத் தொடங்கியபோது "மைந்நாகம்" என்ற மலை கடலுள் மறைந்தது. இன்னும் வெளியேறவில்லை என்பது இலக்கிய மரபு.

216 கரும்பை மிதித்து ஆடல் செய்தோன் - (காளிங்கன் என்ற பாம்பின்) பெரிய படத்தில் மிதித்து நடம்புரிந்தோன் (திருமால்.) கரும்பை - கரும்பு ஆகிய வில்லை. காமன் - மன்மதன். காப்பதில் திருமாலாகவும் அழகிற் காமனாகவும் கருதத்தக்கவன் என்பது கருத்து.

217. சிவிகைவள நாடுதந்து செந்தமிழைக் கொண்டோன்
சிவிகைமுறை போலரசு செய்தோன்—புவிபுரக்கத்

உறவின்முறையார் சிறப்பு

218. தென்னவனைப் போலுநித்த சீவல மகிபதியைத்
தன்னருமை யாற்சிறிய தந்தையென்போன்—இந்நிலத்தில்

219. நேசமனு நீதநவ நீதகிருஷ்ண தீரனையும்
ராசபல பத்திரவி ராமனையும்—பேசுங்காற்

220. காமன் றிருவேங் கடநா தனைப்பெருமாள்
சோமனையுந் தம்பி துணைவரென்போன்—பூமருவு

221. செம்பதுமை கேள்வன் சிவகுருநா தன்புவிக்கோர்
தம்பமெனுங் கட்டாரிச் சாளுவனைக்—கும்பனைப்போற்

222. செந்தமிழை யெல்லாந் தெளிந்து நமைப்புரக்க
வந்தருளுஞ் சின்னு மகிபதியைச்—சந்ததமும்

223. வெஞ்சமருக் கஞ்சாத விரப்ப னைக்கொடைக்கு
மஞ்சனைய பண்டார மன்னவனை—அஞ்சலார்

224. வன்பகையைச் சீறும்விக்ர மார்க்கன்ரெகு நாதனையும்
இன்பமிகு மாதுலர்க ளென்றுரைப்போன்—நன்பலத்தால்

---

217. சிவிகை - பல்லக்கு. வளநாடு, வளம்பொருந்திய நாடு; பல்லக்கு, நாடு முதலிய பல பொருள்களைப் பரிசிலாகக் கொடுத்துச் செந்தமிழ் நூல்களைக் கேட்போன் எனப் பாட்டுடைத் தலைவனது தமிழருமையறியும் பண்பும் கொடையும் பகர்ந்தனர். சிவி கை முறை-சிபி என்ற மன்னனது ஒழுங்குமுறை.

218. தென்னவன் - பாண்டியன். தெற்கிலுள்ள நாட்டுத் தலைவன் ஆதலின் இப்பெயர் பெற்றான். இனி உறவின்முறை கூறுகின்றார். பாட்டுடைத் தலைவனுக்குச் சிறிய தந்தை சீவலத் தேவர் என்பவர்.

219—220. நவநீதகிருட்டிணத்தேவர், பலபத்திரராமத் தேவர், திருவேங்கடநாதத்தேவர், பெருமாள்தேவர் இவர்கள் தம்பிமார்.

224. சிவகுருநாதத்தேவர், கட்டாரிச் சாளுவத்தேவர், சின்னுத்தேவர், வீரப்பத்தேவர், பண்டாரத்தேவர், விக்கிர மார்க்கத்தேவர், ரெகுநாதத்தேவர் இவர்கள் மாமன்மார்.

225. இந்நிலத்தில் வாழ்இரா சென்றவர சேந்த்ரனையுந்
தன்னிகரில் லாப்பெரிய சாமியையுஞ்—சொன்னமனு

226. நீதிமான் சீவலவ நேசமரு கோனெனவா
ழாதிநா ராயணவொய் யாரனையு—மோதும்

227. புலவ மகீபனையும் பொன்போ னினைக்கும்
நலமைத் துனராய் நவில்வோன்—குலதிலகன்

228. எங்கள் திரு வேங்கட நா தேந்த்ரன்வர பாலனுயர்
சங்கதரன் போலிசையைத் தாங்கினோன்—கொங்கு

229. தளைத்தகுழற் சானகிக்காய்ச் சாபமெடுத் தேற்றி
வளைத்தமரு தப்ப வசீரன்—கிளைத்த

230. திருவும் வளமும் செறிந்த கினுவை
மருவுமரு தப்ப வசீரன்—செருவில்

231. விரைந்த வளைதடியை மேருவரை மீதில்
வரைந்தமரு தப்ப வசீரன்—திருந்தப்

---

227. ராசுத்தேவர், பெரியசாமித்தேவர், சீவலத்தேவரது புதல்வராகிய நாராயணத்தேவர், புலவர்தேவர் என்பவர்கள் மைத்துனர்.

228. திருவேங்கடத்தேவர் தாம் இவர் தந்தை. தலைவரது பெயர் மருதப்பத்தேவர் எனத் தெரிகிறது. இருதயாலயன் என்பது குடிப்பெயர் போலும். ஊற்றுமலை மன்னராக வந்தவர் கட்கெல்லாம் முதலில் இருதயாலய என்று தொடங்கி இயற் பெயரைப் பின் கூறுவது மரபு எனத் தோன்றுகிறது.

229 முதல் 234 வரை மருதப்பவசீரன் என ஒவ்வொரு கண்ணியிலும் அமைத்துப் பாடுகின்றார். வசீரன் - வீரன், அல்லது வசீகரன் என்பது குறைந்து வசீரன் என்று நின்றதெனக் கருதினால் எல்லாரையும் தன் வசப்படுத்துவோன் எனப் பொருள் தரும்.

229. கொங்கு தளைத்த குழல் சானகி - மணம்பொருந்தி யிருக்கின்ற கூந்தலையுடைய சீதை. சாபம் - வில். வில் வளைத்த இராமன் போன்றவன் என்பது.

231. வளைதடியை மேருவரைமீதில் வரைந்த - தனது வளைதடி எழுதிய கொடியை இமயமலையின்மேல் நாட்டினவன் என ஏற்றங் கூறினர். இமையம் வரை தனக்கு எதிர் இல்லை யெனவென்று கொடிகட்டினன் என்பது.

232\. பழுத்து விளைந்தரச பாகத் தமிழை
வழுத்துமரு தப்ப வசிரன்—முழுத்த

233\. நிசகுணப யோதநிக்கு நேரா மிருது
வசனமரு தப்ப வசிரன்—திசையில்

234\. நினைந்த படிசமர நீக்கிவெற்றி வாகை
வனைந்தமரு தப்ப வசிரன்—மனந்தெளிந்த

235\. வாரப் புலியா மருதப்ப ராசசிங்கம்
பாரப் புயவரைமேற் பாரிருத்திச்—சேருந்

236\. திசையனைத்து மொன்ருகச் செங்கோன்மை செய்து
விசையமனு நீதி விளக்கி—யிசையச்

237\. சிவந்தமலர்த் தாளையொன்னர் சென்னிமிசைச் சூட்டி
உவந்திருக்கு நாளி லொருநாள்—நிவந்த

பாட்டுடைத் தலைவன் பவனி எழுச்சி

238\. பவனி யெழுச்சி பணித்தன னென்ன
அவனி யரச ரறியப்—புவிமுழுதும்

239\. ஓரிடத்து வந்ததுபோ லும்ப ருலகனைத்தும்
பாரிடத்தில் வந்து படிந்தனபோற்—சீரடுத்த

240\. மங்கலக் கோலம் வனையு மறுகுதொறுந்
துங்க முடிமன்னர் சூழ்ந்திருக்க—எங்கள்பிரான்

232\. ரசபாகம்-கனிகளில் வழியும் சாறுபோன்ற இனிமை. இது தமிழின் சுவைக்கு உயர்வு கூறியபடி.

233\. நிசகுணம் - உண்மைப் பண்பு. பயோததி-திருப்பாற் கடல். மிருதுவசனன் - இனிய மொழி பேசுவோன்.

234\. சமரம் - போர். வாகை - வெற்றியடைந்தவர் தமக்கு அறிகுறியாகச் சூடும் மாலை. வனைந்த - புனைந்த, சூடிய.

237\. ஒன்னர்-பகைவர். சென்னி - தலை. நிவந்த - உயர்ந்த. தலைவன் ஒரு நாட்பவனிவரக் கருதிப் பலர்க்கும் அதனையறிவித்தான் என்பது.

239\. உம்பர் - தேவர்.

240\. மறுகு - வீதி. மௌலி - கிரீடம்.

241. சங்கு முரசுஞ் சயனத் துயிலெழுப்பக்
கொங்குமலர்ப் பஞ்சணைமேற் கொண்டெழுந்து
—பங்கயத்தின்

242. பூமடந்தை நிண்டப் புகழ்மடந்தை கைகொடுக்கப்
பாமடந்தை நாவிற் பயிற்பெய்தக்—கோமனையின்

243. முன்றிற் புறத்து முதுமஞ் சனச்சாலை
யொன்றிற் புகுந்தாங் குவந்திருந்து—துன்று

244. வடவருவிச் சித்ர நதி மஞ்சனநீ ராடிப்
புடவையினு லிரம் புலர்த்தி—அடைவாய்ச்

245. சிலத ருபசாரஞ் செய்து கொடுக்கும்
சலவை பலவுந் தரித்து—விலைமதியா

246. வச்சிரமும் பச்சை மரகதமும் வாளுரக
ருச்சிமணி யும்பெரிய வொண்டிமுத்தும்—வைச்சிலகு

247. துங்கக் குழைக்கடுக்கன் சோதி தரத்தரித்துத்
தங்கச் சரப்பணியுந் தாங்கியே—தங்கும்

248. பதக்க மணிந்து பருமுத்து மாலை
யதற்கிசையக் கொத்தா யணிந்து—நிதிக்கடவுள்

---

242. பங்கயத்தின் பூமடந்தை - தாமரைப் பூவில் வாழும் பெண் (திருமகள்) புகழ் மடந்தை-வெற்றித்திரு: பாமடந்தை-கலைமகள். பயிற்பு - பயிலுதல். கோமனை - அரண்மனை.

242 முதல் 245 வரை நீராடி உடை உடுத்தியது கூறுகின்றார்.

243. மஞ்சனச் சாலை-குளிக்கும் இடம். துன்று-நிறைந்த.

244. புடவை - உடை, ஆடை.

245. சிலதர் - வேலையாட்கள். சிலதியர்; தோழியர். இது பெண்பால். சலவை - உடைகள்.

245 முதல் 250 வரை பலவகைப் பணி புனைந்தமை கூறுகின்றார். வைரமும், பச்சையும், மரகதமும், நாகமணியும் பெரிய தொரு முத்தும் பதித்த காதுக்கடுக்கன், தங்கச்சரப்பணி, பதக்கம், முத்துமாலை, பச்சைமணி பதித்த கைக்கடகம், கணையாழி என்ற அணிகலன் புனைந்தனர் எனத் தோன்றுகிறது.

249. இச்சைபெறக் கைவளச மேற்கமலப் பாசடைபோற்
பச்சைக் கடகப் பணிவிக்கி—யுச்சிதமாய்

250. ஆழி விரலி லணிந்துகலை யூர்தியுடன்
வாழிதரு வாளை மருங்கசைத்துச்—சூழதிபர்

251. ஏத்துபரஞ் சோதிமுனி யென்றுகுரு மந்திரத்தாற்
சாத்தும் விபூதி தனைத்தரித்துக்—காத்தருளுந்

252. தெய்வச் செழுஞ்சுடரைச் செங்கட் கரும்புயலை
யைவர்க் குதவு மருமருந்தைக்—கைவிரலாற்

253. சொற்பயிற்றி வேயைத் துவர்வாயில் வைத்தூதி
நற்பசுவின் பின்னே நடந்தானை—வெற்பெடுத்துத்

254. தாங்குநவ நீதகிருஷ்ண சாமியைத்தென் வீரைநக
ரோங்குபெரு மானை யுளத்திருத்தி—ஆங்கெழுந்து

255. கோபவுக்ர விரபத்ர கோலவச்ர தேகமெய்ப்ர
தாபசுப்ர தீபரண சங்கிராமன்—கோபப்

256. பரமண்ட லீகர் படையெடுத்த சேனைச்
சிரமண்டை மூளை சிதறக்—கரதலத்தின்

---

250. மருங்கு - இடை. இடையில் உடை வாளைச் செருகிக்கட்டி என்றார். வீரமுடைய மறவர்குலத்திற்கேற்ற இயல்பு கூறியது.

252—254. நவநீதகிருட்டிணசாமி என்ற அவர்கள் குல தெய்வத்தின் பெருமையும் வணக்கமும் உரைக்கப்பட்டுள்ளது.

255—259 சீவலத்தேவர் என்ற சிறிய தந்தையின் பெருமையும் புகழும் பேசுகின்றார்.

255. கோபம் உக்ரம் வீரபத்திரன் - சினம் மிகுதியால் வீரபத்திரனை யொப்பவன். கோலவச்ரதேகன் - அழகான உறுதியான உடலுள்ளவன். மெய்பிரதாபன் - உண்மை வெற்றியுடையவன். சுப்ரதீபம் ரணம் சங்கிராமன் - சுப்பிரதீபம் என்ற திக்குயானைபோற் போர்புரிந்து பகைவரைப் புண்படுத்தும் போர்வீரன்.

256. பரமண்டலீகர் - வேற்றுநாட்டு மன்னர். சிரம் - தலை. மண்டை - ஓடு. கரதலம் - கையின் இடம்.

257. வெற்றிவடி வாளெடுத்த வீரவிக்ர மார்க்கனென் றுஞ்
சுற்றி யிருக்குமன்ன சுற்றத்தான்—உற்றறியும்

258. புத்திக்கு யூகி பொறுமைக்குப் பூமிபுக
ழெத்திக்குங் கொண்டாடு மெங்கள்பிரான்—முத்தமிழைச்

259. சிந்தைகுடி வைத்ததுரை சிவலரா சேந்த்ரசிறு
தந்தை மனமகிழத் தானடந்து—சந்ததமும்

260. பொன்னடனஞ் செய்யப் பொருந்துமணி மண்டபத்தின்
மன்னர் புடைசூழ வந்திருந்தே—யுன்னுமத

261. வாரணத்தைக் கொண்டு வருதிரெனக் கூறுதலும்
பார மதயானைப் பாகர்சென் று—தூரத்

262. திடிக்கும் பயஞ்செனிப்ப வெண்ணலர்கற் கோட்டை
யிடிக்கும் பிறைக்கோட்டி யானை—அடுத்துத்

263. தடவுதய பானுரதத் தட்டிலுங்கை நீட்டித்
தடவுங் கரடமத தந்தி—அடையலரை

---

259. முத்தமிழைச்சிந்தை குடிவைத்தது துரை என்றது; இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் நூல்களையும் கற்று மனத்திற் குடியிருக்கும்படி வைத்த மன்னன் என தமிழ்க்கலையுணர்ச்சியின் பெருமையை விளக்கியதாம். "சிறுதந்தை மனமகிழத் தான் நடந்து" என்றது பெற்ற தந்தையினும் அன்பிற் சிறந்தவர் சிறிய தந்தை என்பதும் தலைவரும் அவர்மீது மிகுந்த அன்புடையவர் என்பதும் சுட்டியவாறும். இந் நூலாசிரியரும் அவர் மேல் மிகப் பற்றுடையவர் எனவும் அறியலாம்.

262—264. பட்டத்து யானையின்பண்பு பகர்கின்றார்.

262. இடிக்கும் பயம் செனிப்ப - இடியேற்றிற்கும் நெஞ்சில் அச்சம் உண்டாக. இடியிடிக்கும் ஒலியினும் மிக்க ஒலியுடையது என்பது கருத்து. இதன் ஒலியைக் கேட்டால் இடியும் நடுங்கும் எனக் கற்பித்தார். கல்கோட்டை இடிக்கும் - கல்லாற் கட்டப்பட்ட மதிலையும் கொம்பாற் குத்தியிடிக்கும். இது அதன் வலிமை கூறியது.

263. தடம் உதயம் பானு - மலையில் தோன்றுகின்ற சூரியன். தடவு கரடமத தந்தி - தொட்டுத் தடவுகின்ற மதம் பாயும் சுவடுடைய யானை. அடையலரை - பகைவர்களை.

264. அங்கங் கொடுக்குதலா லாலம்போ லேதிரண்ட
அங்கங் குலவு மரசுவா—சங்கிலியாற்

265. பூட்டுநிக ளங்களைந்து பொற்சிலம்பு பூட்டியிரு
கோட்டுமணிக் கிம்புரிப்பூண் கொண்டேற்றிக்—காட்டுநிறத்

266. தங்கத் தகட்டிற் றயங்கிரத்னத் தாலழுத்துந்
துங்கத் தவிசைச் சுவலிருத்தி—வெங்கரடம்

267. ஊறு மதவருவி யோடுமலை போலெழுந்து
சீறுங் கடுங்கோபச் சிந்துரத்தைக்—கூறரிய

268. வாதுவர்கள் கொண்டுவந்து மண்டபத்தின் முன்னிறுத்தத்
தாதுகமழ் முல்லைத் தடமார்பன்—நீதிபெறுஞ்

269. செங்கோன்மை யூற்றுமலைத் தென்னாட்டு ராயனெனு
மெங்கோன் பிடிபடியா யேறினான்—சங்கோலஞ்

270. செய்யப் பலமுரசுஞ் சின்னமும் பேரிகையுஞ்
சய்யத் தையுந்துளக்கிச் சத்தமிடத்—துய்ய

---

264. அங்கு அங்கு ஒடுக்குதலால் - அவ்வவ் விடங்களிற் (பகைவர்களை) ஒடுங்கும்படி செய்வதால் ஆலம் - நஞ்சு. அங்கம் குலவு - வடிவம் தோன்றுகின்ற.

265. நிகளம் - காலிற்பூட்டும் இரும்பு விலங்கு. கிம்புரி - கொம்புப் பூண்.

266. துங்கம் தவிசு - உயர்ந்த யானை முதுகின்மேலிருக்கும் தவிசு. சுவல் - முதுகு.

267. சிந்துரத்தை - யானையை.

268. வாதுவர்கள் - யானைப்பாகர்கள்.

269. பிடிபடியா ஏறினான் - ஒரு பெண்யானையை நிறுத்தி அதன்மேல் ஏறிப் பின் பட்டத்து யானையின்மேல் ஏறினான் எனத் தோன்றுகிறது. இவ்வாறு பெண் யானையைப் பக்கத்தில் நிறுத்திப் படியாகக் கால்வைத்து ஏறுவது முற்கால மன்ன ரியல்பு எனத் தோன்றுகிறது. விக்கிரம சோழ னுலாக்கண்ணி 66-இல் அருத்தும் அயிராவதம் நின்றதனை, யிருத்தும் பிடிபடியா ஏறி என்ற தொடரும் இதனை வலியுறுத்தும்.

270. துளக்கி - அசைத்து. சையம் - மலை.

271. குடையுங் கொடியுங் குலவமறு மன்னர்
படையுங் களிறும் பணிய—இடையிடையே

272. எள்ளிடமு நீங்காமல் எம்மருங்குஞ் சூழ்ந்தகுழாந்
தள்ளி நடக்குஞ் சமையத்தில்—வள்ளமுலை

பாட்டுடைத் தலைவன் பவனி

273. மின்னு ரனைவோரு மெய்க்கோலஞ் செய்வமென்றே
பொன்னு பரணம் பொருத்துவார்—முன்னுகக்

274. கொந்தளக பந்தியின்மேற் கோலமலர் சூட்டுவார்
கொந்தள வோலை குழைக்கணிவார்—சிந்துரத்தைத்

275. தீட்டிச் சவாதுத் திலகமிட்டுக் கண்வாளைத்
தீட்டிக் கருமைத் திறங்காட்டிப்—பூட்டி

276. யணிவடமுங் கண்டிகையு மாரமும்பூண் கொங்கை
யணிவட மேருவின்மே லாடத்—தணியாச்

277. சரியா வளமுலைமேற் சாந்துபுழு கப்பிச்
சரியா வளகரத்திற் றுங்கிப்—பரிவுதரும்

---

273 முதல் 278 வரை பாட்டுடைத் தலைவன் பவனி காண வரும் மங்கையர் அணிகலன்புனையும் காட்சி காணலாம். 274 முதல் மடக்கும் அமைந்துள்ளது.

274. கொந்து அளகம் பந்தி - கற்றையாகிய கூந்தல் முடி. கொந்தளம் ஓலை - ஒளிபொருந்திய தோடு என்ற காதணி.

275. சிந்துரத்தைத் தீட்டி - (நெற்றியிற்) சிந்துரத்தாற் பொட்டிட்டு. கண்வாளை தீட்டி - கண்ணாகிய வாளாயுதத்தைக் கூர்மையாக்கி கண்ணை வாளாக உருவகஞ் செய்ததற்கு ஏற்பத் "தீட்டி" என்றார். இங்கு தீட்டி என்பது கண்களைத் துடைத்து மைதீட்டுவதைக் குறிக்கும்.

276. அணிவடமும் கண்டிகையும் ஆரமும் - அணியத்தக்க முத்துமாலையும் பதக்கமும் பூமாலையும் அணிவட மேரு - அழகிய வடக்கேயுள்ள மேரு என்ற மலை. (கொங்கையாகிய மலை எனக் கூட்டுக.)

277. சரி ஆவன - வளையல் ஆகியவற்றை. கரத்தில் - கைகளில்.

278. பொற்பா டகக்கொடிபோற் பூவை நல்லார் கால்களுக்குப்
பொற்பா டகச்சிலம்பு பூட்டியே—விற்போற்

279. புருவம் வளையவிழிப் போரம்பு மேற்றித்
தெருவி னடந்துமுன்னே சென்று—வருசேனை

280. யீட்டித் தரங்க மடுக்க வெடுத்தவராற்
கூட்டமிட்ட வேலைமிசைக் கொண்டுவரக்—காட்டுஞ்

281. சிலவாளை முன்னொதுக்கிச் செல்கயத்தி னூடே
பலவாம் பரியனந்தம் பாயச்—சிலையேந்து

282. வாரிக் குழலோடங் கோடிவரு வார்பொருந்தக்
காரியக் கத்தரணி கண்ணிரம்பச்—சேரும்

283. பனிக்கடல்போற் காணும் பவனிக் குழாத்தில்
தொனித்த மதவரைமேற் றோன்றிக்—களத்த

284. தடக்கருட னீடுசங்கு சக்கரஞ்சேர் வாளுந்
திடப்படநா கஞ்சுமந்த சீரும்—தடுப்பரிய

---

278. பொற்பு ஆடகம் கொடி போல் - அழகிய பொன்னாற் செய்த பூங்கொடி போன்ற. பொன் பாடகம் சிலம்பு பூட்டி - பொன்னாற் செய்த பாடகம் நூபுரம் என்ற காலணிகளைக் காலிற் புனைந்து.

280—285. பவனிவரும் மக்கள் கூட்டத்தைக் கடலாகவும் தலைவனைத் திருமாலாகவும் சிலேடை யமைக்கின்றார்.

280—282 பவனிக் குழாத்திற்கும், கடலுக்கும்.

284—285. திருமாலுக்கும் தலைவனுக்கும் எனக் காண்க. ஈட்டி தரங்கம் அடுக்க எடுத்தவரால் கூட்டம் இட்டு அ வேலை மிசை கொண்டுவர காட்டும் சிலவாளை முன் ஒதுக்கிச் செல்கயத்தின் ஊடே பல ஆம் பரியல் நந்தம் பாய சிலைஏந்துவாரிக்கு உழல் ஓடு அம்கோடு இவருவார் பொருந்த கார் இயக்க தரணிகள் நிரம்ப - கடலானது தான்சேர்த்த அலைகள் அடுக்கவும் அதனால் எடுக்கப்பட்டவரால் மீன் கூட்டமாகி அக்கரைக்கு மேலே கொண்டுவரவும் வடிவு காட்டுகின்ற சில வாளை மீன்கள் முன்னே ஒதுக்கப்பட்டுச் செல்கின்ற குளத்தின் நடுவே பலவாகிய வருந் தும் சங்குகளின்மேற் பாயவும், ஒலியைக் கொண்ட கடற் கரைக்கு உழுதலோடு செல்லும் அழகிய சங்குகளை ஏற்றிப் போக வருபவர்கள் பொருந்தவும் மேகங்களை நடத்தி மழை

285. பொன்னுலவு மார்பிடமும் பூமணந்த பொற்புயமு
மின்னு மரகதம்போன் மெய்யழகு—மன்னவனை

பெய்யச்செய்து நிலவுலகத்தை நீரால் நிரப்பியும் இருப்பதால் கடல் பவனிக்குழாத்தை யொத்தது.

ஈட்டி தரங்கம் எடுத்தவராற் கூட்டம் இட்டு அவேலை மிசை கொண்டுவர சில ஆளைமுன் ஓதுக்கி செல் கயத்தின் ஊடே பல வாம்பரி அனந்தம் பாயசிலை ஏந்துவார் இக் குழலோடு அங்கு ஓடிவருவார் பொருந்த, காரியக்கத்தர், அணிகள் நிரம்பி - ஈட்டி, தரங்கம் என்ற ஆயுதங்களை எடுத்து நிற்பவராற் கூட்டமாகி அவ்வமையத்தில் மேற்கொண்டுவரவும், காட்டுகின்ற சில குறிப்பிட்ட வீரர்களை முன்னே ஓதுக்கிச்செல்லும் யானைகளின் நடுவிற் செல்லவும், பல தாவும் குதிரைகள் பல வகையாகப் பாய்ந்து செல்லவும் வில்லைத் தாங்கிவருவோரும் அந்த ஊதுகொம்பைத் தாங்கி அங்கே ஓடிவருவாரும் பொருந்தவும், கருமத்தலைவர்களும் அணிவகுப்புகளும் நிறையவும் இருப்பதனாற் பவனிக்குழாம் கடலை யொத்தது. பனிக்கடல்போற் காணும் பவனிக்குழாம், பவனிக் குழாம்போற் காணும் பனிக்கடல் எனச் சொல்லொப்புமை கொள்க.

284—285. தடம் கருடன் நீடு சங்கு சக்கரம் சேர் வாளும் திடம்பட நாகம் சுமந்த சீரும் தடுப்பு அரிய பொன் உலவு மார்பிடமும், பூமணந்த பொற் புயமும் மின்னு மரகதம்போல் மெய்யழகும் - பெரிய கருடனும், உயர்ந்த சங்கும் சக்கரமும் சேர்ந்த வாளும் வலிய படத்தையுடைய பாம்பு சுமந்திருக்கின்ற சிறப்பும் தவிர்க்கமுடியாத திருமகள் உலவும் மார்பின் இடமும் பூமிதேவியைப் புணர்ந்திருக்கும் அழகிய தோள்களும் ஒளிரும் மரகதம்போன்ற பச்சை நிறத்தையுடைய மேனியழகும் எனத் திருமாலுக்குக் கூட்டுக.

தடக்கர் உடன் நீள் துசம் கு சம்கரம் சேர்வு ஆளும், திடப் பட நாகம் சுமந்த சீரும் தடுப்பு அரிய பொன் உலவு மார்பும் பூ மணந்த பொற்புயமும் மின்னு மரகதம் போல் மெய்யழகும் - தடைசெய்யும் காவலாட்களுடன் நீண்ட கொடியும் கொடுவாளும் ஏந்திய கையுடைய ஆட்களும் வரவும், உறுதியாகப் பட்டத்து யானை தாங்கிவரும் சிறப்பும் விலக்க முடியாத பொன்னாற்செய்த பணிகள் உலவும் மார்பும், பூமாலைகள் பொருந்திய தோளும் ஒளிரும் மரகதம் போன்ற உடல் அழகும் எனத் தலைவனுக்குக் கூட்டுக. இங்ஙனம் பொருந்தியிருப்பதால் மன்னவனை மாலாகக் கண்டார் எனப் பொருத்துக.

286. மாலாகக் கண்டார் மடந்தையருங் கையெடுத்தார்
மாலாக நானும் வணங்கினேன்—மேலாகக்

பவனி கண்ட மகளிர் மயல் உரை

287. கையெடுத்து வெள்வளைகள் காப்பா ருடுத்ததுகில்
பைய நெகிழ்ந்ததனைப் பார்ப்பார்கள்—ஐயகோ

288. கோசிகனுங் காக்கமுறக் கூடநடந் தாய்வனைந்த
கோசிகநாங் காக்கவந்து கூடாயோ—மாசிலாக்

289. கன்னங்கை பார்த்ததிருக் கண்ணாலே யாங்களிரு
கன்னங்கை சேர்க்கில்வந்து காண்பாயோ-பொன்னுடனே

---

286. "மால் ஆக நானும் வணங்கினேன்" என்ற சொல் நயம் காண்க. திருமாலாகவே நினைத்து வணங்கினேன் எனவும், காமமயக்கம் உண்டாகி அதனால் வணங்கினேன் எனவும், மயக்கம் உண்டாகவேதான் நான் வணங்கினேன் எனவும் பொருள் தந்து நின்றது

288 முதல் 299 வரை தலைவனைக்கண்டு காதல்கொண்ட காரிகையார் கூற்று. இக் கண்ணிகளில் ஆசிரியர் தலைவனைத் திருமால் எனவே நினைத்து மயக்கத்தால் அவன் செயல் பலவும் இவனுக்கு ஏற்றிக் கூறுவதும், இயமகம் அமைத்திருப்பதும், இன்னசெயல் புரிந்த நீ, இதனையும் செய்தால் என்ன? இழிவாகுமா என ஒவ்வொரு கண்ணியிலும் பொருள் அமைத் திருக்கும் விதமும் புலவர் அனைவரும் வியந்து நயந்து போற்றிப் பாராட்டற்பாலன. சொன்னயம் பொருணயம் துலங்கும் கண்ணிகள் இவைகளே அறிஞர் ஆய்ந்து காண்க.

288. கோசிகன் ஆங்கு ஆக்கமுற - விசுவாமித்திரன் (வேள்வி நடத்தும்) அவ்விடத்திற் பெருக்கத்தையடைய, வனைந்த கோசிகம் நாம் காக்க - உடுத்தும் உடையை நழுவாமல் நாங்கள் காக்கும் விதமாக. முனிவன் ஆக்கமுற முன் அவன் கூட நடந்தாய் ஆதலால் நாங்கள் ஆக்கமுற எம்மைக் கூடவும் வருவாய் எனவும் முனிவனுக்கு ஆக்கம் விளைக்க அவனுடன் நடந்த நீ இழிவாகிய பெண்களிருக்குமிடத்திற்கு வந்து கூடுவாயோ கூடாய் எனவும், "கூடாய் என்பதை உடன்பாட்டு வினையாகவும் எதிர்மறையாகவும் கொண்டு ஓகாரத்தை அசை யாகவும் எதிர்மறைப் பொருளில் வந்ததாகவும் கொள்க. பின் வருவனவும் அங்ஙனமே பொருள்தரும்.

289. கல் நங்கை பார்த்த திருக்கண்ணாலே - கருங்கல்லை அகலிகை என்ற நங்கையாகி வரும்படி பார்த்த உனது சிறந்த

290. கங்கைத் துறையில்வந்து காத்துநின்று யாம்போன
கங்கைத் துறையில்வந்து காப்பாயோ—அங்கருளாற்

291. சித்திரகூ டத்தில்வந்து சேர்ந்தனையே யாமிருக்குஞ்
சித்திரகூ டத்தில்வந்து சேராயோ—உத்தமிக்காய்

292. மானங்கோ டாமலுன்னி வைத்தபத மெங்களுக்கு
மானங்கோ டாமலிங்கே வாராதோ—வானரத்தின்

293. கோவாலி யாற்றலறக் கோபித்தா யெங்களிரு
கோவாலி யாற்றல் குறியாயோ—நீ விரும்பி

294. வாரிக் கணைபுரிந்தாய் மார னெமக்கெதிராய்
வாரிக் கணைசொரிதன் மாற்றாயோ—பேரணியை

விழிகளாலே. இரு கன்னம் கை சேர்க்கில் - இரண்டு கன்னங்களிலும் கை விரல்களை யூன்றிவைத்து (வியப்பாக உன்னைப் பார்த்து) நின்றால். பெண்ணுக்கிரங்கிப் பார்த்த கண் அதனால் எம்மையும் பார்க்கும் எனவும், அகலிகை போன்ற கற்புடைய மகளிரைப் பார்க்குமேயன்றி எம்போன்றாரைப் பார்க்குமோ எனவும் உயர்வும் இழிவும் பொருந்திய நயம் காண்க. பொன்னுடனே - சீதையுடன்.

290. கங்கைத் துறையில் - கங்கையாற்றுத் துறையில். யாம் - நாம். போனகம் கைத்து உறைஇல் - உணவை வெறுத்துத் தங்கும் மனையில்.

291. சித்திரகூடத்தில் வந்து சேர்ந்தனையே - (இராமனாகப் பிறந்து வனஞ் சென்றபோது) சித்திரகூடம் என்ற மலையில் வந்து சேர்ந்திருந்தாயே. சித்திரம் கூடத்தில் - அழகான மனையில். சித்திரகூடத்திற் சேர்ந்த வுனக்குச் சித்திரகூடத்தில் சேர்வது தகுதியுடையதன்றோ எனச் சொல்நயம் காண்க.

292. உத்தமிக்காய் - சீதையின்பொருட்டு மான் அங்கு ஓடாமல் உன்னி. பொன் மானனது அவ்விடத்தில் ஓடிப் போகாமற் (பிடிக்க) நினைத்து. மானம் கோடாமல் இங்கே - மானங்கெடாமல் இங்கே (நாம் வாழும்படி.)

293. வானரத்தின் கோ வாலி ஆற்றல் அற - குரங்குகட்கு மன்னனாகிய வாலியின் வலிமை கெடும்படி. இருகோ ஆலி ஆற்றல் - இரண்டு விழிகளும் நீர்த்துளியைச் சொரிவதை (குறியாயோ.)

294. வாரிக்கு அணை புரிந்தாய் - கடலுக்கு அணைகட்டினை. மாரன் - மன்மதன். வாரி கணை சொரிதல் - அம்புகளை வாரி எங்கள்மேற் சொரிவதை (மாற்றாயோ.)

295. யுந்த விராக்கதப்போ ருந்தொலேத்தாய் வேள்பகழி
யுந்த விராக்கதப்போ ருந்தொலேப்பாய்—அந்தநாட்

296. கோவியருக் கன்புவந்து கூடினேயே மன்மதனேக்
கோவியருக் கன்புகுந்தாற் கூடாயோ—மேவியபேர்

297. அம்பலக்கண் மற்ருெருத்திக் கன்புசெய்தா யெங்களைவேள்
அம்பலக்கண் செய்வ தறியாயோ—வெம்போரில்

298. ஆதவனே நேமியினு லன்றமைத்தா யாசைகுறி
யாதவனே வெப்ப மடக்காயோ—சீதரன்போல்

299. வந்த துரையே மருதப்பா வுன்கருத்து
வந்த துரையெனவே வாய்நெகிழ்ந்தார்—அந்தமின்ஞர்

---

295. பேர் அணியை உந்து அ இராக்கதப் போரும் - பெருமை பெற்ற அணிவகுப்பைச் செலுத்திய அந்த அரக்கர்கள் சண்டையையும் (தொலேத்தாய்.) வேள் பகழியும் தவிரா கதம் போரும் - காமன் கணேயும் நீங்காத அவனது சினப்போரினேயும் (தொலேப்பாய்.)

296. கோவியருக்கு அன்பு வந்து - (முன்) ஆய மகளிர் மேல் அன்பு வைத்து (கூடினே.) கோவி - (மன்மதனேக்) கோபிப்பாய். அருக்கன் புகுந்தால் - சூரியன் மறைந்தால் (கூடாயோ.)

297. பேர் அம்பலம் கண் மற்று ஒருத்திக்கு-(துரியோதனனுடைய) பெரிய அவைக்களத்திற் வேருெரு பெண்ணுக்கு (பாஞ்சாலிக்கு) அன்பு செய்தாய் என்பது மானங்கெடும்படி துச்சாதனன் பாஞ்சாலியைத் துகில் உரிந்தபோது துகில் மேலும் மேலும் வரும்படி அருள் புரிந்ததை யுணர்த்தியது. வேள் அம்பு அலக்கண் செய்வது - எங்களேக் காமன் கணே துன்பப்படுத்துவதை (அறியாயோ.)

298. ஆதவனே நேமியினுல் அன்று அமைத்தாய்-சூரியனேச் சக்கராயுதத்தால் அக்காலத்தில் மறைத்தாய் ஆசை குறியா அனே வெப்பம் - என் காதலேக் குறித்துணராததாயின் கோபத்தை (அடக்காயோ.)

299. சீதரன்போல் வந்த துரையே - திருமாலேப்போலப் பவனிவந்த மன்னவனே. உன் கருத்து உவந்தது உரை - உன் மன விருப்பத்தை (எங்கட்கு) சொல்வாய். என வாய் நெகிழ்ந்தார் - என்று வாய்விட்டுப் புலம்பினர் என முடிக்க.

300. ஆளனத்தை நோக்கி யருள்புரிந்தா னென்முலையும்
பானல் விழித்துடிப்பும் பார்த்தானே—நானுந்

301. துளவமல ரல்லவிவன் றோளிலிட்ட மாலை
தளவமல ரென்றுசொன்னேன் சற்றே—யுளமகிழ்ந்து

302. பாராழி முற்றும் பரித்தமரு தப்பனென்ற
வோராழி மன்ன னுலாப்போந்தான்—தேராழி

கைக்கிளைக் கூற்று

303. ஒன்று லுலக முலாவருவான் மேற்கடலிற்
சென்றான் மடவாருஞ் சென்றார்கள்—நின்றேன்

304. மனது பரதவித்து மையலினாற் சோர்ந்தேன்
கனதனத்தின் மேற்பசப்புக் கண்டேன்—வினவியே

305. பாங்கியர்க ளோடிவந்து பார்த்தாரி தேதெனவே
ஏங்கியெடுத் தார்மனையி லேகினேன்—ஓங்கியபொற்

306. செப்புத் தனத்தின்முத்தஞ் சேரப் பொரியுமிந்த
வெப்புக் குபசாந்தி வேண்டுமென்றே—செப்பக்

307. குளிரி விரித்ததின்மேல் கொண்டுவந்து போட்டார்
குளிரிதில்லை யென்றெழுந்து கொண்டேன்—தெளிபனிநீர்

300—301. அந்த மின்னார் அவ்வாறு கூற நானும் துளவ மலர் மாலையல்ல இவன் தோளிற் புனைந்த மாலை தளவமலர் (முல்லைப்பூ) மாலை யென்று கூறி ஊற்றுமலை மன்னன் இருதயாலய மருதப்பபாண்டியன் என்று குறிப்பாகக் கூறினேன். என் சொல்லைக்கேட்டு மனமகிழ்ந்து உலாப் போந்தான் என்க.

306. செப்பு தனம் - செப்புப்போன்ற கொங்கை. வெப்புக்கு உபசாந்தி - வெப்பத்திற்கு மருந்து

307. குளிரி - நீர்க்குளிரி, இது நீர் படர்ந்திருக்கும் சிறிய இலைகளையுடைய ஒரு கொடி; கல்லாரம் என்றும் இதனைக் கூறுவர்.

308. தூவியமைத் தாரதுவுஞ் சூடென்றேன் பின்னுமன்னத்
தூவி யமளியின்மேற் றூக்கிவைத்தார்-யாவுமெண்ணேன்

309. குப்பால் விழுந்தேன் கொடுங்கையின்மேற் சேர்த்தொருசங்
குப்பால் கொடுத்தார்நான் கொப்புளித்தேன்-அப்படியே

310. ஆசையென்று கண்டுமரு தப்பரண சிங்கமுல்லை
வாசமலர் வாங்கி வரவேண்டி—நேசமிகு

311. மங்கையருந் தூதுசென்றார் மன்மதனே நீயும்வந்தாய்
செங்கைவளை யுந்துகிலுஞ் சென்றிடுமே—அங்கெழுந்த

312. தானைமட வார்குயிலுந் தாரைநிசி வேழமம்பு
தானைமலர் பேரி சமுத்திரமாம்—யானிருந்த

313. இக்குச் சிலைமலைபோ லெண்ணிப் படைநடத்தி
இக்குச் சிலைவளைத்தா யெய்யவந்தாய்—தக்க

314. வனங்காமுற் றங்கருந்தே னார்மலர்வெப் பாச்சே
யனங்காமுற் றங்கருந்தே னையோ—சினந்துபொரு

---

308. பனிநீர் தூவி அமைத்தார் - பனிநீரை யள்ளித் தெளித்து (பள்ளி) அமைத்தார்கள். அன்னத்தூவி - அன்னப் பறவையின் சிறகு, அமளி - படுக்கை.

309. கு பால் - பூமியின் மேல் (விழுந்தேன்) ஒரு சங்கு பால் கொடுத்தார் - ஒரு சங்கிற் பாலையூற்றிப் புகட்டினர்.

312. தானை மடவரர் - பெண்களே (உனது) சேனை; குயிலும் தாரை - குயிலே (உனது) சின்னம்; நிசிவேழம் - இரவே உனது யானை; அம்புதான் ஐமலர் - ஐந்து மலர்களே உனது கணைகள், பேரி சமுத்திரம் ஆம் - கடலே உனது முரசம் ஆகும். இவ்வாறு நீ கொண்டிருக்கின்றாய்.

313—321. மன்மதனை நோக்கி அப் பெண் அவன் செய்த கொடுமைகளைக் கூறுகின்றாள் மடக்கும் அமைந்திருக்கிறது.

313. இ குச்சு இலை - இந்தக் குச்சுவீட்டை. இக்கு சிலை - கரும்புவில்லை.

314. அனங்கா-மன்மதனே!; முன் தங்கு அரும் தேன்ஆர் மலர் என்முன் தங்கும் அருமையான தேனிறைந்த பூக்களும்; அனம்காமுற்று அங்கு அருந்தேன் - அன்னத்தை விரும்பி அங்கே உண்ணேன்.

315. மாரா விலக்கிலையோ மற்றொருவர் நின்களிறு
மாரா விலக்கிலையோ வாழ்வேனே—போராடுஞ்

316. சித்த சனவசையுந் தென்றல்குளிர்ந் தென்னுடனே
சித்த சனவசையுந் தீராதோ—இத்தனையும்

317. அங்கசன தந்திரஞ்செய் தாட்டியவுன் கூத்தலவோ
அங்கசன தந்திரமா லானேனே—இங்ஙனையே

318. காமாவா வென்றழைக்குங் கார்க்குயிலைக் கூட்டமிடுங்
காமாவா வென்றனிமை கண்டிரங்கும்—சோமனையே

319. கவ்வையிலுட் கொள்ளாமற் கக்கிவிட்ட பாம்பையுமென்
கவ்வையிலுட் கொண்டறிந்தாற் காணுமோ—இவ்வகையா

---

315. மாரா-மன்மதனே! இலக்கு இலையோ மற்றொருவர் - (என்னைத் தவிர உனக்குக்) குறியாக இல்லையோ வேறொருவரும். நின்களிறு ஆ மா ரா விலக்கில் ஐயோ வாழ்வேனே - உனது யானையாகிய பெரிய இரவை விலக்கிவிட்டால் ஐயோ நான் உயிர் வாழ்வேனே.

316. சித்தசன்-மன்மதனே. அசையும் தென்றல்-அந்த அசைகின்ற தென்றற்காற்று; என்னுடன் நேசித்த சனம் வசையும் - என்னோடு நட்புப்பூண்ட மக்கள் கூறும் பழிச் சொல்லும்

317. அங்கம் சனம் தந்திரம் செய்து - உன் படையுறுப்புக் களாகிய மக்கள் சூழ்ச்சி செய்து; அங்கசன் அதம் திரம் மால் ஆனேன் - காமனே! மிகவும் உறுதியாகிய மயக்கம் ஆயினேன்.

318. காமா வா என்று அழைக்கும் - காமனே வருக என்று கூவுகின்ற, காமா ஆ-சோலையிலுள்ள மாமரமா; மன்மதனையழைக் கும் குயிற் பறவைகளுக்கு இடமாகி அவைகளைக் கூட்டமாக வைத்திருக்கின்ற மாமரங்கள் என் தனிமையைக் கண்டு மன மிரங்குமா இரங்காது (அம்மரங்களும் எனக்குக் குளிர்ச்சியைத் தாரா என்பது கருத்து) காம மயக்கமுடையார்க்குக் குளிர்ச்சி யாகிய பொருள்கள் எல்லாம் வெப்பமாக இருக்கும் என்பது இயற்கை யாதலால் இங்ஙனம் கூறினர்.

319. சோமனை கவ்வையில் - சந்திரனை வாயாற் கவ்வும் போது. என் கவ்வையில் - என்னுடைய துன்பத்தில். உள் கொண்டு - மனத்தில் நினைத்து. இராகு என்ற பாம்பு சந்திரனை விழுங்கியிருந்தால் எனக்குத் துன்பம் மிகுதி தோன்றாது. எனக்

320. மாமுனிவா னீள்கடலை வாரியுண்ணத் தென்பொதிய
மாமுனிவா வென்றால் வருவானே—வாம

321. வுருவிலி யாகவந்தா யுன்கணையா லென்னை
யுருவிலி யாக வுடைத்தாய்—செருவிளைக்கில்

322. உன்கண் ணெதிரேயென் னுள்ளங் களிகூர
நன்கறிந்த மின்னார் நயங்கூர்ந்து—தென்குலவு

323. தென்னாட்டு ராயரண சிங்கமரு தப்பதுங்கன்
பொன்னாட்டு மார்பிற் புனைமாலை—யிந்நாட்

324. கொடுப்பவுடன் வாங்கிக் கொண்டுவந்தா லுன்னைத்
தடுப்பதுவு மிந்தத் தளவே—விடுத்துரைக்கில்

325. ஆடவர்க்கு மின்னார்க்கு மாசைவரச் செய்வதுமுன்
னாடலினா லன்றோ வளங்களே—கூடியின்பங்

326. காட்டுதமை யந்திதனைக் காட்டில்விட்டுப் போனநளன்
மீட்டு வரத்தூது விட்டாயே—நாட்டிற்

குத் துன்பத்தையுண்டாக்க நினைத்துத்தான் அப் பாம்பும் சந்திரனைக் கக்குகிறதுபோலும். அந்த நினைவுடன் இருக்கும் பாம்பை நான் அழைத்துத் தென்றற்காற்றைப் பருகிவிடு என்றால் அது செய்யுமோ? செய்யாது. என விரித்துக் கொள்க.

320. இவ்வகை ஆமா - இவ்விதம் செய்யவியலுமா. முனிவால்-வெறுப்பால் அல்லது கோபத்தினால். பொதியமாமுனி-பொதிய மலையில் இருக்கும் பெரிய முனிவன் ஆகிய அகத்தியன். (வருவானே ? வாரானே)

321 வாமம் உருவிலி ஆகவந்தாய் - அழகிய உருவத்துடன் வில்லையுடையவனாக வந்து போர் செய்தாய் (தீங்கு செய்ததால் வந்தகேடு உன் உருவும் அழிந்தது. இன்னும் தீய செயலை விடாது செய்கின்றாய் என்பது குறிப்பு) என்னை உருவு இலியா உடைத்தாய் - என்னை உருவம் இல்லாமல் மெலியும்படி வருத்தினை. இனியேனும் வருத்தாதே. முல்லைமாலை வாங்க மின்னார் பலர் சென்றனர். வாங்கிவந்தால் அம் முல்லைமாலையே உன் போரைத் தடுத்து விடும் என்றாள் (324.)

325. ஆடலில் - விளையாட்டினால் எனவும் வெற்றியால் எனவும் பொருள் கொள்க.

326. தூதுவிட்டாயே என்பது அவன் மனத்தில் ஆசையை யுண்டாக்கினை யெனக் குறிப்பா யுணர்த்தும்.

327. சனகிசிறை நீக்கினதுந் தாசரதி யென்போன்
மனதுதனி னீபுகுந்த வாறே—வினவிலுனை

328. அங்கசனுஞ் சித்தசனு மாமென்ப தார்கருத்துந்
துங்கவுட லுங்கலந்து தோன்றியன்றோ—எங்கள்துரைத்

329. தென்னன்மரு தப்பரண சிங்கமெனு மூற்றுமலை
மன்ன னெனைமருவி வாழ்வுதர—நன்னயங்கூர்

330. என்மனது மெங்கோ னிதயமுநீங் காதிருந்து
மன்மதனே வாழி மகிழ்ந்து.

---

327. மனது தனில் நீ புகுந்தவாறு சனகி சிறை நீக்கினதும் எனக் கூட்டி "மன்மதனே! நீ இராமன் மனத்திற் புகுந்து காதலை விளைத்ததால் தான் அவன் சீதையைச் சிறை நீக்கியது என விரித்துக் கொள்க.

328. அங்கசன் சித்தசன் என்ற சொற்களின் பொருள். அங்கத்திற் கலந்திருப்பவன் சித்தத்திற் கலந்திருப்பவன் என்பன. அங்கம்-உடல் சித்தம்-மனம். ஆர் கருத்தும் துங்கம் உடலும் கலந்து தோன்றியன்றோ அங்கசனும் சித்தசனும் ஆம் என்பது - யாருடைய மனத்திலும் உயர்ந்த உடம்பிலும் கலந்து பிறப்பதனாலல்லவோ அங்கசனும், சித்தசனும் உனக்குப் பெயர் களாகத் தகும் என்பது.

330. என் மனத்திலும் எனது காதலனாகிய இருதயாலய மருதப்ப பாண்டிய மன்னன் மனத்திலும் புகுந்து நீங்காமலிருந்து எம்மிருவரையும் மணம் புணர்ந்து கூடிவாழும்படி செய். நீ எம்மை விட்டு நீங்காமலிருந்தால் நாங்களும் பிரியாமற் கூடி வாழ்வோம். நீ பிரிந்தால் நாங்களும் பிரிந்து துன்புறுவோம் ஆதலால் மன்மதனே நீ வாழ்க என வாழ்த்துகின்றேன். என்று கூறிமுடித்தாள் அம்மங்கை. இறுதி வெண்பா பாட்டுடைத் தலைவனையும் அவனது கிளையையும் "ஊற்றுமலை என்ற அம் மன்னனது நாட்டையும்" வாழ்க என நூலாசிரியர் வாழ்த்தி யுள்ளார்.

எட்டயபுரம் சமத்தான வித்துவான்

கடிகை முத்துப்புலவ ரியற்றிய

மதனவித்தாரமாலை

முற்றிற்று.

வாழி திருவேங் கடநாதன் மைந்தனென்றும்
வாழி இளுவை மருதப்பன்—வாழியவன்
எந்நாளுந் தங்கிளைசூ ழின்பமெய்தி யூற்றுமலைத்
தென்னாடும் வாழி செழித்து.

கழகவழி வெளிவந்துள்ள

பிற சிற்றிலக்கிய நூல்கள்

(உரையுடன்)

திருக்குற்றாலக் குறவஞ்சி: திரிகூடராசப்பக் கவிராயர்

இது, திருக்குற்றால நகரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானாகிய திரிகூடநாதரைத் தலைவராகக்கொண்டு மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயர் அவர்களால் பாடப் பெற்றது. சொல்லழகு, பொருளழகு, கருத்தாழம் மிக்கது. ஓசையின்பமும் எளிய இனிய நடையும் வாய்ந்தது. பெரு நாவலர், திரு. பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்களும், செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளையவர் களும் இந்நூற்குப் பொழிப்புரையும் அரிய விளக்க உரை யும் எழுதியுள்ளார்கள். தமிழின்பமும் திருக்குற்றாலக் காட்சியின்பமும் காண விழைவோர் இந்நூலினைக் கற்றல் இன்றியமையாததாகும். விலை ரூ. **3 - 00**

முக்கூடற்பள்ளு:

இது பாண்டிநாட்டினில் விளங்கும் முக்கூடல்நகர்க் கண் எழுந்தருளியிருக்கின்ற அழகர் என்னும் இறைவன் மேற் பாடப்பெற்றதாகும். இது சொன்னயமும், பொருள் நயமும், ஓசையின்பமும் ஒருங்கே அமைந்த சீரிய நூல். இதன்கண் உள்ள பாடல்கள் இசைப்பாடல்களாகப் பாடற் கும், நாடகமாக நடித்தற்கும் ஏற்றவாறு அமைந்துள்ளன வாகும். இந்நூற்குச் செந்தமிழ்ஞாயிறு, வித்துவான், உயர்திரு. ந. சேதுரகுநாதன் அவர்கள் அரிய உரை எழுதி யுள்ளார்கள். தமிழின்பம் மருதத் தண்பணை வளம் நிறைந் தது. யாவரும் கற்றுப் பயன்பெறத்தக்க அரியநூல். அழகிய பதிப்பு. விலை ரூ. **3 - 50**

சந்திரவிலாசம் : மாம்பழக்கவிச்சிங்க நாவலர்

இந்நூல் வேளுக்குறிச்சி வேலப்ப ஏந்தலைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு எதுகைமோனை உவமைநயம் சிறந்ததாய்ச் சிலேடை மடக்குடன் பொருள் செறிந்ததாய் நயமுற யாக்கப்பெற்ற சீரிய நூலாகும். இந்நூலினை நுண்ணிதின் ஆய்ந்து செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளையவர்கள் தெளிவான உரையினை வகுத்துள்ளனர். அரிய கருத்துக்களை எளிதில் அறிந்து மகிழ இந்நூல் பயன்படும். **விலை ரூ. 3 - 50**

சமுத்திரவிலாசம் : கடிகை முத்துப் புலவர்

இந்நூல் எட்டயபுரம் வெங்கடேச எட்டப்ப மன்னன் மீது பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டதாகும். சொற்சுவை, பொருட்சுவை மிக்கது, இனிய ஓசை நயமுடையது, சிலேடைப்பொருளுடன் அடிமடக்குச் சொல்லணிகொண்டு திகழ்வது. இந்நூற்குச் செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளையவர்கள் சொற்பொருளும் விளக்கமும் இலக்கணக் குறிப்புகளுங் கொண்ட அரிய உரை எழுதியுள்ளார்கள். படித்தற்கு இனிய நூல். **விலை ரூ. 3 - 50**

முத்தொள்ளாயிரம் :

சேர சோழ பாண்டிய மன்னர்களின் ஆட்சிமுறை, வீரம், புகழ் முதலிய விளங்கக் காதல்துறை கலந்து பாடப்பட்டதே முத்தொள்ளாயிரம் என்னும் இந்நூல். இது படித்தற்கு இன்பமும், வீர உணர்ச்சியும், பண்டைய நாகரிகச் சிறப்பும் ஊட்டவல்லது. இதற்கு வித்துவான் திரு. ந. சேதுரகுநாதன் அவர்கள் அரியதோர் உரை இயற்றியுள்ளனர்.

விலை ரூ. 3 - 50